# தமிழரசு

ஆகஸ்ட் 2003




CII
SUNIL KANT MUNJAL
Selvi J JAYALALITHAA

# பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்

**மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**



“வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திருநாளில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கோட்டையின் கொத்தளத்திலிருந்து, வணக்கத்துக்குரிய இந்த வண்ணமிகு தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பை அளித்த தமிழக மக்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தாயகம் கோடி கோடி விடியல்களைக் கண்டிருக்கிறது. ஆனால் ஆகஸ்டு 15–ஆம் தேதி கண்ட விடியலுக்கு நிகரான ஒரு விடியலைக் கண்டதே இல்லை.

இந்தியர் அனைவருக்கும் ஒரு சேர விடியல் ஏற்பட்டது என்றால் அது ஆகஸ்டு 15–ல் ஏற்பட்ட இந்த அற்புத விடியல்தான்.

இந்த விடியலைக் கொண்டு வருவதற்காக, இருட்டுச் சிறைகளுக்குள் இன்னலுற்ற தியாகிகள் எத்தனை பேர்! அவர்கள் அனைவருக்கும் நமது இதயங்களில் பூக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்ற திருநாள்தான் இந்தச் சுதந்திரத் திருநாள்!

தங்களது வாழ்வை நினைக்காமல் தேசத்தின் வாழ்வை மட்டுமே நினைத்தவர்கள் – சொந்த நலனைப் பற்றிக் கவலைப்படாமல் தேசத்தின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டவர்கள் – இவர்களை எல்லாம் நெஞ்சம் நெகிழ நினைத்துப் பார்க்க வேண்டிய நாள்தான் இந்தச் சுதந்திரத் திருநாள்!

அந்நியரை எதிர்த்து மன்னர்கள் தொடங்கிய போர், மக்களின் போராக மாறி, ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு தெருவும் போர்க்களமான வீர வரலாறுதான் இந்திய விடுதலை வரலாறு.

அந்த வீரப் போர் தந்த வெற்றிக் கனியைச் சுவைக்கின்ற நாம், சுதந்திரச் சோலைக்கு, கண்ணீரையும் செந்நீரையும் காணிக்கையாக்கிய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் புகழாரங்கள் சூட்டினால் மட்டும் போதுமா? அத்துடன் நமது கடமை முடிந்து விடுகிறதா?



ஒவ்வொரு மழைத்துளியும் மணித்துளி மழைநீரை சேகரிப்போம்

இல்லை!

கடந்த காலத்துக்கு வீர வணக்கம் செலுத்துகிற அதே நேரத்தில் நிகழ் காலத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய பொறுப்புகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அன்று நாம் பெற்றது அரசியல் விடுதலை. இன்று பெற வேண்டியது சமூக விடுதலை! பொருளாதார விடுதலை!

அரசியல் விடுதலையைத் தொடர்ந்து சமூக பொருளாதார விடுதலைகளை நாம் நாட்டுக்குப் பெற்றுத் தரவில்லை என்றால், முன்னோர் செய்த தியாகங்களுக்கு அர்த்தம் இல்லாமல் போகும்!

விடுதலை பெற்ற இந்தியாவில் சமூக விடுதலைக்கும், பொருளாதார விடுதலைக்கும் போராட வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதைக் கணக்குப் பார்க்க வேண்டிய நாளும் இந்தத் திருநாள்தான்.

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும்; கர்நாடக அரசு காவேரியிலிருந்து மேட்டூர் அணைக்குத் தேவையான தண்ணீரைத் தொடர்ந்து விடாததாலும்; வரலாறு காணாத வறட்சியின் பிடியில் சிக்குண்டுள்ள தமிழ்நாட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வறட்சியினால் ஏற்பட்ட இந்தப் பாதிப்பை உணர்ந்த நான், சென்னை மாவட்டத்தைத் தவிர மாநிலத்தின் மற்ற 28 மாவட்டங்களையும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள ஆணையிட்டேன். 50 கோடி ரூபாய் அளவிற்கு நிலவரி, உள்ளூர் தலவரி, உள்ளூர் தலமேல்வரி ஆகியவையும் என்னால் தள்ளுபடி செய்யப்பட்டன. கூட்டுறவுக் கடன்கள் வசூலை நிறுத்தி வைத்துள்ளேன். வறட்சியை எதிர்கொள்வதற்காக துயர் துடைப்பு நிதியிலிருந்து பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகள் செய்வதற்காக இதுவரை மொத்தம் 330.16 கோடி ரூபாயை எனது அரசு விடுவித்துள்ளது. சென்ற ஆண்டு குறுவைப் பயிரை இழந்து, அதனால் வேலையின்றித் தவித்த 10 லட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக, குடும்பம் ஒன்றுக்கு 210 ரூபாய் மதிப்புள்ள பரிசுப் பைகள் வழங்குவதற்காக, மொத்தம் 21.28 கோடி ரூபாயை எனது அரசு விடுவித்தது. தொடர்ந்து வேலையின்றி அவதியுற்று, பட்டினியின் விளிம்பில் இருந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும் பொருட்டு மதிய உணவு, சுமார் 14 லட்சம் விவசாயிகளுக்குப் பொங்கல் திருநாள் முதல், நாள்தோறும் இலவசமாக அளிக்கப்பட்டது. இந்தப் பயனாளிகளின் கோரிக்கையை ஏற்று 5.2.2003 முதல், குடும்பம் ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி வீதம் சுமார் 10 லட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்க ஆணையிட்டேன்.

இவை தவிர, சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் பயிர் செய்ய போதிய மழையோ அல்லது நீரோ இன்றிப்



பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்து சுமார் 46.96 லட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் மொத்த நிவாரணத் தொகை சுமார் 324.32 கோடி ரூபாய் அளவிற்கு வழங்க உத்தரவிட்டேன் என்பதையும், அதன் மூலம் விவசாயிகளின் துன்பங்கள் குறைக்கப்பட்டன என்பதையும் மன நிறைவுடன் நினைவு கூற விரும்புகிறேன்.

நான் 2001–ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழகத்தின் நிதிநிலை அதல பாதாளத்தில் விழுந்து கிடந்தது என்பதை அனைவரும் அறிவீர்கள். முந்தைய தி.மு.க. அரசின் அலட்சியப் போக்கால் ஏற்பட்டிருந்த நிதிப் பிரச்சனைகள், அவற்றின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகள் ஆகியவற்றோடு நான் போராட வேண்டி இருந்தது. தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்கும் இலட்சியம் ஒரு பக்கம் – சிதைந்து போய்க் கிடந்த நிதிநிலை மறு பக்கம்! இந்த நிலையில், நிதிநிலையைச் சீர் செய்தால் அன்றி, ஆக்கப்பூர்வமான பணி எதையும் செய்ய இயலாது என்று நான் உணர்ந்ததால், நிதிச் சீர்திருத்தம் எனது அரசின் முன்னுரிமைப் பணியாக அமைந்தது. நிதிச் சீர்திருத்தம் குறித்து நாங்கள் எடுத்த துணிச்சல் மிக்க நடவடிக்கைகளின் காரணமாக, தமிழ்நாட்டில் வளர்ச்சி நடவடிக்கை மீண்டும் ஒரு முக்கிய நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட வேண்டியது அவசியம். இதன் பலனாக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீடு 40,000 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்




கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டிற்கான ஒதுக்கீடு 7,000 கோடி ரூபாய் என்பதும்; இது, முன் எப்போதும் கிடைத்திராத அளவுக்கு உயரிய தொகை என்பதும் நாம் பெருமைப்படத் தக்க விஷயங்களாகும். மாநிலத்தின் நிதி நிலைமைக்கு இந்த அரசு வழங்கியுள்ள வலிவுக்கும், பொலிவுக்கும் இந்த ஒதுக்கீடுகள் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும் என்பதை மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் உலக வங்கி போன்ற அமைப்புகள், தமிழகத்தின் தடங்கலற்ற உயர் அளவு வளர்ச்சியையும், திட்டங்களின் நம்பகத் தன்மையையும் கருத்தில் கொண்டு மீண்டும் கடன் வழங்க முன் வந்துள்ளன. தமிழ்நாடு மேற்கொண்டுள்ள சாலைத் துறை திட்டத்திற்கான மொத்த திட்டச் செலவு 2,160 கோடி ரூபாய் என்பதையும்; அதில் உலக வங்கி வழங்கும் கடன் அளவு 1,670 கோடி ரூபாய் என்பதையும் இங்கு நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

முந்தைய தி.மு.க. அரசின் நிதி நிருவாக சீர்கேட்டால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது அரசு கிட்டத்தட்ட திவாலான நிலையில் இருந்தது. மைய அரசின் பயன்பாடுகளுக்கு அதாவது utilities– க்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை; இங்கே பல்வேறு அரசு பணிகளைச் செய்து முடித்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை; திரும்பச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை; இந்திய சேம வங்கியிலிருந்து பெறப்பட்ட மிகைப் பற்று என பல்வேறு வகைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் பெருமளவில் இருந்தன. இதன் காரணமாக உடனடியாக வருவாய் பெருக்க நடவடிக்கைகள், செலவுகளைக் குறைக்கும் நடவடிக்கைகள் மற்றும் நிதி சீர்திருத்த நடவடிக்கைகளையும் எடுத்ததோடு மட்டுமல்லாமல்; மானியங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த நிதி இடர்ப்பாட்டில் பொதுமக்களும் பங்கேற்கக் கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். எனவேதான் மிகுந்த மன வேதனையுடன் பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியை முதல் 10 கிலோவை கிலோவுக்கு 3 ரூபாய் 50 பைசா என்ற விலைக்கே தொடர்ந்து வழங்கினாலும், அடுத்த 10 கிலோவுக்கான விலையை 6 ரூபாய் என 1.10.2002 ஆம் தேதியிலிருந்து திருத்தி நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் எங்களது அரசுக்கு ஏற்பட்டது. இது சிறிது காலத்திற்கு சகித்துக் கொள்ளப்பட வேண்டிய கசப்பு மருந்து என நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டு வந்துள்ளேன். நிதி நிலைமையில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்ட உடனேயே அரிசி விலையை மீண்டும் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என அப்பொழுதே நான் தீர்மானித்திருந்தேன். தற்போது எனது தலைமையிலான இந்த அரசு எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளினால் நிதிநிலையில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் நாம் தொடர்ந்து நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனினும் தமிழ்நாடு கடந்த ஆண்டு கடுமையான வறட்சி பாதிப்புக்கு உள்ளான நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்தாலும்கூட ஏழை, எளிய மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், இனிமேல் 20 கிலோ அரிசியையும் 3 ரூபாய் 50 பைசா என்ற விலைக்கே வழங்க நான் முடிவு செய்துள்ளேன் என்பதை இந்த சுதந்திர தினத்தின் தித்திப்புச் செய்தியாக அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விலை வருகிற செப்டம்பர் 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான் நிதி நெருக்கடியின் காரணமாக நிலமற்ற ஏழை, விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கி வந்த இலவச வேட்டி, சேலை திட்டத்தையும் கைவிட வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம். எனினும் ஏழை, எளிய மக்கள் தாங்கிக் கொள்ளும் வகையில் இந்தத் திட்டத்தை மாற்றி, மலிவு விலை வேட்டி, சேலை திட்டத்தை நான் அறிமுகப்படுத்தினேன். தற்பொழுது ஓரளவு நிதிநிலை முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில், நாம் தொடர்ந்து நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த போதிலும், ஏழை, எளிய மக்களின் நலன் கருதி இலவச வேட்டி, சேலை திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்தில் நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2004ம் ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஏற்படும் 100 கோடி ரூபாய் செலவை இந்த அரசு உளப்பூர்வமான மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



பல்வேறு துறைகளில் தமிழகம் முதலிடம்

எனது தலைமையிலான அரசு பல்வேறு துறைகளில் முதலிடம் பெற்று இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் எடுத்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமான 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவியருக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருவது தமிழ்நாடுதான்.

இந்தியாவிலேயே பெண் கமாண்டோக்களை முதன் முதல் உருவாக்கியது இந்த அரசுதான்.

இந்தியாவிலேயே தொடர்ந்து வெற்றிகரமாக இயங்கும் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை 1992–ஆம் ஆண்டு நான் தொடங்கினேன். இன்று பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில், 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருவது தமிழ்நாட்டில்தான்.

மழை நீர் சேமிப்பை மக்கள் இயக்கமாக்கி, மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குவதில் இந்தியாவுக்கே வழி காட்டும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. அதற்கான அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்ததும் தமிழக அரசுதான்.

முழு சுகாதாரத் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

HIV / எய்ட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியாவிலேயே முன்னோடியாக உள்ளது தமிழ்நாடு தான்.

தகவல் தொழில் நுட்பத் துறையில் மாநிலங்களின் சாதனைகளை வகைப்படுத்தி E - Readiness Assesscent Report 2003 என்னும் ஓர் அறிக்கையை இந்திய அரசு வெளியிட்டுள்ளது.

அதன்படி, தலைமையிடம் பெறுவோர் என்னும் முதற் பிரிவில் தமிழகம் உள்ளது என்பதை மகிழ்வுடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



Video Conferencing மூலம் முதலமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுடன் நேரடியாக அவரவர் அலுவலகத்திலிருந்து உரையாட, Network அமைத்துள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.

பத்து மாவட்டங்களில் செயல்பட்டு வரும் ராசி அதாவது, Rural Access to Services through Internet திட்டத்தின் மூலம், தகவல் தொழில் நுட்பம் மூலமாக அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம், மற்றும் வேளாண் துறை நுட்பங்கள் பற்றிய அறிவை, தமிழ் நாடு அரசு மூலை முடுக்கில் உள்ள கிராம மக்களுக்கும் வழங்கி வருகிறது. இந்தத் திட்டம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளால் தற்போது தமிழகம் எங்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் கிராமங்களில் பல்லாயிரக் கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு மின் வாரியத்தின் வரலாற்றில் மிக நன்றாகச் செயல்பட்டு, முதன் முறையாக, இந்திய அரசின் தங்கப் பதக்கங்களை அனல் மின் நிலையங்கள் பெற்றது கடந்த இரண்டு ஆண்டுகளில் தான் – இந்த ஆட்சியில்தான்.

காற்றாலை மூலம் மின் திறன் உருவாக்கத்தில் இந்தியாவிலேயே தற்போது தமிழ்நாடு தான் முதலிடம் பெற்றுள்ளது.

இவை மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு துறைகளில் தமிழகம் முதலிடத்தை எட்டி வருகிறது. இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy, CMIE மற்றும் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவை வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களே இந்த மாபெரும் உண்மைக்கு மகத்தான சாட்சிகளாக விளங்குகின்றன. இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையம், பல்வேறு மாநிலங்களில், எந்த அளவிற்கு உற்பத்தித் துறையில், அதாவது Manufacturing Sector–ல் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பான ஒரு ஆய்வறிக்கையை, சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கையின்படி, 2003 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாத நிலவரப்படி, பல்வேறு மாநிலங்களில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதில், தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறது. மேலும், கடந்த இரண்டாண்டுகளில் முதலீட்டின் வளர்ச்சி விகிதம் தமிழ்நாட்டில் தான் மிகவும் அதிகமாக உள்ளது. இது நமது உழைப்புக்கும், முயற்சிக்கும் கிடைத்த உன்னதப் பரிசு என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே கல்வி அறிவைப் புகட்டும் இயக்கத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்று மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பள்ளிகளில் சேர்க்கப்படுகின்ற குழந்தைகள் பாதியிலேயே தங்கள் படிப்பை விட்டு விட்டுப் போகாமல் தொடர்ந்து கல்வி பயில வேண்டும் என்கின்ற உணர்வையும், ஆர்வத்தையும் உருவாக்கி, ஆரம்பப் பள்ளி நிலையிலும், அதற்கடுத்த உயர் தொடக்கக் கல்வி நிலையிலும், அவர்கள் தொடர்ந்து படிக்கும் வகையில் மாணவ மாணவிகளைத் தக்க வைத்துக் கொண்டதே தமிழ்நாட்டின் இந்த முக்கிய சாதனையின் அடிப்படையாகும். பள்ளிப் படிப்பை பாதியிலேயே

நிறுத்துவோர் சதவீதம் 16–லிருந்து 13–ஆகக் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு தொழிற் கல்வி பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுக்கு உரிய அனுமதிக் கடிதங்களை Hall Tickets–ஐ கணினி மூலம் Online–ல் பெறுகின்ற புதிய நவீன முறையைச் செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு தான்.

அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணியிட மாறுதலில் ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு முறையை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு தான்.

ஊரக வளர்ச்சிக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியை முழுமையாக பயன்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது என மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் அவர்கள் அண்மையில் தெரிவித்துள்ளார்கள்.

பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என திருவனந்தபுரத்தில் உள்ள மேலாண்மை வளர்ச்சி மையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, ஏழை எளிய மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்க, விரிவான சமூகப் பாதுகாப்பு வலையை இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது. மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மேலும் மனித வள மேம்பாட்டுக் குறியீட்டைப் பொறுத்த வரையில் தேசிய சராசரி 0.571 ஆக இருக்க, தமிழகக் குறியீடு 0.657 ஆக உள்ளது. எனவே தேசிய சராசரியை விட அதிகமான அளவில் தமிழக மனித வள மேம்பாட்டுக் குறியீடு உள்ளது என்பது நாம் அனைவரும் பெருமைப்படத் தக்கச் செய்தியாகும். மேற்கொண்டும் விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியை நோக்கி நாம் முனைப்போடு முன்னேறி வருகிறோம்.

இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்னும் தகுதியினைப் பெற இருக்கின்ற தமிழகத்தை உருவாக்குகின்ற நமது இலட்சியப் பயணத்தில் இதுவரை நாம் கடந்து வந்திருக்கிற மைல் கற்கள் இவைகள்.



பிரதம மந்திரி ஊரகச் சாலைத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் நடைபெறும் சாலைப் பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட தேசியத் தரக் கண்காணிப்பாளர்கள் National Quality Monitors தமிழ்நாட்டில் சாலைப் பணிகளின் தரத்தினை ஆய்வு செய்து, சாலைகள் மிகத் தரம் வாய்ந்ததாக உள்ளன என மதிப்பிட்டுள்ளார்கள்.

பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவில் உள்ள

இவ்வாறு சாதனைகளைப் படைத்திருக்கிற இந்த அரசு மாநிலம் தழுவிய அளவில் செயல்படுத்தி வரும் சில வளர்ச்சிப் பணிகளைப் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்காக, புதிய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த, ஒரு மாணவருக்கு மாதாந்திர உணவுக் கட்டணம் 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 7 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில் 98,831 மாணவ,

மாணவியர்கள் பயன் பெறுகின்றனர். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், மற்றும் சிறுபான்மையினர் நலம் காப்பதற்கு, இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிய விடுதிகளுக்குப் பதிலாக புதிய விடுதிகள் கட்டும் பணியும், விடுதிகளில் மின் இணைப்பு பழுதுப் பார்த்தல், புதுப்பித்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் உடல் நலம் காப்பதில் தமிழக அரசு சிறந்த சாதனைகளைப் படைத்து வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 555 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதுவன்றி சிறப்புத் தேர்வின் மூலம் 350 பெண் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள், அறுவை அரங்கம், நவீன பரிசோதனை சாதனங்கள், மற்றும் ஆம்புலன்ஸ் ஊர்தி வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. 398 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டட வசதி செய்து தரப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளிலும், பிற நெடுஞ்சாலைகளிலும் விபத்து நிவாரணம் உடனடியாகத் தேவைப்படுவதால், நெடுஞ்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கு இலக்காகும் 80 பகுதிகள் கண்டறியப்பட்டு, 24 மணி நேரமும் அவற்றை சுழற்சி முறையில் கண்காணிக்க 160 நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. இக்குழுக்களுக்கு வாகனங்களின் வேகத்தைக் கண்டறியக் கூடிய ரேடார் கருவி, Radar Gun, வயர்லஸ் கருவி, வீடியோ கேமரா, மொபைல் ஃபோன், வாகன ஓட்டுநர்கள் மது அருந்தியுள்ளதை அளவீடு செய்யும் கருவி, தீயணைப்புக் கருவி, முதலுதவிப் பெட்டி ஆகிய சிறப்பு சாதனங்கள் அடங்கிய 80 ரோந்து வாகனங்கள் அதாவது 80 Highway Patrol Vehicles வழங்கப்படுகின்றன. நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதி அளித்து அவர்களின் உயிர் காப்பதற்கு, இந்த நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்கள் பேருதவியாக இருக்கும் என்பதை மன நிறைவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். Highway patrolling என்னும் இந்தச் சீரிய பணியை இந்தச் சிறப்பு மிக்க நாளில் தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகத் தரம் மிக்க சிறந்த விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் தமிழகத்தில் உருவாக்க வேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும். இந்த இலட்சியம் ஈடேறும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகை வழங்கும் "விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்" சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும், "முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கும் திட்டம்" மற்றும் "சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்" ஆகியவற்றை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்வோருக்கு, 1 கோடி ரூபாயும்; வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு, 50 லட்சம் ரூபாயும்; வெண்கலப் பதக்கம் வெல்வோருக்கு, 25 லட்சம் ரூபாயும்; பயிற்சியாளருக்கு, 15 சதவிகிதம் ஊக்கத் தொகையும்; ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்வோருக்கு, 20 லட்சம் ரூபாயும்; வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு, 15 லட்சம் ரூபாயும்; வெண்கலப் பதக்கம் வெல்வோருக்கு, 10 லட்சம் ரூபாயும்; பயிற்சியாளருக்கு, 15 சதவிகிதம் என்ற அளவில் உயரிய ஊக்கத் தொகையாக வழங்க நான் ஆணை பிறப்பித்துள்ளேன். அதன்படி காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நீளத் தாண்டுதல், பளு தூக்குதல், Table Tennis, Snooker, தொடர் ஓட்டம், ஹாக்கி ஆகியவற்றில் பதக்கங்கள் வென்று சிறப்பினைப் பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் மொத்தம் 1 கோடி ரூபாய் அளவிற்கு ஊக்கத் தொகை கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அநியாய வட்டிக்காரர்களிடம் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்ற, அவசரச் சட்டம் கொண்டு வந்து கந்து வட்டியிலிருந்து ஏழை எளிய மக்களைக் காப்பாற்றிய அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லாட்டரி சீட்டு வாங்குவதும், உழைப்பை உதாசீனப்படுத்தி குறுக்கு வழியில் பணம் தேட முயல்வதும் புரையோடி விட்ட கொடிய நோயாக தமிழ் நாட்டு மக்களை வாட்டி வந்தது. இந்தச் சமூக நோயை முற்றிலும் அழிக்க லாட்டரி சீட்டு விற்பனைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது எனது அரசு தான். இவ்வாறு சட்டம் கொண்டு வரப்பட்டதால், ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளார்கள். லாட்டரி சீட்டுகளில் கொட்டிக் குவிக்கப்பட்ட பணம், லாட்டரி சீட்டுகளில் முடக்கப்பட்ட பணம் இப்போது குடும்ப வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இதனால் தமிழ் நாட்டில் பணப் புழக்கம் அதிகம் ஏற்பட்டு, தமிழக மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரித்து, அதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது சமூகப் பொறுப்புள்ள அனைவருக்கும் மன நிறைவு அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

புதியதொரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; தமிழகத்திலுள்ள ஊரகப் பகுதிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண் தொழில்களை ஊக்குவிக்கவும், 385 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தது 1 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு.

மகளிர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும்; அதற்கு அடிப்படையாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்த இந்த அரசு 5 லட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.



எனது அரசின் "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற குறிக்கோளுக்கிணங்க, தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகின்றது.

1995–ஆம் ஆண்டிலேயே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், "அறிவியலிலும் தமிழ் அனைத்திலும் தமிழ்" என்னும் முழக்கத்தை அறிவித்து, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழ் வளர வித்திட்டேன். அதன் தொடர்பாக, கடந்த ஆண்டு சென்னையில் மாபெரும் அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கு அரசின் சார்பில் நடத்தப்பட்டது. நான்காம் தமிழாகிய அறிவியல் தமிழுக்கு இதற்கு முன் இத்தனை பெரிய கருத்தரங்கம் இதுவரை நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் எந்த ஒரு குழந்தையும், தமிழ் மொழியைக் கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாது என்னும் இலட்சியத்தோடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளின் பாடத் திட்டங்களிலும் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் 2003–2004 ஆம் கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும் 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை படிப்படியாக அறிவியல் தமிழ் (Scientific Tamil) என்னும் பாடத்தைக் கற்பிக்க ஏற்கெனவே எனது அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆனால் இந்த ஆண்டில் இருந்தே அதாவது 2003–2004 –இலேயே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் அறிவியல் தமிழ் Scientific Tamil என்னும் பாடத்தைக் கற்பிக்க நான் தற்போது ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை இந்தச் சுதந்திரத் திருநாளில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த உறுதி பூண்டுள்ள இவ்வரசு மைய அரசின் ஆட்சி மொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்கவும்; தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவும் வேண்டுமென்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்தியத் தலைநகராம் டில்லியில் உள்ள புகழ் மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்தில் கொண்டு 50 லட்சம் ரூபாய் ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக, ஒரே தவணையில், One time lumpsum grant ஆக எனது அரசு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக அளவில் தமிழ்க் கல்வியை இணைய வழி வழங்க தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தொடர்பு மையங்கள் Tamil Study Centres உலகமெங்கிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

உலகம் தற்போதுதான் தமிழகத்தை நோக்கித் திரும்பியுள்ளது எனலாம். உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களாகிய, Standard Chartered Bank, ABN Amro Bank ஆகியவை மென்பொருள் வளர்ச்சி மையங்கள் அமைக்க விரும்பும் இடமாகச் சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன.

உலக வங்கி தனது உள் அலுவலகத்தை அமைப்பதற்கு உரிய இடத்தை உலகம் எங்கும் தேடியது. அவ்வாறு பலவாறு முயன்று இந்தியாவைத் தேர்ந்தெடுத்து, இந்தியாவில் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் தன் உள் அலுவலகத்தை நிறுவியுள்ளது என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியும் பெருமிதமும் தரக் கூடிய செய்தியாகும்.

சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I என்னும் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டம் மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

குடியிருப்புகளுக்கும் விரிவுபடுத்தி அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 2005–ஆம் ஆண்டுக்குள் மின் வசதியில்லாத குக்கிராமம் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை அடைய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இந்தியாவில் 2012 –ஆம் ஆண்டுக்குள் எய்த வேண்டிய நிலையை, தமிழ்நாடு மிக முன்னதாக 2005–ஆம் ஆண்டிலேயே அடைந்துவிடும் என்பதை நான் மிக மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தூய்மையானதும் பசுமையானதுமான புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை விரிவுபடுத்தவும் ஊக்குவிக்கவும் அதனை மற்றுமொரு மக்கள் இயக்கமாக மாற்றவும் நான் விரும்புகிறேன். கிராம ஊராட்சிகளில் நடப்பு ஆண்டில் 1000 சூரிய ஒளி தெரு விளக்குகளை அமைக்கும் திட்டத்தை எனது அரசு



திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் பசியாறும் வகையில் அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதனை வெற்றிகரமாக நடத்தி வருகிறது இந்த அரசு. பள்ளிவாசல் மற்றும் தர்காகளிலும் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆலயங்கள் அறச்சாலைகளாகவும் விளங்கவும் வேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கமாகும்.

மலைப் பகுதியில் மின் வசதியில்லாத 150 தொலைதூர குக்கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் மூலம் மின் வசதி செய்து தரவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனைப் பிற மின் வசதியில்லாத

ஏற்கெனவே அறிவித்துள்ளது. இத்திட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் அமைக்கப்படும் புதிய தெரு விளக்குகளுக்குப் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்த நேரத்தில், கிராமப்புறங்களிலுள்ள வீடுகளில் சாண எரிவாயுக் கலன்கள், பிற வாயுக் கலன்களை அமைத்தும்; விவசாயப் பெருமக்கள் சூரிய சக்தி பம்புகளை விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தியும்; தொழிற்சாலைகள், தாவர எரிவாயு கலன்கள், சூரிய வெப்பக் காற்று மற்றும் சுடுநீர்க் கலன்களை அமைத்தும்; மின்சாரத்தைச் சேமித்துப் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்திக்

கொள்ள முன் வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

''மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டும்'' என்று

கவிஞர்கள் பாடிய நாட்டில் பெண்களின் உரிமை வெறும் பேச்சாக இருந்தது. அந்த நிலையை மாற்றியது எனது அரசுதான்!

இந்திய நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழகத்தில் தான், அதுவும் எனது தலைமையில் அமைந்த அரசு தான், குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் போது, தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை Initial – ஆக பயன்படுத்தலாம் என்று அறிவித்தது. 1994–ஆம் ஆண்டிலேயே நான் இதற்கான ஆணையை வெளியிட்டேன். அண்மையில் மேலும் திருத்தங்களைச் செய்து புதிய அரசாணை ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். அந்த ஆணைப்படி, குழந்தையின் பெயருக்கு முன் தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும்; அல்லது தாயின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும்; அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக Initial–ஆகப் பயன்படுத்தலாம்.

இந்த தலைப்பெழுத்துப் புரட்சியோடு இன்னொரு பெயர்ப் புரட்சியையும் எனது அரசு செய்துள்ளது. "Citizen" என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ''குடிமகன்'' என்ற தமிழ்ச் சொல்லே காலம் காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளது. அதற்கு மாறாக, பெண்களைக் குறிப்பிடும் இடங்களில் "Citizen" என்பதற்கு ''குடிமகள்'' என்னும் சொல்லை வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளேன்.

எந்தத் துறையிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பணியாற்ற முடியும் என்பதிலும்; உச்சபட்சப் பதவிகளிலும் பெண்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்பதிலும்; நான் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறேன். அந்த நம்பிக்கையை நிரூபிக்கும் வகையில் உயரிய பதவிகளில் பெண்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகவும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் தலைவராகவும், தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் தலைவராகவும் முதன் முதல் பெண்களை நியமித்ததும் இந்த அரசு தான்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயற் பணியில் மகளிரை முதன் முதலாகப் பணியில் அமர்த்தியுள்ளேன். அண்மையில் இந்தத் துறையில் கோட்ட அலுவலர்களாக இரு பெண்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்வோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பெண்களின் உரிமைகளைக் காப்பதற்கும் அவர்களின் துயரங்களைப் போக்குவதற்கும், முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும். தமிழக அரசு பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்க பல்வேறு சமூகச் சட்டங்களை இயற்றி உள்ளது. இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தவும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கவும் மகளிர் நீதிமன்றங்களை ஏற்படுத்த நான் முடிவு செய்தேன். சமூகத்தில், பாதிக்கப்படும் பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்; அதுவும் விரைந்து கிடைக்க வேண்டும் என்பதற்காக சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் இரண்டு மகளிர் நீதிமன்றங்களை சென்ற ஆண்டு நான் ஏற்படுத்தினேன். தற்போது இதனை விரிவுபடுத்தி மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய நான்கு இடங்களில் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்க நான் உத்திரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆக இனி தமிழ்நாட்டில் மொத்தம் 6 மகளிர் நீதி மன்றங்கள் செயல்படும்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும் தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 லட்சத்து 36 ஆயிரத்து 832 குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களில் மொத்தம் 23 லட்சத்து 27 ஆயிரத்து 751 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து, தற்போது 332.05 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது; வளர்ந்துள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் பற்றி இந்திய அளவில் மட்டுமின்றி சர்வதேச அளவில் தெரிந்து கொண்டு, அவர்கள் வசிக்கும் பகுதியில் இருந்தபடியே இந்த உற்பத்திப் பொருட்களை வாங்குவதற்கு வகை செய்யும் புதிய இணைய தளத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

பெண்மையை, குறிப்பாக வீரப் பெண்மையைப் போற்றுவதில் இந்த அரசு எவரை விடவும் முன் நிற்கிறது.

**1.2.2003** அன்று விண்வெளியில் ஏற்பட்ட விபரீத விபத்தில் மரணம் அடைந்த இந்தியாவைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவின் பெயரில், 'துணிச்சல் மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது' என்னும் விருதை ஏற்படுத்தி, ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் விழாவின் போது துணிவு மிக்க சாகசச் செயல் புரியும் வீரப் பெண்மணிக்கு இந்த விருதை வழங்குவேன் என்று நான் அறிவித்தேன்.

அதன்படி, இன்று, செல்வி. ரேஷ்மா ஷர்மா அவர்களுக்கு 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், தங்கப் பதக்கமும் கொண்ட இந்த விருதை வழங்க உள்ளேன்.

வீராங்கனை கல்பனா சாவ்லா விண்வெளியில் சாம்பல் ஆனாலும் அவருடைய வீரக் கனவுகள் சாம்பல் ஆகக் கூடாது என்பதற்காகவே, இந்த விருதை நான்

ஏற்படுத்தி, முதன்முதலாக செல்வி. ரேஷ்மா ஷர்மா அவர்களுக்கு வழங்க உள்ளேன்.

இது நம் நாடு ! நமக்கு உரிய நாடு !

இது நமது நாடு என்பதால் நாம் நினைத்தபடி எல்லாம் வாழ்ந்து விட முடியாது.

சுதந்திரம் என்னும் சொல்லுக்கு நம்மை நாமே ஆள்வது என்பது பொருள். எனவே கட்டுப்பாடும் ஒழுங்கும் கட்டாயம் தேவை.

இந்த ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் குலைக்க, சில பொழுது போகாத அரசியல்வாதிகள் முயல்வார்கள். அவர்களது சூழ்ச்சிக்கு நாம் இரையாகி விடக் கூடாது. கானல் நீரைக் காட்டி இதோ பார் கங்கை நீர் வாருங்கள் பருகுவோம் என்பார்கள். அந்த வாய்ச் சொல் வீரர்களின் வஞ்சகப் பேச்சை நம்பிய அப்பாவி மான்கள் ஓடும்; ஓடி நீரைத் தேடும்; தேடி நெஞ்சம் வாடும்.

நம்பி வந்தவர்களை நடுவிலே விட்டு விட்டு, அந்த வாய்ஜால பேர்வழிகள்,

வந்த வழி போய் விடுவார்கள். இது அவர்களுக்கு வாடிக்கை.

இப்படிப்பட்டவர்களை பாரதி அன்றைக்கே அடையாளம் காட்டினார்.

நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி !

என்பது வாய்ச்சொல் வீரர்களைப் பற்றிய பாரதியின் படப்பிடிப்பு.

தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும் இந்தக் கொடி மரத்தின் கீழ் நான் நின்று கொண்டிருக்கிறேன். இந்தக் கொடிக் கம்பம் கோட்டையில் இருக்கிறது. கோயிலிலும் கொடிக் கம்பம் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு வகையில் பார்த்தால் தலைமைச் செயலகம் கூட ஒரு திருக்கோயில் தான். தலைமைச் செயலகம் ஒரு திருக்கோயில் என்றால், இங்கே குடிகொண்டிருக்கும் தெய்வம் எது? இங்கே வழிபாடு உண்டா? யாருக்கு?

தலைமைச் செயலகம் ஒரு திருக்கோயில்! இங்கு கண்ணுக்குத் தென்படாத தெய்வம் இருக்கிறது. யார் அந்தத் தெய்வம்? 'பொதுமக்கள்' தான் அந்தத் தெய்வம்! அந்தத் தெய்வத்துக்கு வழிபாடு செய்ய வந்திருப்பவர்கள்தான் நாம் எல்லோரும்! நம்முடைய கடமையைச் செய்வதே நாம் அந்தத் தெய்வத்துக்குச் செய்கின்ற வழிபாடு!

கடைநிலை ஊழியர் முதல் முதலமைச்சர் வரை எல்லோரும், 'பொது மக்கள்' என்னும் தெய்வத்துக்குப் பணிபுரிய வந்தவர்கள் என்பது தான் உங்கள் அன்புக்குரிய சகோதரியாகிய எனது கருத்து! எனது கருத்து மட்டும் அல்ல; அசைக்க முடியாத நம்பிக்கை! நான் எடுக்கும் எந்த முடிவும் அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகிறது என்பதை இந்த மகத்தான வேளையில் அனைவர்க்கும் தெளிவாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

நம்மை வாழ வைக்கும் தெய்வங்களாகிய பொது மக்களுக்கு, நமது கடமை என்னும் வழிபாட்டை, முறையாக ஆற்றத் தவறினால், 'தெய்வம் நின்று கொல்லும்' என்னும் முதுமொழி நிஜமாகி விடும்.

தலைமைச் செயலகத்தை ஒரு திருக்கோயில் என்று கருத வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க; நாம் எங்கே பணியாற்றுகிறோமோ, அந்த இடமே நமது கோயில் அல்லவா! இந்த அடிப்படை உண்மையையே மறந்து விட்டால் ... கோயில் கோயிலாக இருக்குமா? நாம் நாமாக இருக்க முடியுமா? மற்றவர்கள் தான் நம்மை மதிப்பார்களா?

மக்கள்பணிக்காகத்தான் அலுவலகங்கள்! மக்கள் பணிக்காகத் தான் அலுவலர்கள்! மக்கள் பணிக்காகத் தான் நாம் எல்லோரும்!

இந்தச் செய்தியை உங்கள் வழியாக அனைவருடனும் பகிர்ந்து கொள்கின்ற அருமைத் திருநாள் தான் இந்தச் சுதந்திரத் திருநாள்!

மக்கள் பணியாம் திருப்பணிக்கு, மனம், மொழி, செயல் என்னும் மூன்றாலும் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்! அதற்கான உறுதிமொழியை இன்று எடுத்துக் கொள்வோம்!

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்!

முன்னோர் கண்ட கனவை நனவாக்குவோம்!

மக்கள் பணி செய்ய மகிழ்ச்சியோடு முன் நிற்போம்!

மகத்தான தமிழகத்தை உருவாக்குவோம்!

என்னும் முழக்கங்களோடு, உங்கள் அனைவருக்கும், தமிழக மக்கள் அனைவருக்கும், இந்திய மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில்
15–8–2003 அன்று சுதந்திரத் திருநாள்
விழாவையொட்டி தேசியக் கொடியினை
ஏற்றிவைத்து ஆற்றிய உரை.




# உரிமையைக் கேட்கும்போது கடமையை மறக்கக்கூடாது

16.7.2003 அன்று
நாமக்கல் மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை

**கொ**ங்கு நாட்டின் ஒரு பகுதியாகத் திகழும் நாமக்கல் மாவட்ட நிருவாகத்தின் சார்பாக நாமக்கல்லில் இன்று நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைக் கண்டு அரசின் சார்பில், 385 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள், மற்றும் கட்டடங்களைத் திறந்து வைத்துப் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஏழை எளிய மக்களுக்கு, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி, உங்கள் முன் உரையாற்றுகின்ற இந்த இனிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

### கொல்லிமலைத்தேனும் கொங்குத்தமிழும்

ஓர் ஊரின் பெயரைக் கேட்டவுடனே அந்த ஊரின் சிறப்புகள், நம் மனக்கண் முன் காட்சிகளாக விரியும். நாமக்கல் என்றதும் ஓங்கி உயர்ந்த குன்றும் நினைவுக்கு வரும்! அதன் உச்சியில் சூட்டப்பட்ட மகுடமாக விளங்கிக் கொண்டிருக்கும் கோட்டை நினைவுக்கு வரும்! குகைக் கோயில் நினைவுக்கு வரும்! அந்தக் கோயிலுக்கு முன், விஸ்வரூபம் எடுத்து நிற்கும், ஆஞ்சநேயர் நினைவுக்கு வருவார் ! இனிய தமிழ் நாட்டுக்கு மட்டுமல்லாமல், இந்தியாவின் பல மாநிலங்களுக்கும், ஏன் உலக நாடுகளுக்கே, ஊட்டச்சத்து அளிக்கும் நாமக்கல் முட்டை நினைவுக்கு வரும் ! எல்லாவற்றுக்கும் மேலாக உழைப்புக்கு அஞ்சாத ஒப்பற்ற மக்களாகிய உங்களுடைய அன்பு முகங்கள் நினைவுக்கு வரும்!

கொல்லிமலையும், கொல்லிமலைத் தேனும் புகழ் பெற்றவை. கொல்லிமலைத் தேன் மட்டுமல்ல, கொங்குத் தமிழும் புகழ் பெற்றது!

கொங்குத் தமிழ் இனிதா ?

கொல்லிமலைத் தேன் இனிதா என்றால் –

என்ன பதில் சொல்லுவது ?

கடினமான கேள்வி தான் ! ஆனாலும் விடை காண வேண்டும் அல்லவா ?

தேனும் சிறந்தது, தமிழும் சிறந்தது என்று சொல்லி விட்டால், ஒரு சிக்கலும் இல்லை !

ஆனால், இரண்டுக்கும் இடையே ஒரு பெரும் வேறுபாடு இருக்கிறது !

உண்டால்தான் வலுவூட்டும் மலைத் தேன் !

நெஞ்சில் நினைத்தாலே வலுவூட்டும் தமிழ்த் தேன் !

ஆதலால், கொல்லிமலைத் தேனை விட கொங்குத் தமிழ் இனிது என்று கூறத்தான் வேண்டும். இதனால் கொல்லி மலை கோபித்துக் கொள்ளாது என்று எனக்குத் தெரியும்.

காரணம், அந்த அளவுக்கு சங்க காலம் முதல், கொல்லிமலையைச் செந்தமிழ் சிறப்பித்துக் கவிதை பாடியிருக்கிறது! செந்தமிழ்க் கவிஞர்கள் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்!

**மண்ணுக்கு மரியாதை**

கொல்லிமலை பிணிபோக்கும் மூலிகைகள் பலவற்றின் பிறப்பிடமாய் இன்றும் விளங்குகிறது.

13–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அறப்பளீசுரர் ஆலயமும், சுமார் 130 அடி உயரமுள்ள ஆகாச கங்கை அருவியும், கொல்லிமலையின் பெருமைக்குக் கிடைத்த கூடுதல் சிறப்புகளாகும்.

18 அடி உயரத்தில் எத்தனையோ காலமாய் நின்று கொண்டிருக்கும் அனுமந்தராயன், அருள் பாலிக்கின்ற புண்ணிய பூமி இந்த நாமக்கல் !

நான் மாவட்ட அரசு விழாக்களில் பேசும் போதெல்லாம் அந்தந்த மண்ணின் சிறப்பைச் சொல்லாமல் இருந்ததே இல்லை.

என்ன காரணம்? அது, நாம் நின்று கொண்டிருக்கிற மண்ணுக்குச் செலுத்துகின்ற மரியாதை, என்பதே காரணம் !

**ஜவஹர்லால் நேருவின் வியப்பு**

ஆனால், வரலாற்றுச் செய்திகளை என் உரையில் நான் வழங்குவதைக் கூட தாங்க இயலாத வக்கிர புத்திப் பத்திரிகை ஒன்று, வக்கணையாக இதைப் பற்றி எழுதியிருக்கிறது.

காவிரிப் பிரச்சனையில், பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்வதையே பிழைப்பாகக் கொண்டவர் களுக்கும், அவர்களது அநியாயங்களுக்கு ஆல வட்டம் வீசிக்கொண்டிருக்கும் அஞ்ஞானக் களஞ்சியங்களுக்கும் மண்ணின் பெருமை எங்கே புரியப் போகிறது ?

எந்தெந்த வகைகளில் எல்லாம் என்னைப் பற்றி இவர்களுக்கு ஆத்திரம் வருகிறது என்பதை நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது.

இவர்களின் அறியாமைக்கு, நான் அனுதாபப் படுகிறேன்.

மாவட்ட விழா என்பது அரசு விழா மட்டுமல்ல – நாம் பிறந்த பூமியைப் பற்றி நினைத்துப் பார்க்க நமக்கு ஒரு வாய்ப்பு – அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

ஒரு சின்ன உதாரணம் சொல்லுகிறேன்.

வில் வித்தையில் சிறந்தவன் என்று சொன்னவுடன் ஸ்விஸ் (Swiss) நாட்டைச் சேர்ந்த வில்லியம் டெல் (William tell) நினைவுக்கு வருவான்!

"வில்லுக்கு விஜயன்" என்று பாராட்டப்படுகின்ற அர்ஜுனன் நினைவுக்கு வருவான்!

ஆனால் வில் வீரனாகிய கொல்லி மலையை ஆண்ட வல்வில் ஓரியை, எத்தனை பேருக்குத் தெரியும்? ஓரி வில் வீரன் மட்டுமா? கடை ஏழு வள்ளல்களில் ஒருவனும் அவன் அல்லவா!

அந்த மகத்தான வீரனை மாபெரும் வள்ளலை, இன்று நினைத்துப் பார்க்க வேண்டாமா?

நாமக்கல் பற்றிய, இன்னும் ஒரு சிறப்புச் செய்தி: ஒரே கல்லில் ஒரு மலை அமைந்திருப்பது என்ற சிறப்புக்கு உரியது 'நாமக்கல்' மட்டும் தான். இந்த உண்மையை, ஜவஹர்லால் நேரு அவர்களே வியந்து பாராட்டியிருக்கிறார் என்றால் அது பெருமைக்குரிய செய்திதானே?

**மக்களுக்குப் பாராட்டு**

நாமக்கல்லுக்கு 'முட்டை நகரம்' என்னும் காரணப் பெயரும் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 1¼ கோடி முட்டைகளை ஏற்றுமதி செய்யும் ஒரே நகரம் என்னும் சிறப்பு, நாமக்கல்லுக்குத் தானே கிடைத்திருக்கிறது?

இந்த நேரத்தில் நாமக்கல் மாவட்ட மக்களின் உழைப்பாற்றலைப் பற்றி, ஒரு வார்த்தை சொல்லியாக வேண்டும். இது நீர்வளம் மிக்க பூமியல்ல. எனவே, விவசாய வருமானம் போதாது. அதற்காகச் சும்மா இருந்து விடாமல் கோழி வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்கி தங்கள் உழைப்பாற்றலால் முட்டை உற்பத்தியில் ஒரு சாதனையை உருவாக்கிய பெருமை நாமக்கல் மக்களாகிய உங்களையே சாரும்! அதற்காக இந்த மாபெரும் விழாவில் என் மனமார்ந்த பாராட்டுகளை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

லாரி பாடி கட்டும் தொழிலில், 237 பட்டறைகள் இயங்கிக் கொண்டிருப்பதும் –இந்தியாவிலேயே மிக அதிகமாக நாமக்கல் மாவட்டத்தில் தான் 3,027 ஆழ்த் துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் (Rigging Machines) உள்ளன என்பதும் – தொழில் திறனிலும் நாமக்கல் மாவட்ட மக்கள் சிறந்து விளங்குவதற்கு எடுத்துக் காட்டுகளாய் விளங்குகின்றன.

இப்படி உழைப்பிற் சிறந்த மக்களாகிய உங்களைக்



காண உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வெறுங்கையோடு வரவில்லை. மொத்தம் 385 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கவே நான் இன்று நாமக்கல் வந்திருக்கிறேன்.

### துணை மின் நிலையங்கள் திறப்பு

சீர்மிகு இவ்விழாவில் இன்றைய தினம் நாமக்கல் மாவட்ட மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மொத்தம் 52 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 1748 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், பரமத்தி வேலூர் தாலுகா பொத்தனூரில் 110/11 கே.வி. துணை மின் நிலையத்தையும், எஸ். வாழவந்தி கிராமத்தில், 110/22 கே.வி. துணை மின் நிலையத்தையும் நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன்.

பொதுப்பணித் துறையின் மூலம் 3 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் – நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள் – மாவட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடம் – மாவட்ட வருவாய் அலுவலர் முகாம் அலுவலகம் – திருச்செங்கோடு கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் – 13 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள், மற்றும் குடியிருப்பு கட்டடங்களை இந்த விழாவில் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

### குடிநீர் திட்டப் பணிகள் திறப்பு

அதிக வறட்சி நிலவுகின்ற நாமக்கல் மாவட்டத்தில் மக்களுடைய குடிநீர்த் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்வதை எனது தலையாய கடமையாக நான் கருதுகின்றேன். அந்த வகையில் நாமக்கல் மாவட்டத்தில், 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில், 659 சிறு மின் விசைத் திட்டங்களும் – பொன் விழா குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருச்செங்கோடு நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டமும், 1 இலட்சத்து 25 ஆயிரம் மக்கள், பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பட்ட 660 குடிநீர்த் திட்டப் பணிகளை இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

இந்த மாவட்டத்தில் கிராமப்புற வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் – மகளிருக்கான சுகாதார வளாகங்கள் – கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் – தார்ச் சாலைகள் – சிமெண்ட் சாலைகள் உள்ளிட்ட 383 கட்டுமானப் பணிகளை இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவ மாணவியர்கள் நலன் கருதி, பள்ளிக் கல்வித் துறையின் சார்பில்,1 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள வட்டார வள மையக் கட்டடங்கள் – தொகுப்பு வள மையக் கட்டடங்கள் –

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் – பள்ளிகளுக்கு குடிநீர் வசதி, மற்றும் கழிப்பிட வசதி செய்தல் உள்ளிட்ட 120 கட்டுமானப் பணிகளை இந்த இனிய விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன்.

நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் 4 சாலை மேம்பாடு மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, சாலைகள் எந்த அளவிற்கு முக்கியமானவைகள் என்பதை உணர்ந்துள்ளது எங்களது அரசு. உலக வங்கி, தமிழ்நாட்டின் சாலை மேம்பாடு திட்டத்திற்காக 2 ஆயிரத்து 160 கோடி ரூபாய் ஒப்பளித்துள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### சுகாதார வளாகங்கள்

பேரூராட்சி நிருவாகம் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 44 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான 17 ஒருங்கிணைந்த நகர்ப்புற சுகாதார வளாகங்கள் – நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 14 பணிகள் – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனத்துறை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் காவல்துறை ஆகியவற்றின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே -33 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 523 பணிகளை இந்த இனிய விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன். இவ்வாறு, முடிவு பெற்ற பணிகளைத் திறந்து வைத்ததோடு புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உள்ளேன்.

இந்த நேரத்தில், ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர விரும்புகிறேன்.

### குற்றம் காண்பவர்களை வென்ற விஞ்ஞானம்

அமெரிக்க நாட்டில் ஹட்சன் (Hudson) ஆற்றின் கரையில் ஒரு நாள் ஒரு பெரும் கூட்டம் கூடியிருந்தது. முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட நீராவிப் படகு அன்று அந்த நதியிலே வெள்ளோட்டம் விடப்படத் தயாராக இருந்தது.

அந்த நீராவிப் படகு எப்படி இயங்குகிறது என்பதை அதைத் தயாரித்த விஞ்ஞானி ராபர்ட் ஃபூல்டன் (Robert Fulton) கூடியிருந்தவர்களுக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது, ஒரு சிலர் அவரைக் கேலி செய்து கொண்டிருந்தார்கள். அவரது கண்டுபிடிப்பை எள்ளி நகையாடிக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாக் காலத்திலும் உண்டு. நல்ல செயல் எது நடந்தாலும் அதை ஏளனம் செய்வதற்கும் அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கும் எப்போதும் அவர்கள் ஆயத்தமாக இருப்பார்கள்.

**இதே முறையில், 1,000 தனி நபர் வீடுகளில் உள்ள கழிவறைகளை தற்போது மாட்டுச் சாணத்தால் இயக்கப்படும் சாண எரிவாயுக் கலன்களோடு இணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் எரிவாயு உற்பத்தி செய்யப்படும். இது சமையலுக்கு எரி பொருளாக சுகாதாரமான முறையில் பயன்படுத்தப்படும்.**

ஹட்சன் (Hudson) ஆற்றில் முதல் நீராவிப் படகு புறப்படுவதற்குத் தயாராக இருந்தது. சுற்றி நின்ற சந்தேகப் பிராணிகள், பிற்போக்குவாதிகள் "அந்தப் படகு புறப்படாது; புறப்படவே முடியாது" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஆனால், அந்த நீராவிப் படகு அசைந்தது, நகர்ந்தது, அழகாக ஆற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது.

அப்போதாவது அவர்கள் வாயை மூடிக் கொண்டு இருந்தார்களா ? இல்லை ! "அந்தப் படகு நிற்கவே நிற்காது, அதை நிறுத்த முடியாது, அது எதன் மீதாவது மோதி தண்ணீரில் மூழ்க்கத்தான் போகிறது" என்று சாபம் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால், அவர்களது தடையை எல்லாம் மீறி நிற்க வேண்டிய இடத்தில் கம்பீரமாகச் சென்று நின்றது அந்த நீராவிப் படகு!

மனித குல வரலாற்றில் இன்னும் ஒரு மைல் கல் எட்டப்பட்டது! அறிவியலின் மகுடத்தில் இன்னும் ஒரு வைரக்கல் பதிக்கப்பட்டது! குறை கூறுபவர்களையும், குற்றம் காண்பவர்களையும் வெற்றி கொண்டுவிட்டது அந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பு !

அந்த வஞ்சகர்கள் வாய்மூடிப் போனார்கள். இப்படிப்பட்ட சந்தேகப் பிராணிகள், இப்படிப்பட்ட பிற்போக்குவாதிகள், இப்படிப்பட்ட முட்டுக்கட்டைகள் இன்றைக்கும் உண்டு. நான் எந்த மக்கள் நலத் திட்டத்தைத் தொடங்கினாலும் எந்த முற்போக்கு நடவடிக்கை எடுத்தாலும்,"அது நடக்காது! நடக்க சாத்தியம் இல்லை!" என்று கூறிக்கொண்டு இருப்பதே, இவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது.

இதில் என்ன வேடிக்கை என்றால், இவர்களில் சிலர் பகுத்தறிவு சிங்கங்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள்! பகுத்தறிவு பேசிக் கொண்டு, அதே நேரத்தில், என்னைப்பற்றி ஜோசியம் சொல்லிக் கொண்டு இருப்பவர்கள்! அதுவும் தவறாக ஜோசியம் சொல்லுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள்! இவர்களுக்கு மத்தியில் தான் உங்கள் அன்புச்



சகோதரியின் அரசு, மக்கள் நலப் பணிகளில் தன்னை முற்றுமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது; முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போட்டு வருகிறது என்பதை என் அன்புக்குரிய உங்களிடம் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிநீருக்கு முன்னுரிமை

நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை மக்கள் அதிக அளவில் பெறவேண்டும் என்பதற்காக இன்றைய தினம் இந்த இனிய விழாவிலே, 325 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 1763 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மன நிறைவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. நாமக்கல் மாவட்டத்தில் பட்டணம், சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, ஆர்.புதுப்பட்டி, சேந்தமங்கலம், மற்றும் காளப்ப நாயக்கன்பட்டி ஆகிய பேரூராட்சிகளுக்கும் – 1399 ஊரகக் குடியிருப்புகளுக்கும் – ஒருவந்தூர், ஜேடர்பாளையம் ஆகிய இரு இடங்களில் காவிரி ஆற்றில் இருந்து, சுமார் 6 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கும் வகையில் 126 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புளோரைடு (Fluoride) கலந்த, உப்புக் கரிக்கும் நீரைப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகி பல்லாண்டு காலமாகத் தங்கள் குடிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு பெற முடியாத மக்களுக்கு உங்கள் அன்புச் சகோதரி வழங்கும் இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன்.

மேலும், 4 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் 700 சிறு மின் விசைப் பம்புகள் அமைக்கவும் இன்று அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

## ரூ.150 கோடியில் மின் ஆக்கிகள்

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில், புதன் சந்தையில், 26 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், 230/110 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் – காவிரி ஆற்றின் குறுக்கே சோழசிராமணியில், 21 கதவணைகள் கொண்ட தடுப்பு ஏற்படுத்தி மொத்தம் 150 கோடி ரூபாய் மதிப்பில், 7.5 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட மின் ஆக்கிகள், ஆகியவற்றை அமைத்திட நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன், இதன் வாயிலாக, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் மின் நுகர்வோர்கள், தடையில்லா மின்சாரம் பெறுவார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் கீழ், வறட்சி நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையில் வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கில் 4 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் 580 பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டி உள்ளேன் என்பதை மிக்க மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் கீழ், கட்டடப் பிரிவின் சார்பில், 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில், பல்வேறு துறைகளுக்கான 24 கட்டடங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவ மாணவியர்கள் நலன் கருதி, கல்வித் துறையின் கீழ், 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வட்டார வள மையக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், பள்ளிகளில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் போன்ற 355 பணிகளுக்கான அடிக்கற்களையும், இந்த விழாவிலே நாட்டியுள்ளேன்.

இவை மட்டுமன்றி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், நகராட்சி நிருவாகம், பேரூராட்சி நிருவாகம், காவல்துறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றின் சார்பில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 101 பணிகளுக்கும் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மிக்க மன நிறைவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக மொத்தம், 325 கோடியே 21 இலட்சம் ரூபாய் அளவிற்கு இன்றைய தினம் மொத்தம் 1763 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. அனைத்துப்பணிகளையும் விரைந்து முடிக்க அனைத்துத்துறை அலுவலர்களுக்கும், நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும், அவை முடிந்த பிறகு, நானே இங்கே மீண்டும் வந்து முடிந்த பணிகளைத் திறந்து வைப்பேன் என்பதையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சில புதிய திட்டங்களை, இன்று முதன் முதலாக நாமக்கல்லில் தான் தொடங்கி வைத்துள்ளேன்.

**மின்கட்டணத்தைக் குறைக்க கரிமவாயுக்கலன்**

உங்கள் அன்புச்சகோதரியின் ஆலோசனைப்படி, மகளிரின் பயன்பாட்டுக்காக, அனைத்து கிராம ஊராட்சிகளிலும், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த சுகாதார வளாகங்கள், பயன்படுத்துவோர் குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த வளாகங்களின் மின் கட்டணச் செலவைக் குறைக்கும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் சுகாதார வளாகங்களில் மனிதக் கழிவுகளின் மூலம் செயல்படும் கரிம வாயுக் கலங்களை அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்தக் கலங்களின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் சுகாதார வளாகத்தில் உள்ள மின் விளக்குகள் மற்றும் மின் மோட்டார்களை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படும். இதனால், மின் கட்டணச் செலவு, கணிசமாகக் குறையும். மேலும், இந்த வளாகங்களில் உள்ள, செரிமானத் தொட்டியில் உள்ள மனிதக் கழிவுகள், செறிவூட்டப் பட்ட உரமாகவும், விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமையும்.

இதே முறையில், 1,000 தனி நபர் வீடுகளில் உள்ள கழிவறைகளை தற்போது மாட்டுச் சாணத்தால் இயக்கப்படும் சாண எரிவாயுக் கலன்களோடு இணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் எரிவாயு உற்பத்தி செய்யப்படும். இது சமையலுக்கு எரி பொருளாக சுகாதாரமான முறையில் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்திற்காக, முழு சுகாதாரத் திட்டத்தில் கிடைக்கும் மானியத் தொகை, சாண எரிவாயுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மானியத் தொகை, மற்றும் சாண எரி வாயுத் திட்டத்தை, தனி நபர் கழிப்பறைத் திட்டத்தில் இணைப்பதால் கிடைக்கும் மானியத் தொகை ஆக மூன்று வித மானியங்களைப் பொது மக்கள் பெற்றிடவும், வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

**சூரிய ஒளியில் தெரு விளக்குகள்**

கிராம ஊராட்சிகளில் உள்ள தெரு விளக்குகள், மற்றும் பிற உபயோகங்களுக்கான மின் கட்டணம், ஆண்டுக்கு 325 கோடி ரூபாய் ஆகிறது. இந்த மின் கட்டணத் தொகையை தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் செலுத்துவதற்கு, கிராம ஊராட்சிகள் சிரமப்படுகின்றன. எனவே, கிராம ஊராட்சிகளில் முதல் முறையாக மரபு சாரா எரி சக்தியால், அதாவது, சூரிய ஒளியால் இயங்கும் 1000 தெரு விளக்குகளை அமைக்கும் திட்டத்தை, நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன். இதனால், கிராம ஊராட்சிகள் செலுத்தும் மின் கட்டணத் தொகை கணிசமாகக் குறையும். மேலும், மின் நுகர்வும் குறையும். இந்தத் திட்டமும் இன்று, நாமக்கல்லில், என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னால் தொடங்கப்பட்ட, மகளிருக்கான ஒருங்கிணைந்த ஊரக சுகாதார வளாகங்கள் கட்டும் திட்டம் மாநிலத்தில் சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு வித்திட்டுள்ளது. மகளிருக்கான இந்த மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடர்ந்து நான் சமுதாய மேம்பாட்டிற்காக, சுகாதார கிராம இயக்கத்தை அறிவித்துள்ளேன். இதை நன்றாக கவனிக்க வேண்டும்.

**சிறந்த கிராமங்களுக்கு ரூ.5 இலட்சம் பரிசு**

இத்திட்டத்தின் கீழ் முழு சுகாதாரம் பெற்றுத் திகழும் சிறந்த கிராமங்களுக்கு, 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கவும், இதற்காக 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பிளாஸ்டிக் கழிவுகள் மண்ணில் கலந்து மக்காமல் சுற்றுச் சூழல் கெடுவதைத் தவிர்த்திடவும், மறு சுழற்சி மூலம் உபயோகம் உள்ளதாக அவற்றை மாற்றவும் நான் புதிய திட்டம் ஒன்றினை இன்று இங்கு நாமக்கல்லில் தொடங்கி வைத்துள்ளேன்.

சோதனை முறையில் 1,000 கி.மீ. அளவுக்கு பிளாஸ்டிக் கழிவுக் கலவையுடன் கலந்த, தரமான தார்ச் சாலைகள் ஊரகப்பகுதிகளில், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் அமைக்கப்படும். இதன் மூலம், பிளாஸ்டிக் பொருட்களைச் சேகரித்துப் பதப்படுத்துதல், விற்பனை செய்தல், ஆகிய தொழில்களையும், சுய



உதவிக்குழுக்களே செய்திடவும் நான் ஏற்பாடு செய்துள்ளேன் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மகளிருக்கு சமவாய்ப்பு

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர். சங்க இலக்கியத்தில், 'கொடி மாடச் செங்குன்றூர்', என்று அழைக்கப்படும் திருச்செங்கோட்டில், கடல் மட்டத்திலிருந்து 1901 அடி உயரத்தில் அமைந்துள்ள மலையில் தமிழ்நாட்டில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்த சிவன் கோயில் உள்ளது. ஒவ்வொரு சிவாலயத்திலும், சிவனுக்கும், சக்திக்கும், தனித் தனி சன்னதிகள் இருக்கும். ஆனால், சிவனும் சக்தியும், ஓர் உருவாகக் காட்சி அளிக்கும் அர்த்த நாரீஸ்வரர் திருக்கோலம், திருச்செங்கோட்டில் உள்ளது. 'மாதொரு பாகன்' என்றும் 'உமையொரு பாகன்' என்றும், சிவசக்தி ஐக்கிய கோலத்தில் காணப்படும் காட்சி ஆணும் பெண்ணும் சமம், என்னும் ஒப்பற்ற தத்துவத்தின் விளக்கமாக அமைந்திருக்கிறது.

உங்கள் அன்புச்சகோதரியாகிய நான் இந்தத் தத்துவத்தைச் செயல்படுத்தும் வகையில், அனைத்துத் துறைகளிலும் மகளிருக்கு சம வாய்ப்பு வழங்கி வருகிறேன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

## மகளிரைத் தேடிச் செல்லும் வங்கிகள்

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை முதன் முதலாக நான் 1992 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்த போது ஆரம்பத்தில் அந்தக் குழுக்களில் உள்ள மகளிருக்கு கடன் வழங்க வங்கிகள் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், இன்றைய தினம் அந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. தமிழகம் எங்கும் உள்ள இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே தங்களிடம் அந்தச் சேமிப்பு நிதியை, வைப்பு நிதியாகச் செலுத்தி வைக்குமாறு கோருவதற்காக, இந்த மகளிரைத் தேடிச் செல்லும் நிலைமை இன்றைக்கு உருவாகி இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 31 ஆயிரத்து 749 குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களில் மொத்தம் 22 இலட்சத்து 44 ஆயிரத்து 935 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து, தற்போது 309.59 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது; வளர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், இதுவரை, மொத்தம் 3753 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 65 ஆயிரத்து 797 பெண்கள் உறுப்பினர்களாக இயங்கி வருகின்றனர். அவர்கள், இதுவரை 12 கோடியே 97 இலட்சம் ரூபாயைத் தமது சேமிப்பாக வங்கிகளில் சேமித்து வைத்துள்ளனர், என்றும் நான் அறிகிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## ஆண்கள் சுய உதவிக்குழுக்கள்

கடந்த 10 ஆண்டுகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், மகளிரிடையே, ஒரு மாபெரும் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. இந்தச் சுய உதவிக் குழுக்களின் தாக்கம் தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும், வெளிப்படையாகவே தெரிவதால் ஆண்களும், குறிப்பாக, இளைஞர்களும் ஏன் சுய உதவிக் குழுக்கள் அமைக்கக் கூடாது என்ற கேள்வி ஒவ்வொரு கிராமத்திலும் நகர்ப் பகுதியிலும் எழுந்துள்ளது. எனவே, ஆண்களும், தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், 'ஆண்கள் சுய உதவிக் குழுக்கள்' தொடங்குவதற்கு, நான் ஆணையிட்டேன். அதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில், 8 ஆயிரத்து 485 உறுப்பினர்களைக் கொண்ட 802 ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் உருவாகி உள்ளன. இந்தக் குழுக்களை இன்று இந்த இனிய விழாவில் தொடங்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த முயற்சியில், ஆர்வத்தோடு செயல்பட்ட நிதியமைச்சர் பொன்னையன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் டி.ராஜேந்திரன் அவர்களுக்கும், இந்த நேரத்தில் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தற்போது உள்ளூர் அளவில் மட்டுமே விற்கப்படுகின்றன. இந்தப் பொருள்களைப் பற்றி இந்திய அளவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் தெரியப்படுத்துவதன் மூலம் உலகில் எந்த இடத்தில் இருக்கும் மக்களும் அவர்கள் வசிக்கும் இடத்தில் இருந்தபடியே அந்தப் பொருள்களை வாங்குவதற்கு வகை செய்யும் தமிழக கிராமச் சந்தை என்னும் புதிய இணைய தளத்தை நான் 14.7.2003 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்துள்ளேன். சுய உதவிக் குழுக்களுக்கு இந்தப் புதிய இணைய தளம் பேருதவியாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று எங்கும் சந்தேகம், எதிலும் சந்தேகம் என்ற நிலைமை உள்ளது. சிலருக்கு இன்று எதிலும் நம்பிக்கை இல்லை. இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால் சில மனிதர்களுக்குத் தங்கள் மீதே நம்பிக்கை இல்லை.

## தன்னம்பிக்கையோடு செயல்படவேண்டும்

ஒருவர் பேருந்தில் பயணம் செய்து கொண்டு இருந்தார். அப்போது டிக்கட் பரிசோதகர், ஒவ்வொருவரும் பயணச் சீட்டு வாங்கி விட்டார்களா என்பதைச் சோதித்துக் கொண்டு வந்தார். நாம் குறிப்பிட்ட அந்த நபரிடம் வந்து, "எங்கே, உங்கள் டிக்கட்டைக் காட்டுங்கள்," என்று கேட்டார். உடனே அந்த மனிதர் "இடது பாக்கெட்டில் இருக்கிற டிக்கட்டைக் காட்டவா? வலது பாக்கெட்டில் இருக்கிற டிக்கட்டைக் காட்டவா ?" என்று கேட்டாராம். இது என்னடா வம்பாய்ப் போய் விட்டது என்று நினைத்த டிக்கட் பரிசோதகர், "இடது பாக்கெட்டில் இருக்கிற டிக்கட்டைத் தான் காட்டுங்களேன்" என்று சொன்னார். உடனே அந்த மனிதர், இடது பாக்கெட்டில் இருந்த டிக்கட்டை எடுத்துக் காட்டினார். அது சரியான டிக்கட் தான். இருந்தாலும், ஆவல் தாங்க முடியாத டிக்கட் பரிசோதகர் "ஆமாம், டிக்கட் தான் சரியாக இருக்கிறதே? அப்புறம் ஏன் இன்னொரு டிக்கட் வாங்கி வலது பாக்கெட்டில் வைத்து இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "இந்தா பாருங்க, நான் எதிலும் எச்சரிக்கையாக இருப்பேன். இப்போ, யாராவது இந்த டிக்கட்டை பிக்பாக்கெட் செய்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உடனே, வலது பாக்கெட்டில் உள்ள டிக்கட்டை, எடுத்துக் காட்டி விடுவேன்", என்று, தனது சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொண்டு சொன்னாராம். உடனே, டிக்கட் பரிசோதகர், "சரி, இரண்டு டிக்கட்டுகளையும் யாராவது பிக்பாக்கெட் அடித்து விட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாராம்.

அதற்கு அந்தக் கெட்டிக்கார மனிதர் என்ன பதில் சொன்னார் தெரியுமா ?

"அப்படியும் நடக்கலாம் என்று தெரிந்து தான், மூன்றாவது டிக்கட் வாங்கி என் கைப் பையில் வைத்திருக்கிறேன்" என்று பெருமை பொங்கச் சொன்னாராம்.

இவரை உஷார் பேர் வழி என்று சொல்லுவதா ? தன்னம்பிக்கை இல்லாதவர் என்று சொல்லுவதா?

தன் மீது நம்பிக்கை இல்லாத மனிதர்களுக்கு எவர் மீதும் நம்பிக்கை இருக்காது. இது தான் உளவியல் உண்மை !

தன்னை நம்பும் மனிதர்கள் தான் வாழ்வில் வெற்றி பெற முடியும்.

அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்பவர்கள் நிச்சயமாக உழைப்பால் நாம் உயர்வோம் என்ற நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். நாம் வெல்வோம் என்று நினைத்தால், நிச்சயமாக வெல்வோம்! நாம் தோற்போம் என்று நினைத்தால், நிச்சயமாகத் தோற்போம்.

எனவே, வாழ்க்கையைப் பற்றிய நேர்மறைச் சிந்தனைகளோடு அதாவது, Positive Thoughts என்பவைகளோடு இன்று நலத்திட்ட உதவிகள் பெறுவோர் அனைவரும் தங்கள் முயற்சிகளில் முனைப்போடு செயல்பட வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

Positive Thoughts என்றதும், ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.

## ஆக்கப்பூர்வ சிந்தனையால் நாம் வெற்றி கொள்ள முடியும்

ஆப்பிரிக்க நாட்டில் ஒரு மன்னர் இருந்தார். அவருக்கு ஒரு நெருங்கிய நண்பர் இருந்தார். இருவரும்

குழந்தைப் பருவத்தில் இருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள். இந்த நண்பருக்கு ஒரு பழக்கம் உண்டு. வாழ்க்கையில் எது நடந்தாலும், நல்லது நடந்தாலும் கெட்டது நடந்தாலும் இதுவும் நல்லதுதான் என்று சொல்வார். இது அவருக்கு பழக்கம்.

ஒருநாள் இந்த மன்னரும் அவர் நண்பரும் வேட்டைக்கு காட்டுக்குச் சென்றார்கள். இப்படி வேட்டைக்கு செல்லும் போதெல்லாம் இந்த நண்பர்தான் மன்னர் பயன்படுத்தும் துப்பாக்கிகளை எல்லாம் துடைத்து தயார் செய்து, அவற்றில் தோட்டாக்களைப் போட்டுக் கொடுப்பார். அதைப் போலவே அன்றைய தினமும் நண்பர் துப்பாக்கியில் தோட்டாவைப் போட்டு மன்னரிடம் கொடுத்தார். அன்று அந்த நண்பர் ஏதோ ஒரு தவறு செய்து விட்டார். எனவே மன்னர் அந்த துப்பாக்கியை எடுத்து சுட்ட உடன் அது வெடித்து மன்னருடைய சுட்டை பிடித்து, அவர்களுடைய கிராமத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள்.

இந்த காட்டுவாசிகள் Cannibals என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள். Cannibals என்றால் மனிதர்களைக் கொன்று, மனித மாமிசத்தை சாப்பிடுபவர்கள். மனித மாமிசம் சாப்பிடுபவர்களை Cannibals என்பார்கள். இவர்கள்தான் மன்னரைப் பிடித்துவிட்டார்கள். ஆகவே இந்த மன்னரை தங்கள் குலதெய்வத்துக்கு, நரபலி கொடுத்து, பின்னர் அவரை சமைத்து சாப்பிடுவது என்று முடிவு செய்தார்கள்.

மன்னரை ஒரு தூணில் கட்டிப் போட்டு அவரைச் சுற்றி விறகுகளை அடுக்கி வைத்தார்கள். அந்த விறகுக்கு தீ மூட்ட அருகில் வந்த போது, மன்னருக்கு ஒரு கட்டை விரல் இல்லை என்பதை கண்டுபிடித்தார்கள்.



விரல் சிதறி துண்டிக்கப்பட்டு விட்டது. வேதனையில் வலியில் மன்னர் துடித்துக் கொண்டிருந்தார். ஆனால் அத்தகைய சூழ்நிலையிலும் அந்த நண்பர் இதுவும் நல்லதுதான் என்றார்.

மன்னருக்கு கோபமும், எரிச்சலும், ஆத்திரமும் தாங்கவில்லை. இல்லை இது நல்லது இல்லை என்று கூறி, அந்த நண்பரை சிறைக்கு அனுப்பிவிட்டார். அந்த நண்பர் சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு ஆண்டு காலம் கழிந்தது. ஒரு ஆண்டுக்குப் பிறகு மன்னர் மீண்டும் வேட்டைக்குச் சென்றார். இந்தமுறை அவர் போகக்கூடாத இடத்திற்கு, போகக்கூடாத ஒரு பகுதிக்கு வேட்டையாடச் சென்றார். அங்கே சில காட்டுவாசிகள் மன்னரைப் அவர்களுடைய சம்பிரதாயப்படி அவர்களுடைய வழக்கப்படி அங்கஹீனம் உள்ளவர்களை நரபலி கொடுக்கக் கூடாது, சாப்பிடவும் கூடாது.

ஆகவே, மன்னருக்கு ஒரு கட்டை விரல் இல்லை என்பதைக் கண்டவுடன், அவரை விடுதலை செய்துவிட்டார்கள். மன்னர் அரண்மனைக்கு திரும்பிப் போய்க் கொண்டு இருந்த போது, எத்தகைய சூழ்நிலையில் இந்த கட்டை விரலை இழக்க நேரிட்டது என்பதை நினைவு கூர்ந்து பார்த்தார். அப்போது நண்பருக்குத் தான் இழைத்த கொடுமையும் நினைவுக்கு வந்தது. மன்னர் உடனே வருத்தப்பட்டு, அந்த நண்பரைத் தேடி சிறைக்கு சென்றார். அவரை விடுதலை செய்ய சொன்னார்.

மன்னர் சொன்னார்: “அன்றைக்கு நீ சொன்னது சரிதான். என் கட்டை விரல் துண்டிக்கப்பட்ட போது, இதுவும் நல்லதுதான் என்று நீ சொன்னாய். அந்தக் கட்டைவிரல் துண்டிக்கப்பட்டதால்தான் இன்று என் உயிர் காப்பாற்றப்பட்டது. உயிரோடு திரும்பி வந்திருக்கிறேன் என்று நடந்தவற்றை எல்லாம் சொன்னார். ஆகவே உன்னை சிறைக்கு அனுப்பி நான் உனக்கு தீங்கு இழைத்துவிட்டேன். உனக்கு கெடுதல் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு என்றார்.

அப்போது நண்பர், ‘இல்லை, இதுவும் நல்லதுதான்’ என்றார். மன்னர் கேட்டார், “என் ஆருயிர் நண்பரையே நான் சிறையில் அடைத்து விட்டேன். இதையும் நல்லது என்று எப்படி சொல்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு நண்பர் சொன்னாராம்: “நான் இன்று சிறையில் இல்லை என்றால் உங்களோடு காட்டிற்கு வந்திருப்பேன். அந்த காட்டு வாசிகள் என்னைப் பிடித்திருப்பார்கள். நான் அங்கஹீனம் இல்லாதவன். இந்நேரம் என்னை பலிகொடுத்து சமைத்து சாப்பிட்டிருப்பார்கள். என்னை நீங்கள் சிறையில் அடைத்து வைத்ததால்தான் நான் உயிரோடு இருக்கிறேன்” என்று சொன்னாராம்.

ஆகவே இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? இந்தக் கதை நமக்கு என்ன சொல்கிறது? எப்போதுமே பாசிட்டிவ் ஆக, ஆக்கப் பூர்வமாக சிந்திக்க வேண்டும். எப்போதுமே பாசிட்டிவ் ஆக சிந்தித்து நம்பிக்கையோடு இருந்தால் தீமையிலும் நன்மை விளையும். சோதனைகளைக் கடந்து, எத்தகைய சூழ்நிலையிலும், நாம் வெற்றி கொள்ள முடியும்.

தற்போது தமிழகம் எங்கும் பரவலாக மழை பெய்து வருகிறது.நாமக்கல்லில்கூட அண்மையில் நல்ல மழை பெய்திருக்கிறது. இன்றுகூட தூறல் விழுந்தது என்று கேள்விப்பட்டேன். தமிழகம் எங்கும் பரவலாக மழை பெய்து கொண்டிருப்பதால் என்னுடைய பயணத் திட்டத்தில்கூட இன்று ஒரு மாற்றம் செய்ய வேண்டி வந்தது.

நான் விமானத்தில் சேலம் வந்து இறங்கி அங்கிருந்து ஹெலிகாப்டரில் இங்கு நாமக்கல் வருவதாக பயணத் திட்டம் வகுக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைக்கு சேலத்தைச் சுற்றி கருமேகங்கள், மழை மேகங்கள் சூழ்ந்திருப்பதால், விமானத்தை அங்கே இறக்க முடியாது என்று விமானி கூறியதால் நான் விமானத்தில் திருச்சி வரை சென்று, அங்கிருந்து ஹெலிகாப்டரில் இங்கே வந்திருக்கிறேன்.

**ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.**

## மழைநீரை சேகரிக்க வேண்டும்

நாமக்கல்லில் அண்மையில் நல்ல மழை பெய்திருக்கிறது. இனியும் மழை பெய்யும். முன்பெல்லாம் மழை பெய்வதைப் பார்த்தால், உடனே ஓடிச் சென்று அந்த மழையில் நிற்க வேண்டும். மழையில் நனைந்து மகிழ வேண்டும் என்றெல்லாம் தோன்றும். ஆனால் இப்போ தெல்லாம் மழை பெய்வதைப் பார்க்கும் போது எனக்கு என்ன தோன்றுகிறது என்று சொன்னால் இவ்வளவு மழை நீர் விழுந்து கொண்டிருக்கிறதே? மக்கள் இதை சேமித்து வைக்கிறார்களோ? இல்லையோ தெரியவில்லையே?

அடிக்கடி பருவமழை பொய்த்து விடுகிறது. நமக்கு அண்டை மாநிலத்திலிருந்து கிடைக்க வேண்டிய நதிநீரும் சரிவர கிடைப்பதில்லை. மழை பெய்வது அரிதாக இருக்கிறது. இப்படி இருக்கின்ற போது ஒரு சொட்டு மழைநீரைக் கூட வீணாக்கக் கூடாது. அதற்காகத் தான், மழைநீர் சேகரிப்பு அமைப்பு களை ஒவ்வொரு கட்டடத்திலும் ஏற்படுத்த வேண்டும் என்று நான் உத்தரவிட்டு இருக்கிறேன். இதைப்பற்றி திரும்பத் திரும்ப நான் எங்கே சென்றாலும், எந்தக் கூட்டத்தில் பேசினாலும் மக்களுக்கு கூறிக் கொண்டே இருக்கிறேன்.

ஆகவே இப்போதெல்லாம் மழை பெய்வதைப் பார்த்தாலே இந்த மழைநீர் வீணாகப் போய்விடக் கூடாதே, இதை மக்கள் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம்தான் தோன்றுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் ஏற்கெனவே உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிப்பதைப் போல், மழைநீர் சேகரிப்பு இயக்கம் நன்றாக செயல்பட்டு வருகிறது. இருந்தாலும் இது போதாது. உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்வது இதுதான். நீங்கள் ஏற்கெனவே உங்கள் இல்லங்களில் நீங்கள் பணிபுரியும் இடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி இருந்தால் மிக நல்லது. அதை செய்யவில்லை என்றால் உடனே நீங்கள் அதைச் செய்ய வேண்டும். அதைப் பற்றிய தகவல்கள் உங்களுக்கு வேண்டும் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை அணுகலாம். ஒவ்வொரு பஞ்சாயத்து அலுவலகத்தையும் நீங்கள் அணுகலாம். உங்களுக்குத் தேவையான அறிவுரைகளை, தேவையான உதவிகளை அவர்கள் செய்வார்கள்.

மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்றால் அதிகம் செலவாகாது. 250 ரூபாய்க்கும் செய்யலாம். 500 ரூபாய்க்கும் செய்யலாம். 750 ரூபாய்க்கும் செய்யலாம். ஆகவே அதிகம் செலவாகாது. நீங்கள் பணத்தையும், பொன்னையும், பொருளையும், நகையையும் எப்படி செல்வமாக மதித்து, பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறீர்களோ, அதைப் போலவே நீங்கள் தண்ணீரையும் மாபெரும் செல்வமாக கருதி, அதை சேமித்துக் கொள்ள வேண்டும்.

இனி வரும் காலங்களில், தண்ணீர் தட்டுப்பாடு குடிநீர் தட்டுப்பாடுதான் இந்த நாடு சந்திக்க வேண்டிய மிகப் பெரிய பிரச்சனையாகத் திகழப் போகிறது. ஆகவே அந்த பிரச்சனையை தமிழகம் வெற்றிகரமாக சமாளிக்க வேண்டுமானால், குடிநீர்த் தட்டுப்பாட்டினால் மக்கள் அவதிப்படாமல் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமானால், நீங்கள் ஒவ்வொருவரும், கிடைக்கின்ற



ஒரு சொட்டு மழை நீரைக் கூட வீணாக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**உரிமையும் கடமையும்**

இன்றைய தினம், பலர் உரிமை உரிமை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் உரிமையைத் தானே கேட்கிறோம். எங்களுக்கு மேலும் சலுகைகள் வேண்டும். அப்படிக் கேட்பது எங்களது உரிமை என்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குறிப்பாக அரசு ஊழியர்களுக்கு ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நினைவு படுத்த விரும்புகிறேன். உரிமை என்ற சொல்லை நாம் தனியாகப் பயன்படுத்த முடியாது. உரிமை என்ற சொல் இருந்தால் கூடவே கடமை என்ற ஒரு சொல்லும் கூட வரும். அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் இது பொருந்தும்.

ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அங்கேயும் உரிமையும் கடமையும் சேர்ந்தே வருகின்றன. அப்படியிருந்தால் தான் அது குடும்பம். ஒரு மனைவி கணவரிடம் உரிமையோடு எதிர்பார்க்கிறாள். என்ன எதிர்பார்க்கிறாள்? குடும்பத்தை நடத்தத் தேவையான பணத்தை அந்தக் கணவர் சம்பாதித்து வீட்டிற்குக் கொண்டு வரவேண்டும். குடும்பத்தின் தேவைகளை அந்தக் கணவர் பூர்த்தி செய்யவேண்டும். தேவையான மளிகை சாமான்களை வாங்கிப் போட வேண்டும். என்றெல்லாம் உரிமையோடு ஒரு மனைவி எதிர்பார்க்கிறாள். அந்த உரிமை மனைவிக்கு உண்டு. அதே நேரத்தில் மனைவிக்கும் கடமை உண்டு. வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கணவருக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போட வேண்டும். நல்ல முறையில் சிக்கனமாக குடும்பம் நடத்த வேண்டும். கணவர் சம்பாதித்துக்கொண்டுவரும் பணத்தை வீணாக செலவு செய்யக் கூடாது. இப்படிப்பட்ட கடமைகள் மனைவிக்கும் உண்டு.

அதைப்போலவே, அதைத் திருப்பிப் போட்டு பார்த்தோமேயானால், கணவருக்கும் உரிமைகள் உண்டு. மனைவியிடம் கணவர் நல்ல முறையில் குடும்பம் நடத்த வேண்டும். தனக்கு சமைத்து போட வேண்டும். தனது தேவைகளை அவர் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு கணவர் உரிமையோடு எதிர்பார்க்கிறார் என்றால், கணவருக்கும் கடமை இருக்கிறது.

குடும்பத்தை கஷ்டப்படாமல் நடத்துவதற்கு, தேவையான பணத்தை சம்பாதித்து கொண்டு வந்து, கொடுக்க வேண்டியது கணவரின் கடமை. மனைவிக்கு எல்லாவிதத்திலும் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது கணவரின் கடமை.

அதைப்போலத்தான், அரசு ஊழியர்கள் தங்களுடைய உரிமைகளை அவர்கள் கேட்கின்ற போது, கடமையை மட்டும் மறப்பது சரியல்ல என்பதை நினைவு கூர விரும்புகிறேன். அரசு ஊழியர்களுக்கு சமுதாயத்தில் இருக்கின்ற மற்ற தரப்பினரை விட கடமை அதிகம் என்றே நான் கூற விரும்புகிறேன்.

## கேட்காமலேயே கொடுத்தோம்

இன்றைக்கு அரசு ஊழியர்கள் எண்ணிக்கையைப் பார்த்தோமானால் இந்த மாநிலத்தின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் அவர்கள் 2 விழுக்காடு இருக்கிறார்கள். ஆக வாக்களித்து இந்த ஆட்சி அமைய காரணமாக இருக்கும் மக்கள் 98 விழுக்காடு இருக்கிறார்கள். ஆக அரசுக்கு எது முக்கியம்? இந்த அரசு சந்திக்கின்ற நிதி நெருக்கடியில் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இக்கட்டான நிதி நெருக்கடியில், இந்த அரசு ஏற்கெனவே நல்ல பாதுகாப்போடு, நல்ல வசதிகளோடு இருக்கின்ற இந்த 2 விழுக்காடு மக்களை கவனிக்க வேண்டுமா? அரசு ஊழியர்களை கவனிக்க வேண்டுமா? அல்லது எதுவுமே இல்லாமல், வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாமல் இருக்கின்ற மீதம் 98 சதவிகித மக்களை நினைக்க வேண்டுமா? எது அரசுக்கு முக்கியம்.

91 முதல் 96 வரை நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, இத்தகைய அரசாங்க ஊழியர் போராட்டம் நடைபெற்றதே இல்லை. அதற்கான காரணமும் அன்றைக்கு எழவில்லை. அன்றைய தினம், அரசின் நிதி நிலைமையை மாநிலத்தின் பொருளாதார நிலைமையை சீராக வைத்திருந்தேன். ஆகவே அரசாங்க ஊழியர்கள் கேட்க வேண்டிய நிலை இருக்கவில்லை. அவர்கள் போராட வேண்டிய நிலை ஒரு சூழ்நிலை இருக்கவில்லை. அரசாங்க ஊழியர்கள் அன்றைய தினம் கேட்பதற்கு முன்பே கொடுக்க வேண்டிய படிகளை, கொடுக்க வேண்டிய போனசை, கொடுக்க வேண்டிய சம்பளங்களை, கொடுக்க வேண்டிய பென்ஷன்களை, கொடுக்க வேண்டிய ஓய்வூதிய சலுகைகளை எல்லாம், இந்த அரசு தாராளமாக வழங்கிக் கொண்டிருந்தது. அன்றைக்கு நிதி நிலைமை அதற்கு இடம் அளித்தது. ஆனால் அதன் பின்னர் 96 முதல் 2001 வரை நடைபெற்ற திமுக ஆட்சியில் தமிழ்நாட்டின் நிதி நிலைமை பொருளாதார நிலைமை சீரழிக்கப்பட்டு விட்டது. குட்டிச் சுவராக்கப்பட்டு விட்டது. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. அதைப் பற்றி விரிவாக நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது அதை உங்களுக்கு விளக்கமாக கூறினார்.

இன்றைய தினம் நான் உண்மையாக சொல்லுகிறேன். 2001இல் நான் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற போது, மாநிலத்தின் பொருளாதார நிலைமையை பார்த்தபோது, அதைப் பற்றிய விவரங்களை உணர்ந்தபோது, என் இடத்தில் வேறு யாராக இருந்தாலும், அவர்கள் ஓடிப் போய் இருப்பார்கள். இந்தத் தலைவலியே வேண்டாம், இந்தப் பொறுப்பே வேண்டாம், இந்தச் சுமை வேண்டாம், இந்த பிரச்சனைகள் வேண்டாம், இந்தப் பிரச்சனைகளை எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாது, எந்தக் காலத்திலும் இந்த நிதிநிலையை இந்த பொருளாதார நிலையை சீர்படுத்த முடியாது, ஆகவே எங்களை விட்டு விடுங்கள். ஆளை விட்டால் போதும் என்று ஓடிப் போய் இருப்பார்கள்.

## தமிழக மக்களுக்கு கோடானு கோடி நன்றி

ஆனால் என்னைப்பொறுத்த வரை, மக்கள் நம்மை நம்பி வாக்களித்து இருக்கிறார்கள். இந்த மாநில மக்களுக்கு ஒரு நல்லது செய்வோம் என்ற நம்பிக்கையோடு மக்கள் நமக்கு வாக்களித்து நம்மை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்கள். ஆகவே இதை இப்படியே விட்டுவிடக் கூடாது. எப்படியாவது இந்த மாநிலத்தின் பொருளாதார நிலைமையை ஒட்டுமொத்த நிதி நிலையை சரி செய்தாக வேண்டும். சீர்படுத்தியாக வேண்டும் என்பதற்காக, கடுமையாக உழைத்து, பல பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, அதற்காக சில இனங்களில் சில விஷயங்களில் மக்களுக்கு சிரமம் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டாலும், நான் கசப்பான மருந்தை கொடுக்கிறேன், அதை தயங்காமல் சாப்பிடுங்கள், இந்த மாநிலத்தின் நன்மையைக் கருதி நீங்கள் சாப்பிடுங்கள் என்று கேட்டுக் கொண்டபோது, என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எந்தவிதமான ஒரு தயக்கமும் இன்றி, முகத்தைச் சுழிக்காமல் நான் கொடுத்த கசப்பான மருந்தை அன்புடன் உண்டீர்கள். அதனால் தான் இந்த மாநிலம் இன்று மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கிறது. அதற்கு தமிழக மக்களுக்கு கோடானுகோடி நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மக்களுக்காக அரசு

இப்படி வாக்களித்த மக்கள் ஏழை எளிய மக்கள் இந்த மாநிலத்தை எப்படியாவது முன்னேற்றப் பாதையில் மீண்டும் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக பல தியாகங்களை செய்து, இந்த நாட்டு நலன் கருதி, மாநில நலன் கருதி, பல தியாகங்களை செய்து இருக்கும்போது, அரசாங்க ஊழியர்கள் இதற்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை, மாநிலத்தின் நிதி நிலைமை மோசமாக இருந்தால் என்ன? ஏழை எளிய மக்கள் அவதிப்பட்டால் என்ன? சாமானிய மக்கள் தியாகம் செய்தால் என்ன? எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை? எங்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து விடுங்கள், இன்னும் கொடுங்கள், இன்னும் கொடுங்கள் என்று கேட்டால் என்ன நியாயம்?

இந்த அரசு எதற்காக இருக்கிறது? யாருக்காக இருக்கிறது? மக்களுக்காக இருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் எதற்காக இங்கே இருக்கிறார்கள்? மக்களுக்காக சேவை செய்ய இருக்கிறார்கள், தொண்டு செய்ய இருக்கிறார்கள்.

இன்றைய தினம் இந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டால், முழு பாதுகாப்போடு இருக்கின்றவர்கள்

வாழ்க்கைக்கு முழு உத்தரவாதத்தோடு இருக்கின்றவர்கள் அரசாங்க ஊழியர்கள் மட்டும் தான். வேறு யாருக்கும் இத்தகைய பாதுகாப்பு கிடையாது. இத்தகைய உத்தரவாதம் கிடையாது. அப்படி இருக்கின்ற போது, அரசாங்க ஊழியர்கள் தாங்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என்பதைப் புரிந்து கொண்டு, உணர்ந்து செயல்பட வேண்டும். மக்களை நினைத்து செயல்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்கு சுட்டி காட்ட விரும்புகிறேன்.

### அரசின் உதவிகள்

சமுதாயத்தில் அடித்தளத்து மக்களுக்கு அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள், வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு எப்போதுமே மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. எனது எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில், இன்றைய தினம், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 11,761 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மொத்தம் 8 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

இன்றைய தினம், கூட்டுறவுத் துறையின் சார்பாக, 1000 பயனாளிகளுக்கு 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்குவதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் சார்பில், கூட்டுறவு வங்கிகள் மூலம் 4000 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 80 இலட்சம் ரூபாய் கடனுதவியும் – ஊரக வளர்ச்சித் துறை சார்பில், 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 866 நபர்களுக்குத் தொகுப்பு வீடுகள், மேம்படுத்தப்பட்ட கச்சா வீடுகள், தையல் எந்திரங்கள், விசை தெளிப்பான்கள், கைத் தெளிப்பான்கள் ஆகியவையும் இன்று வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### 2683 பேருக்கு வீட்டுமனைப் பட்டா

வருவாய்த் துறையின் சார்பில், 2683 பேருக்கு 68 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப்பட்டா வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமன்றி, சமூக நலத் துறையின் சார்பில், 450 பெண்களுக்கு 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்கள், மற்றும் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், விதவை மகள் திருமண உதவித் திட்டம், தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம் என பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் நிதி உதவிகளை வழங்குவதில், நான் மிகவும் மன நிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள், இவற்றை அடிப்படையாக வைத்து சிறப்போடு தொழில் புரிந்து, தங்கள் வாழ்வில் மென்மேலும் நலமும் வளமும் பெற்றிட வேண்டும் என்று எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மேலும் ஒரு சிறிய கதையை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

### புளுகுமூட்டைப் பொய்யர்கள்

இரண்டு பொய்யர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இருவரும் உலக மகா பொய்யர்கள். இருவரும் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டு இருந்தார்கள்.

முதல் பொய்யன் கேட்டான்;

"தாஜ்மகால் தெரியுமா ? "

"தெரியும்" என்றான் இரண்டாம் பொய்யன்.

"அதைக் கட்டியவர் யார் தெரியுமா ? – எங்கள் அப்பா தான் அதைக் கட்டினார்" என்று சொன்னாராம்.

இதைக் கேட்டு விட்டு, இரண்டாவது பொய்யன் சும்மா இருப்பானா ? சும்மா இருக்கத்தான் முடியுமா ?

Dead sea தெரியுமா ? என்று கேட்டானாம். டெட் என்றால் செத்துவிட்டது என்று பொருள். Dead sea என்று ஒரு கடல் இருக்கிறது. அதைச் சாகடிச்சவரே எங்க அப்பாதான்" என்றானாம், அந்த இரண்டாவது பொய்யன்.

இவர்களை எல்லாம் தூக்கிச் சாப்பிட்டுவிடும் பொய்யர்கள் நம் தமிழகத்திலும் உண்டு.

ஒரு தலைவரின் குடும்ப T.V.–யும், குடும்பப் பத்திரிகையும் சொல்கிற பொய்களைப் பார்த்தால் கோயபல்ஸ் கூட கூச்சப்படுவான்.

பேனாவில் மையை நிரப்பி எழுதுவார்கள், மற்றவர்கள். இவரோ, பேனாவில் பொய்யை நிரப்பி எழுதுவார். பொய்யையே பேசி பொய்யையே எழுதி பொய்யையே தொலைக்காட்சியில் காட்டி வரும் இந்தப் புளுகு மூட்டை மனிதர்களை தமிழக மக்கள் ஏழு கடலுக்கப்பால் தூக்கி எறிந்து விட்டார்கள்.

ஆனால், எப்படியோ சேர்த்த பணம் இருக்கிறது! அதை வைத்து எவ்வளவு பெரிய T.V. Network–ஐயும் ஏற்படுத்தலாம்! நடத்தலாம். அதன் மூலம், எத்தனை பொய்களையும் கூசாமல் கூறலாம்! இது தான் இந்தக் குள்ள நரிகளின் கோணல் புத்தி! அசட்டு நம்பிக்கை !

### இந்த அரசை அசைக்க முடியாது

எத்தனை முறை தமிழக மக்கள் இவர்களுக்குப் பாடம் புகட்டினாலும் இந்த அசட்டு மனிதர்களுக்குப் புரிவதே இல்லை. அதற்காக, அவர்கள் வெட்கப்படுவதும் இல்லை !

நரிகள் ஊளையிட்டு, நாமக்கல் குன்று விழுந்து விடாது !

நயவஞ்சகர்களின் பிரச்சாரத்தால், இந்த அரசை அசைக்க முடியாது.

எனது வலிமை, உங்களின் வலிமை என்பது, இந்த நாடறிந்த உண்மை!

மக்கள் சக்தியே எனது சக்தி !

தொடர்ந்து மண்ணைக் கவ்வப் போகிறது தீய சக்தி !

இதனை உங்கள் முன் உறுதிபடத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை முதலான சுதந்திரப் போராட்ட வீரர்களையும், தியாகிகளையும் தந்த நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களாகிய நீங்கள், புதியதொரு தமிழகத்தை நிர்மாணிக்கும் பணியில் அல்லும் பகலும் ஈடுபட்டு வரும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கும் அரசின் முயற்சிகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே பயனாளிகள் அனைவருக்கும், எனது கையாலே வழங்க வேண்டும் என்று விரும்பினாலும் நேரம் குறைவாகவே உள்ள காரணத்தால் 15 பேருக்கு மட்டும் இந்த உதவிகளை நானே மேடையில் வழங்க இருக்கிறேன். மற்றவர்களுக்கு அமைச்சர் பெருமக்களும், இங்கே வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்று பயனாளிகள் அனைவரும் தங்கள் வாழ்க்கையை, உண்மை, உழைப்பு, உயர்வு ஆகியவற்றின் வாயிலாக வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி, உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் வளமும் செழுமையும் ஒருங்கே சேர்ந்திட வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழாவை, சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், D. ராஜேந்திரன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மன மார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

★ ★ ★

### கிராமப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய இயக்கம்

கிராமப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க புதிய இயக்கம் ஒன்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கியுள்ளார்கள்.

இதன்படி, சிறந்த கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றுக்கு ரூ.5 இலட்சம் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் கடந்த மாதம் 16ஆம் தேதி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களை தூய்மைப்படுத்த புதிய இயக்கம் ஒன்றை தொடங்குவதாக அறிவித்தார்கள்.

நாமக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "என்னால் தொடங்கப்பட்ட மகளிருக்கான ஒருங்கிணைந்த ஊரக சுகாதார வளாகங்கள் கட்டும் திட்டம் மாநிலத்தில் சுகாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கு வித்திட்டு உள்ளது.

மகளிருக்கான இந்த மேம்பாட்டு திட்டத்தினை தொடர்ந்து நான் சமுதாய மேம்பாட்டிற்காக சுகாதார கிராம இயக்கத்தை அறிவித்துள்ளேன்.

இத்திட்டத்தின் கீழ் முழு சுகாதாரம் பெற்று திகழும் சிறந்த கிராமங்களுக்கு ரூ.5 இலட்சம் பரிசு தொகை வழங்கவும் இதற்காக ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யவும் ஆணையிட்டுள்ளேன்" என்று குறிப்பிட்டார்கள்.

இதைத்தொடர்ந்து, மக்களின் ஒத்துழைப்புடன், ஒவ்வொரு கிராமத்திலும், தெருக்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், மழைநீர் சேகரிப்பு, கழிவுநீரை சுத்திகரித்தல், திடக்கழிவுகளை பயன்படுத்தி எரிவாயு உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு பணிகளை, ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

100 சதவீத தூய்மை என்ற இலக்குடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ், சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகளுக்கு ரூ.5 இலட்சம் பரிசு வழங்கப்படும்.

இதற்காக, ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பரிசுத் தொகையாக வழங்கப்படும் பணத்தை, அந்தந்த ஊராட்சியின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நெறிமுறைகளை ஊரக மேம்பாட்டு இயக்குநரகம் வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், சுத்தமான கிராமங்களை மதிப்பீடு செய்யும் பணி ஜனவரி மாதம் முதல் தொடங்கப்படவுள்ளது. அந்த இயக்கத்தை ஒருங்கிணைந்து செயல்படுத்த, உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில், மாநில ஊரக சுகாதாரச் சங்கம் என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

• • •



# தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டு அறிக்கை

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.7.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கான முதல் மனிதவள மேம்பாட்டு (Tamil Nadu Human Resources Development Report) அறிக்கையை வெளியிட்டார்கள்.

தமிழ்நாட்டில் மனிதவளத்தின் நிலைமை, வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் வறுமைநிலை, மக்கள் தொகை, சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து, எழுத்தறிவு மற்றும் கல்வி, பாலினம், சமூகப் பாதுகாப்பு போன்ற விவரங்களை இந்த மனிதவள மேம்பாட்டு அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற United Nations Development Programme, திட்டத்தின் முதுநிலை துணை பிரதிநிதி திரு. மௌரிஸ் டிவுல்ஃப் (Mr. Maurice Dewulf, Senior Deputy Representative), அவர்கள், இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று வழிகாட்டியமைக்கும், அவர்களது தொலை நோக்குப்பார்வைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அறிக்கைக்கு அளித்துள்ள முன்னுரையில் இருந்தே அவர்களது தொலை நோக்குப் பார்வை தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது என்றும் குறிப்பிட்டார். மேலும், ஏழை எளிய மக்களின் நலனுக்காகத் திட்டமிட்டுச் செயலாற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட தாங்கள் ஆவலுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "UNDP உடன் இணைந்து பணியாற்ற தமிழ்நாடு அரசு ஆர்வமாக உள்ளது" என்று தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், தலைமைச்செயலர் திருமதி லக்ஷ்மி ப்ரானேஷ், இ.ஆ.ப., மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் மற்றும் திட்டக்குழு உறுப்பினர்கள், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச்செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர், திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. பி.ஆர். பிந்துமாதவன், இ.ஆ.ப., மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் செயலர் திரு. நரேஷ் குப்தா, இ.ஆ.ப., திரு. மௌரிஸ் டிவுல்ஃப் (Mr. Maurice Dewulf), Senior Deputy Representative, UNDP, டாக்டர் சீதா பிரபு, Head, Human Development Resource Cell, UNDP ஆகியோர் கலந்து கொண்டனர்.●

# விளையாட்டு வீரர்களுக்கு ஆக்கம் தரும் அரும் பணிகள்

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று விருதுகளைத் தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த திட்டம் 1991–1996ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2001–ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றது முதல் இத்திட்டம் முனைப்புடன் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறு சாதனைகளை சர்வதேச அளவில் நிகழ்த்துவதற்காக, திறமைவாய்ந்த பயிற்றுநர்கள் மூலம், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங் கனைகள் அடையாளம் காணப்பட்டு, இவர்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் தற்போது கூடுதலாக 5 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங் கனைகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். சந்தீப் ஸ்ரீகாந்த் (Laser Class in Sailing), ஜோஷ்னா சின்னப்பா (Squash), எம். தாரிணி (Shooting), எஸ். சரஸ்வதி (Javelin Throw), எ ஸ் . எ ல் . ஜோஷ்வா ஜோசப் (Swimming), ஆகியோர் இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

துப்பாக்கி சுடும் வீராங்கனை தாரிணி இதுவரை பழைய துப்பாக்கியை வைத்துப் பயிற்சி மேற்கொண்டு வந்தார். இவருக்கு 1இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய துப்பாக்கி உபகரணம் வாங்கித்தரப்படுகின்றது. படகோட்டும் வீரர் சந்தீப் ஸ்ரீகாந்துக்கு 80,000 ரூபாய் மதிப்பிலான படகோட்டும் உபகரணங்கள் வாங்கித் தரப்படுகிறது. ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா அமெரிக்க நாட்டில் மூன்று வாரப் பயிற்சி மேற்கொள்ள அனைத்துச் செலவுகளையும் அரசு ஏற்கிறது. மேலும், வெளிநாட்டுப் போட்டியில் பங்கேற்க ஆகின்ற முழுச் செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஈட்டி எறியும் வீராங்கனை சரஸ்வதிக்கு சத்தான உணவு, தேவையான விளையாட்டு காலணிகள் மற்றும் உபகரணங்கள் 30,000 ரூபாய் மதிப்பில் வாங்கித் தரப்படுகின்றது. நீச்சல் போட்டிகளில் பங்கேற்கும் ஜோஷுவா ஜோசப் இதற்கென பெங்களூர் சென்று வர ஆகும் செலவுகளை அரசு ஏற்கிறது. மேலும், போட்டியில் பங்கேற்க மனத்திண்மை பெற்றிட மனவியல் வல்லுநர்களைக் கொண்டு psychological assistance வழங்கப்படுகிறது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த 5 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு சர்வதேச விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டத்தில் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய ஆணைகளை 10.7.2003 அன்று நேரில் வழங்கினார்கள். அப்போது, எதிர்காலத்தில் பங்குபெற உள்ள பன்னாட்டுப் போட்டிகள் அனைத்திலும் மகத்தான வெற்றி பெற்று நாட்டுக்கு புகழ் சேர்க்க வேண்டும் என்று தமது வாழ்த்துகளை அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

★ ★ ★



# அரசுத் துறைகளில் மின்– நிர்வாக மேம்பாடு – வல்லுநர்க்குழு அறிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 14.7.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுத் துறைகளில் மின் நிருவாகத்தை (e-Governance) மேம்படுத்த கணினி பயன்பாட்டில் எவ்வகையான மென்பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, தகவல் தொழில்நுட்ப துறையின் சார்பில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தலைவர், அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இ. பாலகுருசாமி வல்லுநர் குழு அறிக்கையை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு, அதன் தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2003–ன் அடிப்படையில் அனைத்துத் துறைகளிலும் நிருவாகத் தரத்தை மேம்படுத்த தகவல் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இத்தொழில்நுட்பப் புரட்சி, தகவல் தொழில் நுட்பத்தில் தமிழின் பயன்பாட்டை வெகுவாக உயர்த்துவதுடன், தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழி வகுக்கிறது.

இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு, அரசின் துறைகளில் மின் நிருவாகத்தை (e-Governance) மேம்படுத்த கணினிப் பயன்பாட்டில், தனி உரிமை மென்பொருள் (proprietary software) அல்லது திறந்த மென்பொருள் (open source software) அல்லது பயன்பாட்டின் தேவையைப் பொறுத்து இரண்டும் கலந்த மென்பொருள் (a combination of both based on application needs) ஆகிய இம்மூன்றில் எவ்வகையான மென் பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆய்வு செய்திட அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் இ. பாலகுருசாமி தலைமையில் ELCOT, NIC, IIT மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 5 உறுப்பினர் வல்லுநர் குழு ஒன்றை அரசு அமைத்தது.

திறந்த மூல மென்பொருள் மற்றும் தனியுரிமை மென்பொருள்களை எளிமையாகப் பயன்படுத்தும் முறை, பரம்பரை மென் பொருளுடன் இடை செயல்பாடு, பாதுகாப்பு, கிடைக்கக் கூடிய பயன்பாட்டு மென் பொருள், பயிற்சி, உரிமைக்கான மொத்த செலவு முதலிய முக்கிய கூறுகளை ஆராய்ந்து தனது பரிந்துரையை அளிப்பது இக்குழுவின் பணியாகும்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு. செ. செம்மலை, தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ரானேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர், திரு. விவேக் ஹரிநாராயண், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

• • •



# மழைநீரை சேகரிக்க சீரிய முயற்சி மேற்கொள்வோம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள்**

**த**மிழகத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்து விட்டது. நான் 2001–ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், சென்னையிலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் முன் எப்போதும் இல்லாத கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டை எனது அரசு சமாளிக்க வேண்டி வந்தது. 2002–ஆம் ஆண்டிலும் தமிழகம் முழுவதும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாட்டைச் சந்திக்க வேண்டி இருந்தது. சென்னை நீங்கலாக ஒட்டுமொத்த தமிழகமும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது. காவிரி தண்ணீரைத் திறந்துவிடாமல் கர்நாடகம் காட்டிய அலட்சிய பிடிவாத போக்கால் காவிரி டெல்டா விவசாயிகள், கடந்த ஆண்டு பட்ட துன்பங்கள் இன்னும் நம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை. இந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை இன்னும் சரியான முறையில் தொடங்கவில்லை. எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை நீர் சேகரிப்புக்கு உரிய முன்னுரிமை தந்து மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஊரகப் பகுதிகளிலும், நகர்ப் புறங்களிலும் உள்ள குடியிருப்புகளில் மழை நீர் சேகரிப்பைச் செயல் படுத்துவதை தனது 2001–ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சேர்த்த ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே ஆகும்.



வட கிழக்குப் பருவ மழை 2003–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து தொடங்க இருக்கும் சூழ்நிலையில், மழை நீர் சேகரிப்பை ஒரு இயக்கமாக ஆக்கி, ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்து, மாநிலத்தின் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்குவதை விரைந்து செயல்படுத்த நாம்

**வான்தரும் மழை காப்போம் !**
**வாழ்வுக்கு வளம் சேர்ப்போம் !!**

முனைப்போடு செயல்பட வேண்டி உள்ளது. அதற்கிணங்க, வட கிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கு மிக முன்பாகவே, 31.8.2003 ஆம் தேதிக்குள் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்டடங்களுக்கும் கட்டாயமாக்கி, எனது அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் இல்லாத பட்சத்தில் அத்தகைய கட்டடங்கள் கட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதி அளிக்கப்பட மாட்டாது. இனி கட்டப்பட உள்ள கட்டடங்கள் மட்டும் அல்லாமல், தற்போது உள்ள கட்டடங்களிலும், கட்டப்பட்டு வரும் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டட உரிமையாளர்களும் மற்றும் அந்த இடங்களைப் பயன்படுத்துவோர்களும் கண்டிப்பாக அமைத்திட வேண்டும் என்று என்னுடைய அறிவுரைகளின்படி உள்ளாட்சி அமைப்புகளின் கட்டட விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாநிலத்தின் ஏனைய பகுதிகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை, தங்களது கட்டடங்களில் உருவாக்க கட்டட உரிமையாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனையை வழங்கும்.

அனைத்து மாநகராட்சி மேயர்களுக்கும், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், இந்த இயக்கத்தில் சேர்ந்து மழைநீர் சேகரிப்பின் மூலம் தண்ணீரைச் சேமிக்குமாறு வேண்டுகோள் கடிதங்களை நானே எழுதி வருகிறேன். ஊரக ஏழை மக்களுக்கு சுமை இல்லாத வகையில், கட்டுபடி ஆகின்ற, விலை மலிவான மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த இயலும். இந்த மழை நீர் அமைப்புகளால் ஏற்படும் பயன்களை அடுத்த கோடைக் காலத்தில் நாம் உணர இயலும். கடந்த ஆண்டில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை தங்களது கட்டடங்களில் ஏற்படுத்தி வெற்றி கண்ட கட்டட உரிமையாளர்களின் அனுபவங்கள் இதையே நமக்கு உணர்த்துகின்றன.

மழை நீர் சேகரிப்புக்கான மாபெரும் இயக்கம், மாநிலம் முழுவதையும் தழுவியதாய் இருக்கும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களை இந்தப் பணியில் முனைப்போடு ஈடுபடுத்தும். இதை ஒரு மக்கள் இயக்கமாக ஆக்க, தன்னார்வ நிறுவனத்தினர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், மாணவிகள் ஆகியோரை ஈடுபடுத்தி மனிதச் சங்கிலிகள், மாபெரும் ஊர்வலங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யுமாறு நான் மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளேன். கிராமங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தவும், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை நிறுவுவதால் ஏற்படும் பயன்களைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க, மகளிருக்காகவே தனிக் கருத்தரங்கங்களை நடத்தவும் நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன். மழை நீர் சேகரிப்பு அமைப்பை வீட்டில் உருவாக்க, தனது பெற்றோரைத் தூண்டி வெற்றிகரமாக அதை நிறைவேற்ற உதவும் ஒவ்வொரு மாணவனுக்கும், ஒவ்வொரு மாணவிக்கும் பரிசு வழங்கி தனிப்பட்ட முறையில் நான் கடிதம் எழுதவும் முடிவெடுத்துள்ளேன். மழைநீர் சேகரிப்பு கருத்தை மக்களிடையே பரப்புகின்ற, மாவட்ட அளவில் சிறந்த மூன்று பள்ளிகளுக்கும், மூன்று ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். மழைநீர் சேகரிப்பில் சிறந்த பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அவர்களது பணியைப் பாராட்டும் வகையில் கேடயம் வழங்கப்படும்.

மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தாத கட்டடங்களுக்கு குடிநீர் வழங்குதல் நிறுத்தப்படும். இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. என்றாலும், உங்களது தீவிர ஈடுபாட்டால் அத்தகைய சூழ்நிலை ஏற்படாது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சனையை வெற்றி கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தங்கு தடையில்லாத வளத்தைக் கொண்டு வருவதை உறுதிப்படுத்தும் வகையில், இந்த மக்கள் இயக்கத்தை மாபெரும் வெற்றி பெறச் செய்வதற்கு உங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு உங்கள் அனைவரையும் நான் மறுபடியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ★




# சான்சா நிறுவனத்தின் சென்னை மையம்

– மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் தொடங்கிவைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24–7–2003 அன்று சென்னை – பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சிறுசேரியில், இங்கிலாந்து நாட்டின், பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வணிகச் செயல்முறை நிறுவனமான (International IT Services and Business Process Company) நிறுவனத்தின் சென்னை மையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இங்கிலாந்து நாட்டின் சான்சா (Xansa) நிறுவனம், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வணிகச் செயல்முறையில் தலைசிறந்து விளங்கும் பன்னாட்டு நிறுவனமாகும். உலகின் 11 நாடுகளில் வெற்றிகரமாக இயங்கிவரும் சான்சா நிறுவனம், மிகப்பெரிய அளவில், மென்பொருள் வளர்ச்சிக்கான தனது திட்டத்தை இந்தியாவில் செயல்படுத்த விரும்பி பல்வேறு இடங்களில் விரிவான ஆய்வு மேற்கொண்டது. அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்த தமிழ்நாடு அரசு கணினி மென்பொருள் துறைக்கு வெகுவாக ஊக்கம் அளிப்பதையும், கடுமையாக உழைக்கின்ற திறமை மிகுந்த மனித ஆற்றல் இங்கு ஏராளமாக இருப்பதையும் அறிந்து தங்களது மிகப்பெரும் தகவல் தொழில்நுட்ப பூங்காவில், சான்சா நிறுவனத்தின் சென்னை மையத்தை தமிழக அரசுடன் இணைந்து அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கடந்த 19–4–2002 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின்படி, சென்னை–பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சிறுசேரியில் உள்ள சிப்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில், சான்சா நிறுவனம், 234 கோடி ரூபாய் மொத்த முதலீடு செய்து பல கட்டங்களில் இந்த மையத்தை அமைக்கிறது. 27.36 ஏக்கர் பரப்பில் உருவாகும் இந்த மையம் முழுமையாக அமையும்போது 6000 மென்பொருள் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சான்சா நிறுவனத்தின் இந்த சென்னை மையமானது முதற்கட்டமாக தற்போது 34 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சான்சா நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு.அலிஸ்டர் காக்ஸ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து மையத்தை தொடங்கி வைத்தமைக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரிட்டிஷ் நாட்டின் துணை உயர் ஆணையர் திரு.ஸ்டுவர்ட் இன்ஸ் (Mr.Stuart Innes, British Deputy High Commissioner) இந்திய–பிரிட்டிஷ் நட்புறவின் அடிப்படையில் இந்த முயற்சி முதன்மையானது என்றும், இந்திய பிரிட்டிஷ் நட்புறவுக்கு சான்சா நிறுவனத்தின் சென்னை மையம் மிகச் சிறந்த உதாரணம் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறித்த காலத்தில் இத்திட்டம் தொடங்கப்படுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துக் கொண்டார்கள். மேலும், சென்னையை, இந்தியாவின் ஏன் ஆசியாவின் Bay ஏரியாவாக உருவாக்க வேண்டும் என்பதே தமது நோக்கம் என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சான்சா நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவதில் தமிழ்நாடு அரசு மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், சான்சா நிறுவனம் மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்றும் கூறி வாழ்த்தினார்கள். •



# மக்களின் வாழ்வுக்கு முக்கிய ஆதாரம் கால்நடை

சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியின் நூற்றாண்டுவிழா (6.7.2003)வில், மேதகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. **பைரோன்சிங் ஷெகாவத்** அவர்கள் நிகழ்த்திய தொடக்கவுரை

நமது நாட்டில் மட்டுமின்றி ஆசியக் கண்டத்திலேயே கால்நடை மருத்துவத்தில் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக் கழகமாகத் திகழும் சிறப்பிற்குரிய இப்பல்கலைக் கழகத்தின் அங்கமான இந்தச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாள் இந்தப் பல்கலைக்கழகத்தின் முக்கிய நிறுவனமாகிய சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா காணும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாகும். நூற்றாண்டு காலமாகப் புகழோடு செயல்பட்டு வரும், இந்தக் கல்லூரி பல உன்னதப் பெருமைகளையும், சிறப்புகளையும், புகழ்மகுடத்தில் புதிய வைரமணிகள் பதிக்கின்ற நிலைகளையும் பெற்றுள்ளது. இந்த நிகழ்ச்சி மகிழ்ச்சி தரக்கூடியது; கொண்டாடத் தக்கது. அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர்களே, நான் இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவன். ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். எனவே, கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கையில் கால்நடைகள் எந்த அளவிற்கு முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை நான் நன்கு அறிவேன்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் படும் துன்பத்தையும், பிரச்சனைகளையும் அருகிலிருந்து பார்த்தவன் நான்.

கால்நடை மருத்துவம் என்பது ஒரு விவசாயிக்கு எந்த வகையில் உதவக்கூடியது, கால்நடை மருத்துவ நிறுவனங்கள் கிராமப்புற வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு முக்கியப் பங்களிக்கின்றன என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே, மிகவும் பழமையான இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நூற்றாண்டு விழாகொண்டாடும் இந்த வேளையில் இங்கே இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இத்தகைய மகத்தான வாய்ப்பினை வழங்கிய ஆற்றல்மிக்க தமிழக முதலமைச்சர் டாக்டர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மையீர், தங்களின் அற்புதமிகு மாநிலத்தில் உள்ள இந்தக்கல்லூரி அடைந்துள்ள சிறப்புமிகுந்த பெருமைக்காகத் தங்களுக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். கற்றலிலும், கல்வித் துறையிலும் தமிழ்நாடு நீண்டகாலப் பாரம்பரியம் கொண்ட மாநிலமாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மண்ணில் கல்விப் பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்காக, விரிவான நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கட்டமைப்பு வசதியினை அமைக்கக் கடந்த காலத்தில் ஒவ்வொரு தலைமுறையும் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டாற்றி உள்ளது.

பெருமை மிக்க தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் கல்விக் கடவுளாகிய சரஸ்வதி தமிழ்நாட்டிற்கு வழங்கிய வெகுமதியைப் போற்றும் போது,

*வீடுதோறும் கலையின் விளக்கம்*
*வீதிதோறும் இரண்டொரு பள்ளி*
*நாடுமுற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்கள் எங்கும் பலபல பள்ளி*
*தேடுகல்வி இலாததோர் ஊரைத்*
*தீயினுக்கு இரையாக மடுத்தல்*
*கேடுதீர்க்கும் அமுதம் என் அன்னை*
*கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்*

– என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த கல்விக் கலாச்சாரச் சிறப்பிற்குப் புகழ்பூத்த சான்றாகச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி இருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன்.

உலகத்தில் கால்நடைச் செல்வங்களை அதிக அளவில் பெற்றுள்ள நமது நாட்டில், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களோடு இணைந்த கால்நடைக் கல்லூரிகளைக் கொண்ட விரிந்துபட்ட அமைப்பு முறை அவசியமாகும்.

கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்குத் தேவையான அடிப்படையான வசதிகளைப் பல நிறுவனங்கள் போதுமான அளவிற்கு முழுமையாகப் பெறவில்லையோ என்று நான் அஞ்சுகின்றேன்.

குறைந்தபட்சம் 12 கால்நடை மருத்துவக் கல்லூரிகளையாவது கண்டறிந்து, அபிவிருத்தி செய்து, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் மிகச் சிறந்த ஆற்றலையும், அறிவுத் திறனையும் வெளிக்கொணரும் வகையில் சிறப்பு வாய்ந்த தேசிய மையங்களாகத் திகழச் செய்திட வேண்டும்.

கால்நடை வளர்ப்போடு இணைந்த வேளாண்மை கிராமப்புறத்தின் வாழ்க்கை முறையிலும், சமூகப் பழக்க வழக்கத்திலும், ஒரு பகுதியாக உள்ளது.

கிராமப்புறங்களில் குறைந்த நிலவுடைமை உள்ள அல்லது நிலமே இல்லாத இலட்சக்கணக்கான குடும்பங்களின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகக் கால்நடைகள் பயன்படுகின்றன. இந்த வருவாய் மட்டும் இல்லாவிட்டால், பல விவசாயிகள் கடனில் ஆழ்ந்திடும் நிலை ஏற்படும்.

பெருமளவில் பெண்கள் தீவனமளித்தல் முதல் இனப்பெருக்கம் வரை, சுகாதார பராமரிப்பு முதல் விற்பனைச் செயல்பாடு வரை ஈடுபட்டிருப்பதின் மூலம் கால்நடைத்துறையின் முக்கியத்துவம் விளங்குகின்றது. இத்துறையில் பெண்கள் அதிக அளவில் ஈடுபாடு கொள்வதால், இத்துறையின் வளர்ச்சியும், மேம்பாடும் அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், வலிமைக்கும் முக்கிய அம்சமாகத் திகழ்ந்திடும் என்பதில் ஐயமில்லை.

நண்பர்களே, கிராமப்புற மக்களின் வருவாயைப் பெருக்குவதும், வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதும் தான், ஊரக வளர்ச்சியின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இத்தகைய சூழலில் கால்நடை வளர்ப்பும், அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

நமது கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு, இந்தத் துறை மூலம் கிடைக்கக் கூடிய பெருமளவிலான சாத்தியக் கூறுபாடுகளை நாம் உணரத் தவறிவிட்டோம் என்பது எனது கருத்தாகும். வெண்மைப் புரட்சியின் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றியினை அடைந்திருக்கிறோம் என்பதில் ஐயமில்லை.

பால் உற்பத்தியில் உலகிலேயே நாம் முதலிடம் வகிக்கின்றோம். முட்டை உற்பத்தியில் நான்காவது அல்லது ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளோம்.

அதே நேரத்தில் டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகள் பெற்றுள்ள வளர்ச்சியினை நாம் உற்று நோக்கிட வேண்டும். அந்த நாடுகளோடு ஒப்பிடும் போது, நமது நாடு எந்த வகையிலும் வளம் குன்றியது அன்று.

முழுமையான வளர்ச்சியைப் பெறுவதற்கு தேவையானது மன உறுதியும், தீர்க்கமான நடவடிக்கையும் தான்.

நாம் மேலும் காலம் கடத்தக் கூடாது. இத்துறையை, முக்கியத்துவம் வாய்ந்த துறையாகக் கருதி, வளர்ச்சி பெறச் செய்யவேண்டும். ஏனெனில் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெறுவோரைக் காட்டிலும், அதிக அளவிலான எண்ணிக்கை கொண்டோருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித்தரக் கூடியதாக இத்துறை உள்ளது.

“தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் பெருமளவில் நாம் வளர்ச்சி அடைந்துள்ளோம். உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை, தன்னிறைவு பெற்றுள்ளோம். வானிலை, பாதுகாப்பு மற்றும் அணுசக்தித் துறைகளில் நமது சாதனை வியக்கத் தக்கது. தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை ஒரு வல்லரசாக உருவாகும் வகையில் வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகின்றோம். மிகவும் விரைவான வேகத்துடனும், வளர்ச்சிக் குறிக்கோளுடனும், முன்னோக்கிச் செல்கின்ற நம்பிக்கையினை நாடு தற்போது பெற்றுள்ளது”.

இந்த வகையில் இராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்கப்பட்ட, “கோபால் திட்டம்” பெற்ற வெற்றியை நினைவுகூர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். கிராமப்புறங்களைச் சேர்ந்த, படித்த வேலையற்ற இளைஞர்களுக்குச் செயற்கைக் கருவூட்டல் குறித்து, பயிற்சி அளிக்கும் திட்டம் இதுவாகும்.

இந்தத் திட்டத்தின் மகத்தான வெற்றியும், மக்கள் செல்வாக்கும் எத்தகையது என்பதை, இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்கள் வெகு விரைவில், வருமான வரி செலுத்துவோராக மாறியிருப்பதின் மூலமாகவே முடிவு செய்து கொள்ள முடியும்.

இளைஞர்களின் சுயவேலைவாய்ப்புக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கவும், கிராமப்புறங்களில், கால்நடை மருத்துவச் சேவை பெருமளவில் கிடைக்கவும், இத்தகைய நிறுவனங்கள் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இத்தருணத்தில் வளர்ச்சி மற்றும் நிருவாகம் குறித்த முக்கிய அம்சங்கள் குறித்து, எனது எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள விரும்புகிறேன். நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து, நமது சாதனை குறிப்பிடத்தக்கது என்பதில் ஐயமில்லை.

நாம், துடிப்பாற்றல் மிக்கதும், உலகிலேயே மகத்தானதுமான மக்களாட்சி அமைப்பினைப் பெற்றுள்ளோம். நமது மக்களாட்சி ஆழ வேரூன்றி உள்ளது. நமது மக்களாட்சி அமைப்பு வலிமையும், வளமும் மிக்கது.

தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் பெருமளவில் நாம் வளர்ச்சி அடைந்துள்ளோம். உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை, தன்னிறைவு பெற்றுள்ளோம். வானிலை, பாதுகாப்பு மற்றும் அணுசக்தித் துறைகளில் நமது சாதனை வியக்கத் தக்கது. தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை ஒரு வல்லரசாக உருவாகும் வகையில் வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகின்றோம். மிகவும் விரைவான வேகத்துடனும், வளர்ச்சிக் குறிக்கோளுடனும், முன்னோக்கிச் செல்கின்ற நம்பிக்கையினை நாடு தற்போது பெற்றுள்ளது.

எனினும் நாம் சந்தித்துச் சமாளிக்க வேண்டிய சவால்களையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

பெருகி வரும் மக்கள்தொகைப் பிரச்சனை பெரும் சவாலாகும்.

மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தாவிட்டால், வளர்ச்சியின் பயன் உண்மையான தாக இருக்க முடியாது.

1750 ஆம் ஆண்டு, தொழிற்புரட்சி தொடங்கிய வேளையில், இந்தியாவும், பிரிட்டனும், தொழிற்துறையைப் பொறுத்தவரை, ஏறத்தாழ ஒரே அளவிலான வளர்ச்சியைப் பெற்றிருந்தன. ஆனால் 1900– ஆம் ஆண்டில், அந்த நாடோடு ஒப்பிடும் போது, இந்தியாவின் நிலை, நூற்றுக்கு ஒன்று என்று குறிப்பிடும் வகையில் வளர்ச்சி குன்றிவிட்டது. இதற்குக் காரணம் 19– ஆம் நூற்றாண்டில் மக்கள்தொகை இரண்டு மடங்காக மேலும் பன்மடங்காகப் பெருகியது தான். ஆனால் பொருள் உற்பத்தியைப் பொறுத்தவரை மிகமிகக் குறைவாகும்.

. நாம் கற்ற பாடம் அனைவரும் அறிந்த ஒன்றே! மக்கள்தொகைக் கட்டுப்பாடு என்பது அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய குறிக்கோள். நம் அனைவருக்கும் உரிய தேசிய இலக்கு என்று கருதக்கூடிய சூழ்நிலையை அவசரத் தேவையாகக் கருதி உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

ஏழைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியச் சவாலாகும். மொத்த மக்கள் தொகையில், 30 விழுக்காடு மக்கள் வறுமை நிலையில் உள்ளனர். பெரும்பான்மையான கிராமங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்றிருக்கவில்லை. வறுமையிலிருந்து விடுபடுவது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும். வறுமையை ஒழிப்பது ஒரு ஆட்சியின் முக்கியக் கடமையாகும்.

திடசிந்தனையும், தீர்க்கமான முடிவும் கொண்டிருப்போமானால், எந்த ஒரு சவாலும் சமாளிக்க முடியாததல்ல.

நவீன முறையில் செயலாற்ற, புதிய முறைகளைக் கண்டறிய, வளர்ச்சியடைந்த வடிவமைப்பில் உற்பத்தியைப் பெருக்க, பிரச்சனைகளுக்குத் தீர்வு காண, புத்தம் புதிய புதுமையான அணுகுமுறைகளை ஊக்குவிக்க, மனித சமூகத்தின் சிந்தனை வளத்தை, முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். நமது நாட்டின் எதிர்காலத்தில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நம் தேசத்தின் விதியின் மேல் எனக்குத் தொடர்ந்த நம்பிக்கை உண்டு. நம்நாட்டை 2020–ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கும், அகக்காட்சி நம்மிடையே உணரப்படும் என்ற நன்னம்பிக்கையும் எனக்கு உண்டு. காந்தியடிகள் விளக்கிய, 'உண்மையான மக்கள் நலனை நோக்கமாகக் கொண்ட நாடாக' – வெற்றிகரமான முன்மாதிரியான குடியரசாக – 'உயர்ந்த அறக்கோட்பாடும், ஆன்மிக மதிப்பும் கொண்ட வலிமை மிக்க நாடாக – இந்தியாவை ஆற்றல் வாய்ந்ததாக நாம் அனைவரும் இணைந்து உருவாக்குவோம்.

நண்பர்களே, இந்திய நாட்டை வலிமையும் வளர்ச்சியும் கொண்ட – புகழும் வெற்றியும் பூண்ட – நாடாகக் கட்டியமைக்க வேண்டிய கடமைகளில் நம் பங்கு முழுவதையும் செய்து முடிக்க வேண்டும்.

வளர்ச்சிக்குழு உறுப்பினர்களும், ஆராய்ச்சி யாளர்களும், விஞ்ஞானிகளும் மற்றும் பணியா ளர்களும், மாணவர்களும் மேற்கொள்ளும் மனமார்ந்த தொடர்ந்த கடின உழைப்பினால், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும், பல்கலைக்கழகம் சார்ந்த அமைப்புக்களும், மதிப்புக்குரிய கூட்டாளிகளாகவும், முதன்மையான உரிமையாளர்களாகவும் விளங்கு வார்கள் என்பதில் ஐயமேதுமில்லை. இந்த நிறுவனம் வெறும் கற்களாலும், காரையாலும் மட்டுமே கட்டப்பட்ட கட்டிடமல்ல. இதன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர் பரம்பரையே ஒருங்கிணைந்து தம் உழைப்பை நல்கி உருவாக்கிய கல்வி மற்றும் திறமைக்குரிய பீடமாகும். அலகாபாத் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறிய கருத்தை நினைவு கூர்ந்து இங்கே எடுத்துக்காட்ட

**"ஏழைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியச் சவாலாகும். மொத்த மக்கள் தொகையில், 30 விழுக்காடு மக்கள் வறுமை நிலையில் உள்ளனர். பெரும்பான்மையான கிராமங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்றிருக்கவில்லை. வறுமையிலிருந்து விடுபடுவது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும். வறுமையை ஒழிப்பது ஒரு ஆட்சியின் முக்கியக் கடமையாகும்".**

விரும்புகிறேன், "ஒரு பல்கலைக்கழகம், மனித நேயத்துடன்கூடிய சகிப்புத்தன்மைக்காகவும், ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காகவும் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடவேண்டும். மேலும், அது உயர்ந்த குறிக்கோளுடன், மனிதகுலத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல உதவ வேண்டும்" என்று கூறினார்.

இந்த மாபெரும் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரியின் ஆசிரியர் குழு உறுப்பினர்களே! பல்துறைப் பணியாளர்களே! அன்புக்குரிய மாணவர்களே! உயர்தரத்தை நோக்கிய உங்கள் முயற்சியில் நேர்மை, உழைப்பு, பொறுமை மற்றும் ஈடுபாட்டையும் அதற்கும் மேலாக, சிறந்த மனிதத் தன்மையையும் நோக்கிய பாதையில் தொடர்ந்து நடைபோடுமாறு உங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் வெற்றிகளும், சாதனைகளும், உங்கள் பெருமைக்குரியதாகி, உங்கள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தின் மகுடத்தில் பதித்த மேலும் ஒரு வைரக்கல்லாக மிளிரவும் இந்தியப் பெருநாட்டின் வெற்றியாக விளங்கவும் வேண்டி, வாழ்த்துகிறேன்.

உங்கள் கல்லூரிக்கும், ஆசிரியக்குழு உறுப்பினர்களுக்கும், பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் – ஒளிமிகுந்த, பயன் நிறைந்த எதிர்காலம் அமையவும், நூற்றாண்டு விழா மிகப் பெரிய வெற்றியைப் பெறவும், வாழ்த்தி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

★ ★ ★




# ஏழைகளின் வாழ்வு மறுமலர்ச்சிக்கு கால்நடை அறிவியல் ஆராய்ச்சி வழிகோல வேண்டும்

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

“மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களின் முன்னிலையில் நடைபெறும் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி நூற்றாண்டுவிழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நூற்றாண்டு விழா நினைவு அருங்காட்சியகத்தைத் திறந்துவைக்கவும், நூற்றாண்டுவிழா மலரினை வெளியிடவும் வருகை தருமாறு நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று இங்கே வருகை தந்துள்ள மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத்தெரிவித்துக் கொள்கிறேன். நவீன மருத்துவக் கண்டுபிடிப்பு வசதிகளையும் அண்மைக் காலத்தில் வடிவமைக்கப் பட்ட நவீன கருவிகளையும் உள்ளடக்கிய நூற்றாண்டு நினைவு மருத்துவ சிகிச்சை வளாகம் ஒன்றினை ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கத் தமிழ்நாடு அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றாண்டு நினைவுவிழாக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகத்தான நிறுவனம் உழைக்கும் விவசாயிகளின் நம்பிக்கைச்சின்னமாகவும் அவர்களுக்கு வலிமைதரும் அமைப்பாகவும் திகழும் என்கின்ற நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி புகழ்மிக்க வரலாற்றினைத் தன்னகத்தே கொண்ட நிறுவனமாகும். இது தொடக்கக் காலத்தில் சைதாப்பேட்டையில் ஒரு வேளாண்மைப் பள்ளியாகத் தொடங்கி, 1903–ஆம் ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியாக வளர்ந்து, இன்று இருக்கின்ற வளாகத்தில் அமைந்து, செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் பல வகைகளில் முதன்மையான இடம் பெறுகின்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே கால்நடை



மருத்துவப் பட்டப்படிப்புக் கல்வியளித்த முதல் நிறுவனம் இதுவே ஆகும். தென்னிந்தியாவிலேயே முதன் முதலாகப் பல்வேறு சிறப்புப் பாடங்களில், முதுநிலைப் பட்டப்படிப்புக் கல்வி வழங்கியதும் இந்தக் கல்லூரியேயாகும். மிகச்சிறந்த கட்டமைப்பு வசதிகளையும், கற்பித்தல் சிறப்பையும், சிகிச்சை மற்றும் ஆராய்ச்சித்தரத்தினையும் பெற்று, இந்தியாவிலுள்ள கால்நடை மருத்துவக்கல்வி நிறுவனங்களில் மிகச்சிறந்த நிறுவனமாக இக்கல்லூரி திகழ்கிறது. புதுதில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவினரால் 2001ஆம் ஆண்டிலேயே இக்கல்லூரி முதன்மையான நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் முதன்முதலாகப் பெண் கால்நடை மருத்துவர்களை உருவாக்கிய பெருமை இந்தக் கல்லூரிக்கு உண்டு. இந்தக்கல்லூரியில் பயில்வோர்களில் 30 விழுக்காடு அளவினர் பெண்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

எந்தவித இடஒதுக்கீடும் இல்லாமல், நாடாளுமன்றத்தில் கூடப் பெறமுடியாத சாதனையினை இக்கல்லூரி பெற்றிருப்பது, இந்த மாபெரும் நிறுவனத்தின் கல்வித் தரத்தையும், முற்போக்குச்சிந்தனையையும் எடுத்துக் காட்டுகின்றது.

“நாம் செல்வ வளம் மிக்க நாட்டில் வாழ்கின்ற ஏழைகள்” என்று ஒருமுறை ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டார். உணவுத்துறையில் வியக்கத் தக்க வகையில் தன்னிறைவு பெற்று, இந்தப் புத்தாயிரம் ஆண்டில் அடி எடுத்து வைத்த போதிலும், நம்மிடையே பரவலாக வறுமை நீடிக்கின்ற நிலைமை இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரும் பத்தாண்டுகளுக்குள் வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற உறுதியை ஏற்றுள்ளோம். இயற்கை வளங்களை ஏராளமாகப் பெற்ற நாடு நம்முடையது என்பதை நாம் எண்ணிப் பார்த்தோமேயானால், வறுமை ஒழிப்பு என்பது இயலாத ஒன்று அல்ல என்பதை உணர்ந்திட முடியும். பசி என்ற சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்கானத் திறவுகோல் தொடர்ந்து வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதில்தான் உள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இயற்கை வளங்களை நாம் நமது தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டாலும், இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாப்பது நமது கடமையாகும். கால்நடை வளர்ப்பிற்கும் இந்த அணுகுமுறை பொருந்தும். ஒருங்கிணைந்த கால்நடை வளர்ச்சிக்கு ஒரு உன்னத அணுகுமுறை இன்றியமையாதது ஆகும். இயற்கைச் செல்வங்களைப் பெருமளவில் சுரண்டாமல் நம்முடைய உணவுத் தேவையினை

நிறைவு செய்ய இத்தகைய அணுகுமுறை அவசியமாகும். பெருகி வரும் மக்கள் தொகை, அதன் காரணமாக உணவு உற்பத்தியிலும், கால்நடை உற்பத்திப் பொருட்களிலும் ஏற்படும் தாக்கத்தைக் கருத்தில் கொள்ளும் போது தீவிர வேளாண்மையும் ஒருங்கிணைந்த கால்நடை வளர்ச்சியோடு இணைந்த பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் இன்றியமையாதவையாகும். நாம் சரியான கொள்கைகளை அறிமுகப்படுத்தாவிட்டால் தங்களது வாழ்விற்காகவும் வருவாய்க்காகவும், கால்நடைகளைப் பெரிதும் நம்பியிருக்கின்ற ஏழை மக்களின் சமூகப் பொருளாதார நிலையில் பெரும் பின்விளைவுகள் ஏற்படும்.

கடந்த நூற்றாண்டில் விலங்கியல் குறித்த அறிவியல் ஆராய்ச்சியால் விலங்குகள் மூலம் கிடைக்கின்ற பயன்கள் அதிகரித்துள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால், மரபுசார்ந்த விலங்குகள் அறிவியல் ஆராய்ச்சியில் பெரிதும் மேலைநாடுகளில் அதிக உற்பத்தி அணுகுமுறைக் கொள்கையின் தாக்கம் அதிகம் உள்ளது. வளர்ந்து வரும் நாட்டைப் பொறுத்தவரை, கால்நடைகளே நாட்டின் உற்பத்தி வளர்ச்சிக்கு உதவுகின்றன. உதாரணமாக வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், ஏற்றம் இறைப்பதற்கான சக்தி, பயிர் உற்பத்திக்கான உரம், விபத்துகளிலிருந்து பாதுகாப்பு, சமூக விழாக்கள் மற்றும் மதச்சார்பான நிகழ்வுகள் ஆகியவற்றிற்கு இவை உதவுகின்றன. எனவே கால்நடை அறிவியல் ஆராய்ச்சி வறுமை ஒழிப்பினை நோக்கமாகக் கொண்டதாகவும், ஏழை மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை உடையதாகவும் மாற்றப்படவேண்டும். இந்த ஆராய்ச்சி மக்களுக்கு ஏற்புடைய வகையிலும், அந்தந்தப் பகுதிகளுக்குப் பொருத்தமுடைய வகையிலும், குறைந்த செலவிலான தொழில்நுட்ப அணுகுமுறை கொண்டதாகவும், சுற்றுச்சூழல் நிலைமை, வறட்சி, தண்ணீர்ப் பற்றாக்குறை, தரம் குறைந்த உணவு ஆகியவற்றால் ஏற்படக்கூடிய நோய்களுக்குத் தீர்வு காணும் வகையிலும் அமைந்திடவேண்டும்.

விந்தணுக்கள் மற்றும் கருவளர்ச்சி முறைகள் குறித்த ஆராய்ச்சியில் கவனம் செலுத்தினால், அந்தந்த நிலத்துக்குரிய வீரியம் மிக்க கால்நடை வளர்ச்சி பெருகும். கால்நடை வளர்ப்போர், விவசாயிகள், விஞ்ஞானிகள், வளர்ச்சி முகவர்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் இணைந்து செயல்படும் வணிக நிறுவனங்கள் ஆகியோர்களை ஒருங்கிணைக்கும் பன்முக நோக்கம் கொண்ட அணுகுமுறைகளைக் கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும் ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இடையே உள்ள செயற்கைத் தடைகளை நீக்க வேண்டும். அரசின் கால்நடைச் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவும் வகையில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கால்நடை இனப்பெருக்க மையங்கள் மற்றும் செயற்கைக் கருவூட்டல் மையங்களை அமைக்க வேண்டும்.

"என்னுடைய அரசு ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை மும்முனை அணுகுமுறையுடன் செயல்படுத்திவருகிறது.

முதலாவதாக, விவசாயிகளுக்குச் சொந்தமான, தரிசு நிலங்களில் ஏறத்தாழ 20 இலட்சம் எக்டேர் நிலத்தை நீர்ச் செறிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் அபிவிருத்தி அணுகுமுறையை மேற்கொண்டு விளைநிலமாக மாற்றுவது.

இரண்டாவதாக, தரிசு நிலங்களை அபிவிருத்தி செய்து, வேளாண் சார்ந்த தொழில்களைத் துவங்க, தனியார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் தருவது. தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டார வளர்ச்சி மையங்களிலும், வேளாண் சார்ந்த தொழில்களை ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் துவக்குவது மூன்றாவது அம்சமாகும்".

விரிவான கால்நடை உற்பத்தியிலிருந்து மிகவும் விரிவடைந்த கால்நடை உற்பத்திக்கும் உள்ள இடைக் காலத்தில் அதிகமான மேய்ச்சலாலும், புல்வெளிகள் அழிவதாலும் சுற்றுச் சூழல் வளம் குறையும் ஆபத்து உருவாகிறது. இந்தக் காரணத்தினாலேயே, என்னுடைய அரசு ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத்திட்டம் ஒன்றினை மும்முனை அணுகுமுறையுடன் செயல்படுத்திவருகிறது.

முதலாவதாக, விவசாயிகளுக்குச் சொந்தமான, தரிசு நிலங்களில் ஏறத்தாழ 20 இலட்சம் எக்டேர் நிலத்தை நீர்ச்செறிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் அபிவிருத்தி அணுகுமுறையை மேற்கொண்டு விளைநிலமாக மாற்றுவது.

இரண்டாவதாக, தரிசு நிலங்களை அபிவிருத்தி செய்து, வேளாண் சார்ந்த தொழில்களைத் துவங்க, தனியார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் தருவது.



தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டார வளர்ச்சி மையங்களிலும், வேளாண் சார்ந்த தொழில்களை ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் துவக்குவது மூன்றாவது அம்சமாகும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உற்பத்திப் பொருள்களில் பால் முதலிடம் பெறுகிறது. இந்தியாவில் தற்போது ஆண்டொன்றுக்கு 80 மில்லியன் டன் பால் உற்பத்தியாவதனால், நம்நாடு உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்கிறது. சிறந்த கூட்டுறவு அமைப்பினைக் கொண்ட பால்வளத்துறை மேம்பாடு காரணமாகத் தமிழ்நாடு, நாட்டில் பால் உற்பத்தியில் 10ஆவது இடத்தை வகிக்கின்றது. கடந்த 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க ஆட்சியில் ஊழலும், பால்கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளில் தேவையற்ற தலையீடும் இருந்ததனாலும், பால்வளத்துறைக்கு வழங்குவதாக உறுதியளித்த மானியத் தொகையினை வழங்காத காரணத்தினாலும் இத்துறை பெரும் இழப்பிற்கு ஆளானது.

இச்சிக்கலிலிருந்து விடுபட எனது அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்பணமாக வழங்கிய 28 கோடி ரூபாயை மானியமாக மாற்றி ஆணை பிறப்பித்தது. மேலும் சந்தை விலைக்கேற்ப பாலின் விலையை நிர்ணயித்துக் கொள்ள, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எனது அரசு அதிகாரம் வழங்கியது. இதன் காரணமாகப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக 6988 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இலாபம் ஈட்டக் கூடிய நிலைமை உருவாகியது. மேலும் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் ரூ.16 கோடி இலாபத்தை ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்நிலை மாநிலமாக மாற்றவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்கவும், வகுக்கப்பட்ட 15 அம்சத் திட்டத்தில் கால்நடைப் பாதுகாப்பு என்பது ஒரு முக்கிய அம்சமாக இடம்பெற்றுள்ளது. கால்நடை மேம்பாடு, சிறப்பான கால்நடை மருத்துவ வசதி, பண்ணை வருமானத்துக்கு உதவுதல், மீன்வள மற்றும் மீன்வகைகளின் வளர்ச்சி ஆகியவை இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் பால் உற்பத்தியின் பெரும் வளர்ச்சிக்கு சிறுவிவசாயிகள் முக்கியக் காரணமானவர்கள் ஆவார்கள். ஆண்டு முழுவதும் வறட்சி, வேலையின்மை ஆகிய துயர் நிறைந்த காலங்களில் சிறுவிவசாயிகளுக்குக் கறவை மாடுகள், காமதேனு போன்று உதவுகின்றன. தமிழ்நாட்டின் தட்பவெப்ப சூழ்நிலைக்கும் இயற்கைச் சமன்பாட்டிற்கும் ஏற்புடைய ஜெர்ஸி கிராஸ் போன்ற கலப்பின கறவை மாடுகள் அதிக அளவிலான பால் உற்பத்திக்கு வகை செய்கின்றன. பால் உற்பத்தியில் முக்கிய இடம் வகிக்கும் எருமை இன வளர்ச்சியில்



நாம் அதிக அளவில் கவனம் செலுத்த வேண்டிய தருணம் இதுவாகும். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி போன்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் பால் தரும் எருமைகளைத் தாக்கும் நோய்களைத் தடுக்கவும், செயற்கைக் கருவூட்டல் முறைகளில் அதிக அளவிலான வெற்றிகளைப் பெறவும், உதவக்கூடிய கண்காணிப்பு அமைப்பினை உருவாக்க முன்வரவேண்டும்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.20.23 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ள தேசிய கால்நடை மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தினைச் செயல்படுத்த, எனது அரசு, மிகப் பெரிய முயற்சியாக, மாநிலக் கால்நடை அபிவிருத்தி முகமை என்கின்ற தனி அமைப்பினை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். பால் உற்பத்தியின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு மிகப்பெரியத் தடைக்கல்லாக இருப்பது கறவை மாடுகளுக்குத் தேவையான தரமான தீவனங்களையும், புல்






வகைகளையும் வழங்க இயலாத சூழ்நிலையில் விவசாயிகள் இருப்பதுதான். எனவே கறவை மாடுகளுக்குத் தேவையான மக்காச்சோளம், சோயா மொச்சை, தானிய வகைகள் போன்றவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணைச் செயல்பாடு அமைந்திடுவது அவசியமாகும். இதன் காரணமாகத்தான் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தும் அதே வேளையில், தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் சிறப்புத் தீவனப் புல் விதைப் பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும் அரசுக் கால்நடைப் பண்ணைகளில், புல் தீவன வளர்ப்புக்கான வசதிகளை அதிகரிக்க ரூ. 8 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் மேய்ச்சல் நிலங்கள் என்று வகைப்படுத்தப்பட்ட இடங்களில் பொதுச் சொத்து ஆதாரங்களை அபிவிருத்தி செய்வதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். இத்தகைய நிலப்பகுதிகளை வேறுவகையானப் பணிகளுக்காகப் பயன் படுத்துகின்ற நிலை உள்ளது. இத்தகைய நிலையினை அனுமதிக்கக் கூடாது என்று நான் கடுமையாக அறிவுரை வழங்கியுள்ளேன். வறட்சி நிவாரணப் பணியின் ஒரு பகுதியாக, இத்தகைய நிலப்பகுதியில் தீவன வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள எனது அரசு ரூ.20 கோடி அனுமதித்துள்ளது. அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள தீவன விளை நிலங்களின் பரப்பளவு 447 ஏக்கரிலிருந்து 1340 ஏக்கராக – அதாவது மூன்று மடங்கு – அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தரிசு நிலப்பகுதியில் தீவனப் பயிர் அபிவிருத்திக்காக மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2003–2004ஆம் ஆண்டில் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு ரூ.46 இலட்சத்தை நான் ஒதுக்கியுள்ளேன்.

தமிழ்நாடு சுமார் 1000 கிலோ மீட்டர் தூரமுள்ள கடற்கரையினைப் பெற்றிருப்பதால், மிகுந்த கடல் வளத்தினைப் பெற்றிருக்கிறது. மன்னார் வளைகுடாப் பகுதி கடல் வாழ் உயிரினங்களின் சொர்க்கமாகத் திகழ்கின்றது. கடலில் உள்ள இயற்கைச் செல்வங்களைப் பாதுகாக்க உலகச் சுற்றுச் சூழல் அமைப்பின் உதவியுடன் ரூ.35 கோடி மதிப்பீட்டில் மன்னார் வளகுடாப் புவியியல் பாதுகாப்பு அறக்கட்டளை ஒன்றை நான் உருவாக்கியுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உலகிலேயே முதன்முறையாக இயற்கை வளப்பாதுகாப்பிற்கான திட்டங்களை அறக்கட்டளை மூலம் செயல்படுத்தப்படுவது இதுதான் முதன்முறையாகும். இந்த அறக்கட்டளைக்குத் தொடர்ந்து நிதி வழங்குவதற்கான அமைப்பினையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம். மன்னார் வளைகுடாவில், மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், நாட்டிலேயே முதல் செயற்கைப் பவளப்பாறை அமைக்கப்பட்டுள்ளது.



"ரூ.20.23 கோடிச் செலவில் நிறைவேற்றப்படவுள்ள தேசியக் கால்நடை மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தினைச் செயல்படுத்த, எனது அரசு, மிகப் பெரிய முயற்சியாக, மாநிலக் கால்நடை அபிவிருத்தி முகமை என்கின்ற தனி அமைப்பினை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்".

வேளாண்மையில் ஆண், பெண் பாகுபாடு இருப்பது மிகவும் வேதனைத் தரக்கூடியது என்பதை நான் பலமுறை திரும்பத் திரும்பத் தெரிவித்துள்ளேன். கால்நடை வளர்ப்புத் தொழிலும் இந்த நிலைக்கு விதிவிலக்கன்று. கால்நடைகளைப் பராமரிப்பதிலும், அவற்றின் நலன்களைப் பேணுவதிலும், பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றார்கள். நாட்டில் 7 கோடிக்கும் மேலாக பெண்கள் பால்வளத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். இருந்தபோதிலும், அவர்களுடைய பொருளாதாரச் சுதந்திரம் மிகவும் கட்டுப்பாட்டுக்குரியதாக உள்ளது. பால் விற்பனைக்காக உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொருளாதார நிறுவனங்களில் தலைமை ஏற்றுள்ள பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்ற நிலை, இதனை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய நிலைமையினை மாற்றுவதற்காக, தமிழ்நாட்டில் என்னுடைய அரசு மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தோற்றுவித்து, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறது.

மகளிர் சுயஉதவிக் குழுத் திட்டம் தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. 1,31,749 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் 22,44,945 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். இந்தக் குழுக்களின் சேமிப்புத் தொகை ரூ.309.59 கோடியாக உயர்ந்துள்ளது. பால்வளத்துறையில் பெண்களின் முக்கியப் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள 7 மாவட்டங்களில் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் மூலம் 10,000 பெண்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பினை அளிக்கும் திட்டம் ரூ.6.49 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றது.

கணினி அடிப்படையிலான தொழில்நுட்ப வளர்ச்சி இப்பொழுது அனைவரையும் சென்றடைந்துள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி முக்கியப் பங்காற்றுகின்றது. எனவே கல்வியாளர்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே அதிக அளவில் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவும் வகையில் கிராமப்புறங்களில், அதிக அளவில் அறிவியல் மையங்கள் தொடங்குவது அவசியமாகும். கால்நடை வளர்ப்பில் அபிவிருத்தியடைந்த செயல்பாட்டினை எடுத்துரைக்கும் வகையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கிராமப்புறங்களில் மூன்று தகவல் தொடர்பு மையங்களை உருவாக்கியுள்ளது. மேலும் 6 கிராமங்களில் இத்தகைய தகவல் தொடர்பு மையங்களை அமைத்து, அவற்றின் செயல்பாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்த உத்தேசித்துள்ளது. தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்போருக்கு மிகுந்த பயன் அளிக்கும் வகையில்,

தொடுதிரைக் கணினி உருவாக்கப் பட்டுள்ளது. இந்தத் தொடுதிரைக் கணினி தூய்மையான பால் உற்பத்தி, தீவன மேலாண்மை மற்றும் சிகிச்சை குறித்த தகவல்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வளர்ப்புப் பிராணிகள், குறிப்பாக நாய் வளர்ப்பு குறித்த நல்ல தகவல்களை பல்வகை அறிவிப்புகள் மூலம் அறிய வகை செய்யப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். அவற்றின் மூலம் வினா–விடை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. நான் விலங்குகளிடம் குறிப்பாக நாய்களிடம் மிகுந்த அன்பும், பாசமும் கொண்டுள்ளேன். அதனால்தான் இந்தத் தொடுதிரை கணினியினைத் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள கால்நடை வளர்ப் போர்க்கு நூற்றாண்டுக் காலமாகத் தொண்டாற்றி வரும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடைப் பராமரிப்பு குறித்த, பன்முக ஆராய்ச்சிக்குச் சிறப்பான மையமாகத் திகழுகின்ற வசதியினையும், உறுதிப்பாட்டினையும் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் செயல்பாடு, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ்நாட்டின் மொத்த எண்ணிக்கையில் 70 விழுக்காட்டிற்கு மேலாக கால்நடைகளை வளர்க்கும் கிராமப்புற ஏழைப் பெண்கள், சிறுவிவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் பால்வளத்துறையில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான புதிய தொழில்நுட்ப முறைகளை உருவாக்குமாறு இக்கல்லூரியிலுள்ள அறிவியலாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது" என்கிற மகாத்மா காந்தி அவர்களின் கருத்தை நினைவுகூர்ந்திடும் வகையிலும், ஏழை விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிடும் வகையிலும், கிராமப்புறங்களுக்கான தூதுவர்களாகத் திகழ்ந்திடும் வகையிலும், இக்கல்லூரியின் மாணவர்கள் – கால்நடை மருத்துவர்கள் சிறப்பாகச் செயலாற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



"பால்வளத் துறையில் பெண்களின் முக்கியப் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள 7 மாவட்டங்களில் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் மூலம் 10,000 பெண்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பினை அளிக்கும் திட்டம் ரூ.6.49 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றது".

வறுமையை எதிர்த்து நாம் பலமுனைத் தாக்குதல் தொடுத்தாக வேண்டும். அத்தகைய செயல்பாட்டில் கால்நடைப் பாதுகாப்பும் ஒரு அம்சமாகும் என்பதில் ஐயமில்லை.

கால்நடை அறிவியல் ஆராய்ச்சியில் முன்னோடியாகத் திகழுகின்ற சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி போன்ற அமைப்புகள், தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பொருளாதார மறுமலர்ச்சியை நோக்கி வீறுநடை போடவும், நாடு வறுமையிலிருந்து விடுபடவும், பலதரப்பட்ட ஒருங்கிணைந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். அந்த ஆராய்ச்சி , ஏழை, எளிய மக்களை மையமாகக் கொண்டதாகவும், அவர்களுக்கு உதவக்கூடியதாகவும் அமைந்திட வேண்டும்".

*6–7–2003 அன்று நடைபெற்ற சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்*




# தமிழ்நாட்டின் வளர்ச்சியே எனது இலட்சியம்

இந்திய தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் குழுமியுள்ள இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசிய கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வளர்ச்சிக்கான புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கலந்துரையாடுவதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல வாய்ப்பாகும். பன்னாட்டு அளவில் பொருளாதாரத்தின் வீழ்ச்சி மற்றும் காலநிலை மாறுபாட்டால் ஏற்பட்ட சூழ்நிலைகள் தற்போது விலகியுள்ளது. இந்தியாவில் சில இடங்களில் ஓரளவு மழை பெய்து வருகின்றது. இது நாட்டின் வளர்ச்சிக்கு நல்ல ஒரு நம்பிக்கையை உருவாக்கித் தரும் வகையில் அமைந்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த வளர்ச்சிக்கான சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்வதுடன் பொருளாதாரத்தின் தேக்க நிலை மற்றும் காலநிலை மாறுபாட்டால் ஏற்பட்ட சூழ்நிலைகளை மறுஆய்வு செய்து வளர்ச்சிக்கான செயல்திட்டங்களை விரைந்து செயல்படுத்திட நம்முடைய பணிகளை முடுக்கிவிட வேண்டிய தருணம் இதுவாகும்.

இரண்டாம் கட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களை செயல்படுத்துவது குறித்து என்னுடைய தலைமையிலான அரசின் கடமையைத் தெரிவித்ததோடு வளர்ச்சிக்குத்

□ மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தேவையான கொள்கைகளை கடந்த 2003 மார்ச் மாதம் சென்னையில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் நான் ஏற்கெனவே தெரிவித்தேன்.

இந்த இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தில் பல்வேறு நடைமுறை விதிகள் தளர்த்தப்பட்டு அரசின் பணிகள் பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் பன்னாட்டுத் தரத்திற்கு அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்துதல், தங்குதடையற்ற பாதுகாப்பான மின்சாரம், மாநில அளவிலான தொழிலாளர் சீர்திருத்தம், மற்றும் வரிசீரமைப்பு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தொலைநோக்குப் பார்வை

பன்னாட்டு அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தேக்க நிலையை அடுத்து, தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இந்திய நிறுவனங்கள் தங்களுடைய செயல்திட்டங்களை, வியாபாரங்களை மாற்றி அமைப்பதுடன் புதிய சவால்களை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளன.

வளர்ச்சியடைந்த நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி போன்றவை தற்போது பென்ஷன், வேலைப்பாதுகாப்பு போன்ற பழைய நடைமுறைகளை, நம்பிக்கைகளை தகர்த்தெறிந்து இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களது சூழ்நிலைகளை மாற்றியுள்ளன. இன்றைய நிலையில் போட்டியை சமாளிப்பதே மிகப்பெரிய தலையாய பிரச்சனையாக உள்ளது.

நான் எப்போதும் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருவதால் எதைக் கண்டும் அஞ்சுவதில்லை. ஆனால் அஞ்சுபவர்கள் இன்றைய சூழ்நிலையில் பின்தங்கி காணாமல் போய் விடுவார்கள். எனவே, தொழிலதிபர்கள் என்னைப் போல வாய்ப்புக்களை எதிர்நோக்கி பயப்படாமல் தீவிரமாக அதனை சந்தித்து செயல்படவேண்டும்.

தற்போது நான் இந்திய வர்த்தக நிறுவனங்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றேன். இந்திய தொழிலதிபர்களாகிய உங்களிடத்தில் சவால்களை எதிர்கொள்ளும் உள்ளுணர்வு உள்ளதா? என்பதை உங்களிடத்தில் இந்த நேரத்தில் கேட்க விழைகின்றேன்.

## வளர்ச்சியை நோக்கி முன்னேற வேண்டும்

பன்னாட்டு அளவில் நிமிர்ந்து நின்று போட்டிகளை, சவால்களை எதிர்கொள்ளும் சக்திவாய்ந்த இந்திய பன்னாட்டு நிறுவனங்களை உங்களால் உருவாக்க முடியுமா என்று உங்களுக்கு வெளிப்படையாகவே சவால் விடுகிறேன். இந்தியத் தொழில் துறைக்குப் பாதுகாப்பாக இருக்கும் வகையில் வளர்ச்சியடைந்த இந்தியப் பன்னாட்டு தொழில் நிறுவனங்களை உருவாக்கி வெற்றிநடை போட நீங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியை சமாளிக்கும் வகையில் உங்களது நிறுவனங்களை பன்னாட்டு இந்திய நிறுவனங்களாக மாற்றியமைத்து உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழுங்கள். தொழில்துறையில் தற்போது இருமனப் போக்குக் கொண்ட எண்ணம், ஊடுருவி அமைந்துள்ளது. இவற்றைக் களைந்து இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு நம்மை ஈடுபடுத்திக்கொண்டு விரைவான, வேகமான வளர்ச்சியை நோக்கி முன்னேற வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

## சவாலை சந்திக்கத் தயார்

வழக்கமான வர்த்தகச் சிந்தனைகளை மட்டும் கவனத்தில் கொண்டு செயல்படாமல் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றது எது என்பதையும் சிந்தித்து செயல்பட வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தற்போது இந்தியத் தொழில் துறையில் நிலவும் சூழ்நிலை குறிப்பாக உற்பத்தித் துறையில் மிகவும் சோர்வடைந்த நிலை காணப்படுகிறது. பிரச்சனை என்று வந்தால் எவ்வளவு பெரிய சவாலாக இருந்தாலும் அதைக்கண்டு பயந்து ஒருபோதும் நான் பின்வாங்குவது இல்லை. மாறாக சவாலை சந்திக்கத் தயாராக இருந்து வருகிறேன்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இந்திய தொழில்துறையில் ஒரு மந்தமான பொருளாதார தேக்கநிலை இருந்து வருகிறது. இதற்குக் காரணம் உலகப் பொருளாதாரத்தின் தேக்கநிலையும், மற்றும் வறட்சியும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால் இந்த ஆண்டு தொழில்துறையில் தமிழ்நாட்டில் 10 சதவீத வளர்ச்சிக்கான இலக்கை நிர்ணயித்து செயல்பட்டு வருகின்றேன். இந்த இலக்கை எட்டுவது என்றும் உறுதி பூண்டுள்ளேன். கடந்த காலத்தின் நிகழ்வுகளை நிச்சயமாக வெற்றி கொள்ள முடியும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். சந்தேகப்படுபவர்கள் இறுதியில் மண்ணைக் கவ்வுவது நிச்சயம்.

**“தமிழ்நாட்டில் துணி மற்றும் ஆயத்த ஆடை வளர்ச்சிக்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. திருப்பூர் மற்றும் சென்னையில் ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழிற்சாலைகள் மையம் நிறுவி வருகிறோம். மேலும் மதுரையில் விரைவில் இதுபோன்ற ஒரு மையம் உருவாக்கப்படும்.”**

தமிழக அரசின் இந்தப் புதிய வளர்ச்சிக்கான செயல் திட்டத்தில் நீங்கள் எல்லோரும் இணைந்து உங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த செயல்திட்டத்தை உற்சாகமுடன், அதே நேரத்தில் தைரியத்துடன் நாம் செயல்படுத்தத் தவறினால் பொருளாதாரத்தில் பின்தங்கி விடுவோம். பன்னாட்டு நிர்வாக இயல் வல்லுநர் சி.கே.பிரகலாத் ஏற்கெனவே உங்களிடம் சில முக்கியத்துறைகளில் கவனம் செலுத்த வேண்டுவது குறித்து கூறினார்.

## வெற்றிக்கு உறுதுணை

சி.கே.பிரகலாத் கூறிய கூற்றிலிருந்து ஒன்றை இங்கு கூற விழைகின்றேன். அதாவது, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம், ஏற்றுமதியின் தரம், பன்னாட்டுச் சந்தையில் நம்முடைய தரத்தை, மதிப்பை நிலைநிறுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், உள்நாட்டுத் தரம், சந்தை, வேலைவாய்ப்பு, இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமான அம்சமாகும்.

எனவே தான், நான் திரும்பத் திரும்ப ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி தமிழ்நாட்டிற்கு அவசியம் என்பதை வலியுறுத்தி வருகின்றேன். ஏற்றுமதி மூலம் தமிழக அரசுக்கு வரி வருவாய் வராவிட்டாலும் இந்த அரசு தொழில்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உங்களுக்கு பக்க பலமாக இருக்கும். தொழில்துறையில் அளவிற்கதிகமான வாய்ப்புகள் உள்ளதாலும் ஒத்துப்போகின்ற பண்பு மற்றும் முடிவு எடுக்கும் திறன் ஆகியவை ஒருங்கே பெற்றுள்ள சூழ்நிலையால் நம்முடைய தொழில் துறைக்கு அதிக அளவு வாய்ப்புகள் உள்ளதால் இந்த முடிவை அரசு எடுத்துள்ளது. பன்னாட்டு வர்த்தக சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் இந்திய நிறுவனங்கள் தரமான குறைந்த பொருட்செலவை பன்னாட்டுச் சந்தைகளைக் கைப்பற்றும் வகையில் பொருட்களை உற்பத்திச் செய்ய வேண்டும். இதே நடைமுறையை உள்நாட்டுச் சந்தையிலும் அமல்படுத்த வேண்டும்.

சி.ஐ.ஐ. தலைவர் ஆனந்த் மகேந்திரா தனது ஸ்கார்ப்பியோ ஜீப்பை வாகனங்கள் உற்பத்தியின் தலைமை நகரமாக விளங்கும் அமெரிக்காவின் டெட்ராய்ட் நகரிலேயே விற்றுள்ளார். இதேபோன்று இந்தியாவில் அளவில் இதுபோன்ற தொழிலதிபர்கள் விரைவில் வரவேண்டிய நிலையில் உள்ளோம்.

தமிழ்நாடு, குறிப்பாக சில துறைகளில் அதிக கவனம் செலுத்தி உலகளவில் தலைமை வகிக்க முடியும். இது உங்களுக்கு சந்தேகமாக இருக்கலாம். இங்கே கூடியிருக்கக்கூடிய 10 பெரிய தொழில் நிறுவனங்களின் அதிபர்களை தமிழ்நாட்டில் தொழில் துவங்க அழைக்கின்றேன். உங்களுடைய பன்னாட்டு அளவிலான நிறுவனங்களை தொடங்குவதற்கு சரியான, தகுதியான இடம் தமிழ்நாடு தான். இது குறித்து உங்களுடைய கருத்துக்களை எனக்கு நீங்கள் தெரிவிக்கலாம். நீங்கள் வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடன் தைரியமாக திட்டம் தீட்டுங்கள். நாங்கள் உங்களுடன் இணைந்து பணியாற்றி உங்களுடைய வெற்றிக்கு உறுதுணையாக உங்களுடன் இணைந்து செயல்பட தயாராகவுள்ளோம்.

## பன்னாட்டுத்தரம்

இதனை செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை




தயாரிக்கப்பட்ட டிராக்டர்கள் அமெரிக்காவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. நல்ல தரமான தயாரிப்புக்கு இவை உதாரணமாக உள்ளது. தங்களுடைய தயாரிப்புகளை இந்திய தொழில் அதிபர்கள் பன்னாட்டு தரத்திற்கு தயாரிக்க முன்வரவேண்டும். நமக்கு அதிக உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தற்போது தமிழ்நாட்டில் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி மற்றும் ஒசூரில் செயல்பட்டு வருகின்றது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் பன்னாட்டுப் போட்டிகளை சமாளிக்கும் வகையில்

அனைத்துத் தரப்பிலும் பன்னாட்டுத் தரம் வாய்ந்ததாக வடிவமைக்கப்பட வேண்டும்.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு புதிய செயல்திட்டங்களையும் குறிப்பாகத் தொழிலாளர் மற்றும் அவர்களுடைய பணி சலுகைகள் குறித்து எளிமையான நடைமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இந்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தி சிறப்புப் பொருளாதார மண்டலங்களை பன்னாட்டுத் தரத்தில் இந்திய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களை அமைக்க முன்வரவேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

உலகில் பன்னாட்டு அளவில் நாம் ஒருசில குறிப்பிட்டத் துறைகளில் முதன்மையாக செயல்படலாம் என்று கூறினேன். அவற்றில் சிலவற்றை இங்கு உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்.

## அரசு ஒத்துழைப்பு தரும்

சென்னையிலிருந்து ஏற்றுமதியாகும் மோட்டார் வாகன உதிரிபாகங்களின் மதிப்பு 250 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகம் என்று அறிகின்றேன். தமிழ்நாடு இந்திய மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தியில் 35 சதவிகிதம் என்ற அளவை பிடித்துள்ளது. ஏன் நம்மில் சில நிறுவனங்கள் தங்களுடைய இலக்கை உயர்த்தி பன்னாட்டு சந்தையில் போட்டியிடும் வகையில் தங்களுடைய இலட்சியங்களை மாற்றிக்கொள்ளக் கூடாது. இன்னும் மூன்று ஆண்டுகளில் ஒரு பில்லியன் டாலர் அளவுக்கு மோட்டார் வாகன உதிரி பாகங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு செயல் வரைவுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்வதோடு அதனை செயல் படுத்துவதற்கு என்னுடைய தலைமையிலான அரசு முழு ஒத்துழைப்புத் தரும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மத்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் ஏப்ரல் 2003 வெளியிட்டுள்ள முதலீட்டுச் சந்தை விவரங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில் ஒரு கணிசமான அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 2001 முதல் ஏப்ரல் 2003 வரை உற்பத்தித்துறை முதலீட்டில் அதிக அளவு வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது. இது தமிழ்நாடு எந்த அளவிற்கு தொழில் வளர்ச்சியை செயல்படுத்தி வருகின்றது என்பதற்கு ஆதாரமாகும்.**

தற்போது துணி, நூல் மற்றும் ஆயத்த ஆடை தொழிலில் பல்வேறு புதிய வாய்ப்புகள் உருவாகி உள்ளது. 2005–ஆம் ஆண்டு லைசென்ஸ் முறை ஒழிக்கப்படும் போது தரம் மற்றும் உற்பத்திச் செலவை கட்டுப்பாடுள்ள நிறுவனங்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி வளர்ச்சியடைய முடியும். இந்தப் பிரச்சனையை மிகவும் விரிவான வகையில் பார்க்கவேண்டும் என்று இந்த அமைப்பைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இயற்கையாகவே துணி, நூல், மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தித்துறையில் பாரம்பரியத்தைக் கொண்டது. பன்னாட்டுச் சந்தையில் போட்டிப்போடும் வகையில் இதனை மாற்றியமைக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நான் செய்து தருவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

தமிழ்நாட்டில் துணி மற்றும் ஆயத்த ஆடை வளர்ச்சிக்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. திருப்பூர் மற்றும் சென்னையில் ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழிற்சாலைகள் மையம் நிறுவி வருகிறோம். மேலும் மதுரையில் விரைவில் இதுபோன்ற ஒரு மையம் உருவாக்கப்படும்.

## உடனுக்குடன் தீர்வு

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தேக்க நிலையின் காரணமாக ஆயத்த ஆடைத் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் விரைவில் களையப்பட்டு புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்படும்.

அடுத்ததாக, தோல் பொருள் உற்பத்தித் துறையை பொறுத்தமட்டில் இதன் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள மாசுக்கட்டுப்பாட்டு வாரிய நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டு, இதன் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுற்றுச்சூழல் பிரச்சனைகளை உடனுக்குடன் அணுகி தீர்வு கண்டு வருகிறோம். மேலும் தோல் பொருட்களான காலணி, ஆயத்த ஆடைகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் இந்த அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

பன்னாட்டுத் தரத்தில் இந்திய தோல் உற்பத்தி நிறுவனங்களை உருவாக்க முன்வரவேண்டும் என்பதே இன்று நான் உங்களை கேட்டுக்கொள்வது ஆகும். சில நிறுவனங்கள் பன்னாட்டுத் தரத்தில் நிறுவனங்களை அமைக்க முன்வந்துள்ளன என்பதை நான் அறிவேன். தற்போது நாம் தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவில்

பிரபலமான "கியூக்கி" போன்ற தோல் ஆடை தயாரிப்புகளை தமிழ்நாட்டில் தயாரிக்க இந்திய தோல் தொழில் நிறுவனங்கள் முன்வருவதுடன் அவற்றை பன்னாட்டுச் சந்தையில் விற்பனை செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கெனவே துவங்கிவிட்டது. செயின்ட் கோபைன் நிறுவனத்தைச் சேர்ந்த சந்தானம் என்பவர் இந்திய தொழில் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கைகளை முன்நின்று செயல்படுத்துவார்.

## உற்பத்தித்துறையில் 10 சதவிகித வளர்ச்சி

அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 2003 புதிய தொழிற் கொள்கை அறிவிக்கப்படும், அதன் பின்னர் முழு அளவில் செயல்படுத்தப்படும். இதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும். நான் சில உதாரணங்களைத்தான் உங்களிடம் தெரிவித்துள்ளேன். இன்னும் இதேபோன்று பல்வேறு துறைகள் உள்ளன. அவை மோட்டார் பம்பு, மூலிகை மருத்துவ தாவரங்கள், மலர் ஏற்றுமதி, உயிர் தொழில்நுட்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவை இந்திய தொழில் அதிபர்களாகிய நீங்கள் என்னுடைய முயற்சிக்கு ஏற்ற வகையில் பன்னாட்டு அளவில் இந்திய பன்னாட்டு நிறுவனங்களை அமைக்க முன் வருவீர்கள் என்று நான் நம்புகிறேன். இதன் மூலம்தான் உற்பத்தித்துறையில் தமிழகத்தில் 10 சதவிகித வளர்ச்சி என்ற பொருளாதார இலக்கை எட்ட முடியும்.

மத்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் ஏப்ரல் 2003 வெளியிட்டுள்ள முதலீட்டுச் சந்தை விவரங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில் ஒரு கணிசமான அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 2001 முதல் ஏப்ரல் 2003 வரை உற்பத்தித்துறை முதலீட்டில் அதிக அளவு வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது. இது தமிழ்நாடு எந்த அளவிற்கு தொழில் வளர்ச்சியை செயல்படுத்தி வருகின்றது என்பதற்கு ஆதாரமாகும்.

ஆனால், அதே நேரத்தில் உற்பத்தி மற்றும் அதன் மதிப்பு கூடுதல் ஆகியவற்றை பார்க்கும் போது நம்மை நாமே சுயபரிசோதனை செய்ய வேண்டிய நிலையில்தான் நாம் உள்ளோம். இந்தியத் தொழில் கூட்டமைப்பு ஒவ்வொரு துறைகளிலும் விரைவான, வேகமான வளர்ச்சியை எட்டுவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை பட்டியலிட்டு அதற்கு ஒரு செயல்திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முயற்சிக்கு என்னுடைய தலைமையிலான அரசு முழு ஒத்துழைப்பை நல்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது சந்தைக்கும், மாநிலத்துக்கும் உள்ள இடைவெளியை நிரப்பும் மற்றொரு முக்கியமான பிரச்சனை குறித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகின்றேன்.

உலக வங்கியின் முதன்மை பொருளாதார ஆலோசகர் நிக்கோலாஸ் ஸ்டெர்ன் சமீபத்தில் பெங்களூரில் பேசியதிலிருந்து சிலவற்றை மேற்கோள்காட்ட விழைகின்றேன்.

## இரண்டாம் கட்ட சீர்திருத்தங்கள்

மாநில அரசு என்பது சந்தைக்கு மாற்று அல்ல. மாறாக அது முக்கியமான காரணியாகும். நம்முடைய கடந்த கால படிப்பினையிலிருந்து சந்தைக்கு அரசு முக்கியம். அதேபோன்று அரசுக்கு சந்தைகள் தேவைப்படுகின்றது. தற்போதைய பொருளாதார வாய்ப்புக்களை வடிவமைப்பதற்குத் தேவையான மக்களுடைய பங்களிப்பையும், உதவியையும் அவர்களுடைய தகுதியையும் ஒருங்கிணைப்பது என்பது அரசின் முன் உள்ள மிகவும் சிக்கலான தலையாயப் பிரச்சனையாக உள்ளது.

சிறப்பான செயல்பாடு உள்ள மாநிலம் என்பதற்கு ஒப்பந்தங்கள் மதிக்கப்படுகின்ற விரைவான சூழ்நிலை நிலவவேண்டும். அதற்கு செயல்படும் சந்தைகள் வேண்டும். அவ்வாறு சந்தைகள் சிறப்பாக செயல்பட தேவையான அடிப்படை கட்டுமான வசதிகள், நிதி, நிருவாக அமைப்புகள், சக்தி வாய்ந்த நிருவாக அமைப்புகள், சட்டம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள், பாதுகாப்பு ஆகியவை அடிப்படையான அம்சங்களாகும். இதனை மேற்கொள்ள அரசின் பணி முக்கியப் பங்காற்ற வேண்டும்.

இன்போசிஸ் நிறுவனத்தின் தலைவர் நாராயணமூர்த்தி அரசின் அதிகாரவரம்பை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். சட்டம் ஒழுங்கு, திறமையான கண்காணிப்பு முறைகள் மற்றும் செயல்படும் கட்டுமான வசதிகள் ஆகியவற்றை உருவாக்கித் தரவேண்டும் என்பதில்தான் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். மேற்கண்ட வகையில்தான் இரண்டாம் கட்ட சீர்திருத்தங்களை செயல்படுத்துவற்கு வேண்டிய முக்கியமான காரணிகளாகும்.

நிக்கோலாஸ் ஸ்டெர்ன் கூற்றின்படி மாநில அரசில் தொழில்துறைக்கு மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. மாறாக சமூக, அரசியல், பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்றவாறு அரசு உடல் நலம் மற்றும் கல்வி ஆகியவற்றில் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்த பொதுமக்கள் தங்களுடைய உரிமைகளை விட்டுக்கொடுத்து அரசுடன் இத்திட்டங்களை செயல்படுத்த எந்தளவுக்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்பது சிந்திக்க வேண்டியது ஆகும். அப்படியொரு சூழ்நிலையில் கேள்வி எழுமானால் மாநில அரசு இதுபோன்ற வசதிகளை செய்துதர வேண்டும் என்பது அவசியமல்ல. என்னுடைய தலைமையிலான அரசின் கொள்கைகள், லட்சியங்கள் விரைவான, வேகமான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தரமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**"தற்போது நாங்கள் புதிய தொழில் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுத்து வருகிறோம். விரைவில் இது வெளியிடப்படும். இந்த புதிய தொழில் கொள்கை தமிழ்நாட்டில் விரைவான வேகமான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, சரியான சூழ்நிலையை உருவாக்கித் தரும் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மையான அதே நேரத்தில் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சியடைந்த மாநிலமாக்க வேண்டும் என்பது என்னுடைய இலட்சியமாகும்."**

## சிறப்பாக செயல்படுவோம்

என்னுடைய தலைமையிலான அரசின் கொள்கைகளில் விரைவான, வேகமான வளர்ச்சியை எட்டுவதன் மூலம் ஒரு சுமுகமான சூழ்நிலை நிலவும் சமூகத்தை உருவாககுவது எங்களுடைய இலக்கு. வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்தி வளமான, வலிமையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான். மாநில அரசின் நிதி செலவுகளை இந்த அடிப்படையில்தான் மாற்றி அமைத்து வருகின்றோம். பன்னாட்டு அளவில் உருவாகியுள்ள புதிய வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் மாநிலத்தின் திட்டங்களை மாற்றி அமைத்து வருகின்றோம்.

இந்த அரசு எதனை செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து தெளிவாக நான் ஓர் முடிவெடுத்துள்ளேன். அதனடிப்படையில் சிறப்பாக செயல்படுவோம் என்பதை உங்களுக்கு உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். புகழ்ச்சியான விஷயங்கள் எவை என்பதும் அதனால் உருவாகும் பொருளாதார இழப்புகள் என்ன என்பதும் நான் நன்கு அறிந்துள்ளேன். தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற தெளிவான குறிக்கோளோடு நான் செயல்பட்டு வருகின்றேன். அதன் அடிப்படையில் உங்களுடைய தொழில் திட்டங்களை பன்னாட்டு தரத்தில் துவங்கி இன்னும் நீங்கள் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மூன்றாவதாக, வர்த்தக நிறுவனங்கள் எவ்வாறு வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்கின்றன என்றும் அவை எப்படி வடிவமைக்கப்படுகின்றன என்பதும் முக்கியமானவையாகும். சிறப்பான வர்த்தக நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு உற்பத்திச் செலவினை குறைத்தல், மதிப்பை அதிகரித்தல் மற்றும் பழங்கால வர்த்தக நடைமுறைகளை மாற்றியமைத்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

## மாநில அரசு உதவும்

பல்வேறு வளர்ந்த நாடுகளின் பழைய பொருளாதாரத்தின் அடிப்படையில் செயல்பட்டு வந்த பல்வேறு நிறுவனங்கள் கட்டாயமாக மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் நமக்கு அதிகளவில் வாய்ப்புகள் உருவாகியுள்ளன. பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளில் தங்களின் நிறுவனங்களை மூடிவிட்டு வளரும் நாடுகளில் தொழிற்சாலைகளை துவங்க பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. அவற்றை நமக்கு சாதகமாக பயன்படுத்தி இந்திய கடலோரத்தில் அமைந்துள்ள சென்னை நகரில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சென்னை தகவல் தொழில்நுட்ப விரைவு சாலையில் பல்வேறு பன்னாட்டு கணினி நிறுவனங்கள் தங்களது மென்பொருள் மையங்களை அமைத்து வருகின்றன. இந்திய நிறுவனங்கள் தங்களுடைய பன்னாட்டுத் தரத்திலான நிறுவனங்களை அமைப்பதற்கு இதுவே பொன்னான நேரமாகும். தகவல் தொழில்நுட்பத்தில் அடிப்படை வசதிகள் பழங்கால பளுவை தற்போது குறைத்துள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொண்டு விரைவாக செயல்படுபவர்கள்தான் வெற்றிபெற முடியும் என்பது மட்டும் உறுதி. மந்தமான வகையில் தொழில் நடத்துபவர்கள் மிகவும் நீண்ட காலத்திற்கு தங்களுடைய வியாபாரத்தை தொடர முடியாது. பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதற்காக அந்த நிறுவனங்களை மூடிவிட்டு வளரும் நாடுகளில் தங்களுடைய நிறுவனங்களைத் தொடங்க விரைந்துள்ள இந்நேரத்தில் நாம் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி சென்னையில் பன்னாட்டுத் தரத்தில் புதிய கொள்கைகளின்படி நம்முடைய சொந்த நிறுவனங்களை பன்னாட்டுத் தரத்தில் அமைத்து பயன்பெற வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பன்னாட்டுச் சந்தையில் இந்திய தொழில்துறை போட்டிகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் மற்றும் பன்னாட்டுத் தரத்திற்கு இணையாக இந்திய பன்னாட்டு தொழில் நிறுவனங்களை உருவாக்கி பன்னாட்டுச் சந்தையில் பல துறைகளில் போட்டி போடுவது குறித்து உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். இதனைச் செயல்படுத்துவதற்கு தேவையான சூழ்நிலையை உருவாக்கித் தருவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மறுபரிசீலனை செய்து மாநில அரசு உங்களுக்கு உதவும்.

பன்னாட்டு நிறுவனங்களில் இந்திய நிறுவனங்கள் புதிய தொழில் செயல் திட்டங்களை வடிவமைத்து செயல்பட வேண்டும். அது குறைந்தபட்ச முதலீடு தரத்திற்கு

முன்னுரிமை, குறைந்த செலவில் உற்பத்தி, பன்னாட்டுச் சந்தையில் ஏற்படும் மாறுபாடுகள் மற்றும் பன்னாட்டுத் தரத்தில் தொழில்கூடங்களை அமைத்தல் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். இதுதான் என்னுடைய பரந்த எண்ணமாகும்.

## தொழில் குழு

இதில் நாம் கவனத்துடன் செயல்படாவிட்டால் தற்போதுள்ள 5 சதவீத வளர்ச்சியிலேயே போராட வேண்டியிருக்கும். மாறாக நம்முடைய இலக்கான 10 சதவீத உற்பத்தி வளர்ச்சியை எட்ட இயலாது. இது தொடர்பாக என்னுடன் தொடர்பு கொண்டு உங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வசதியாக முதலமைச்சரின் தொழில் குழு ஒன்று என்னுடைய தலைமையிலான அரசு விரைவில் நியமிக்க உள்ளது.

தற்போது நாங்கள் புதிய தொழில் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுத்து வருகிறோம். விரைவில் இது வெளியிடப்படும். இந்தப் புதிய தொழில்கொள்கை தமிழ்நாட்டில் விரைவான வேகமான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, சரியான சூழ்நிலையை உருவாக்கித் தரும் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மையான அதே நேரத்தில் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சியடைந்த மாநிலமாக்க வேண்டும் என்பது என்னுடைய லட்சியமாகும்.

## விவசாயத்துறையில் வேகமான வளர்ச்சி

அடிப்படைக் கட்டுமான துறையான விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தகவல் பரிமாற்றம், நீர் மேலாண்மை, பணப் பயிர்கள், தோட்டக் கலை பயிர்கள் மற்றும் தாவர எண்ணெய் ஆகியவற்றைச் செயல்படுத்தி அடிப்படைத் துறையான விவசாயத்தை மேம்படுத்துவதன் மூலம் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்களை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்து வர முடியும்.

இந்திய உள்நாட்டுச் சந்தை வேகமாக விரிவடைந்து வருகிறது. இதற்கு விவசாயத் துறையில் ஏற்பட்டு வரும் வேகமான வளர்ச்சியே காரணம் ஆகும். உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு அதனுடைய நடைமுறை அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். வளர்ச்சிக்குத் தேவையான சிலவற்றை உங்களிடம் பகிர்ந்து கொண்டு அது குறித்து விவாதித்து அவற்றைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நடைமுறைகள் குறித்து விரிவாக விவாதித்து உங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பன்னாட்டு அளவிலான நிறுவனங்களை உருவாக்கி பன்னாட்டுச் சந்தையில் போட்டியிடும் வகையில் தொழில் அதிபர்கள் செயல்பட இந்திய தொழில் கூட்டமைப்பு உதவ வேண்டும். இந்த இலக்கை எய்துவதற்குத் தேவையான செயல்திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். தமிழ்நாடு உங்களுடைய வளர்ச்சிக்கு அடிப்படையான இடம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய தொழில் கூட்டமைப்பும், என்னுடைய அரசும் இணைந்து தகவல் தொழில்நுட்பப் பகுதியில் அறிவுத் தொழில் நகரியத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறு குறித்து ஆய்வு நடத்த உள்ளோம்.

இந்த ஆய்வையடுத்து தயாரிக்கப்படும் செயல்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த உள்ளோம். இந்த ஆயிரத்தாண்டின் வளர்ச்சியில் இலக்கை எட்டுவதற்கு அறிவு சமுதாயத்தின் உறுப்பினர்களாகிய நாம் பெற்ற அறிவைப் பயன்படுத்த நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன் உங்களுடைய சென்னைப் பயணம் இனிமையாக அமைய என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தேசியக் கவுன்சில் கூட்டத்தை நடத்துவதற்கு சென்னையைத் தேர்ந்தெடுத்ததற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் சென்னையை மறுநிர்மாணம் செய்ய உள்ளோம். ரூ.18 ஆயிரம் கோடி முதலீட்டில் அடுத்த பத்தாண்டுகளில் புதிய தலைமுறை நகரத்தை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனுடைய பலனை விரைவில் நீங்கள் உணர்வீர்கள். மேலும் சென்னை அருங்காட்சியகத்திற்கு சென்று பார்த்து மகிழுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

பன்னாட்டுத் தரத்தில் உங்களுடைய தொழில் நிறுவனங்களின் மையத்தை சென்னையில் அமைக்கவும் தற்போது நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களைச் சந்திக்கவும் தமிழக அரசோடு ஒத்துழைப்புக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். இது முற்றிலும் வர்த்தக ரீதியான அளவில் மட்டும்தான். பெர்ரண்ட் ரஸ்ஸல் கூற்றின்படி ''மனிதனுக்கு தேவையானது அறிவு மட்டுமல்ல; அவனுக்கு வேண்டிய பிறவும் உள்ளன. வியாபாரத்தில் வெற்றி என்பது உறுதியானது அல்ல; அது ஒரு கானல்நீர். அதில் தைரியமாக கற்பனைகளோடு முன்னோக்கி செல்ல வேண்டும்''. ஆல்பர்ட் ஐன்ஸ்டின் கூறியபடி அறிவைவிட கற்பனை மிகவும் முக்கியமானது. ஆனால் இன்றைய உலகில் நாம் எதை செயல்படுத்த எண்ணுகிறோமோ அதைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதே இன்றியமையாததாக உள்ளது. இந்திய நிறுவனங்கள் இதனை செயல்படுத்தி உங்களுடைய ஒவ்வொரு தைரியமான நடவடிக்கைகளும் வெற்றிபெற எனது வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 25.07.2003 அன்று தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசிய கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.*



## இரண்டாம் பசுமைப்புரட்சி கண்ட இணையற்ற முதலமைச்சரின்

# பயறு கிராமத் திட்டம்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. **இரா.ஜீவானந்தம்**

அனைத்து நாடுகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும், வேளாண் விஞ்ஞானிகளும் போற்றும் ஆற்றலும் திறமையும் மிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தொலைநோக்குப் பார்வையோடு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இயற்கை இடர்ப்பாடுகளால் வேளாண்மை பாதிக்கப்படுவது வழக்கமாக இருந்தபோதிலும், அத்துறையில் புதிய முறைகளையும் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி, அதன் வளர்ச்சிக்கு ஆக்கம் தந்து, தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்கிய உன்னத ஆட்சியாளர் என்கிற பெருமையினை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெற்றுள்ளார்கள்.

நீரின்றி வறண்டு, எந்தவித சாகுபடியும் செய்யப்படாமல் வீணாகக் கிடக்கும் நிலங்களில் பயிர் செய்து பயன்பெற "ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்". கிடைக்கின்ற நீர் ஆதாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்தி சூழ்நிலைக்கேற்ற பயிர்களை விளைவித்து, விவசாயிகளின் நலன் காக்கும் "மாற்றுப் பயிர் பல நோக்குத் திட்டம்" போன்றவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் தோன்றி, செந்தமிழ் நாடு செழிக்க, செயல்வடிவம் பெற்று வருகின்றன.

*"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்*
*உழந்தும் உழவே தலை"*

– என்று வள்ளுவப்பெருந்தகை, வேளாண்மையின் சிறப்பினையும், சமுதாய வளர்ச்சிக்கு உழவர்களின் பங்களிப்பினையும் அழகுற வர்ணிக்கின்றார்.

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"*

– என்று மகாகவி பாரதியார் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

*"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று"*

உலகிற்கு பறைசாற்றிடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

*"விவசாயிகள் பூமித்தாயின் முதல் குழந்தை"*

– என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

விவசாயிகளின் நலம் பேணிடும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் உருவாகிடும் சிறப்பானத் திட்டங்களில் ஒன்றுதான், "பயறு கிராமத் திட்டம்" ஆகும்.

மனித சமூகம் உண்ணும் உணவு, பலவகை யானவையாகும். அவற்றில் புரதச்சத்து மிக்கது, பயறு வகையாகும். அதன் காரணமாக உணவில் அது முக்கிய இடம் வகிக்கின்றது.

உலக நாடுகளின் பயறு உற்பத்தியினை உற்றுநோக்குவோமேயானால், இந்தியாவில் தான் அதிக அளவில் பயறு உற்பத்தியாகின்றது என்று வேளாண்மை குறித்த புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகளில் உற்பத்தியாகும் பயறுகளின் மொத்த அளவில் இந்தியாவில் சுமார் 25 விழுக்காடு அளவிற்கு பயறு உற்பத்தியாகின்றது என்று அந்தப் புள்ளி விவரம் கூறுகின்றது.

சராசரி மகசூலைப் பொறுத்தவரை, இந்தியத் துணைக் கண்டத்தில் பயறு உற்பத்தி எக்டேர் ஒன்றுக்கு 576 கிலோவாக உள்ளது.

அதேவேளையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த அளவு 400 முதல் 450 கிலோ வரை உள்ளது.

தமிழ்நாட்டை அனைத்துத்துறைகளிலும் வளர்ச்சி பெறச் செய்து இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழச் செய்திட பாடுபடும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சராசரி பயறு உற்பத்தியினை தற்போது எக்டேருக்கு 450 கிலோவாக இருப்பதை 650 கிலோவாக உயர்த்த வழிவகை காணும் வகையில் உருவாக்கிய திட்டம்தான் "பயறு கிராமத் திட்டம்".



நடப்பாண்டில் (2003–2004), அறிமுகப்படுத்தப் பட்ட இந்த திட்டம், தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 கிராமங்கள் வீதம் 17 மாவட்டங்களில் மொத்தம் 170 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் 100 எக்டேர் வீதம் 170 கிராமங்களில் மொத்தம் 17,000 எக்டேரில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த பயறு கிராமத் திட்டம், பயறு உற்பத்தித் திறனை எக்டேர் ஒன்றுக்கு 450 கிலோவிலிருந்து 650 கிலோவாக உயர்த்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பதோடு, மழை நீர் சேகரிப்பு, நவீன பயிர் வேளாண்மை, அறுவடைக்குப் பின் தானியங்களை பதப்படுத்துதல் ஆகியவை தொடர்பான தொழில்நுட்பங்களை செயல்படுத்துதல் – ஒவ்வொரு துளி மழைநீரையும் பயன்படுத்தி அதிக மகசூல், அதிக வருவாய், பெருமளவில் வேலைவாய்ப்பை உருவாக்குவது ஆகியவற்றையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப் படுகின்றது.

இந்தத் திட்டம், விவசாயிகளுக்குப் பல வகையிலும் பயனளிக்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எக்டேருக்கு 20 கிலோ என்கின்ற அளவில்



*தஞ்சாவூர் மாவட்டத்தில் "பயறு கிராமத் திட்டம் தொடக்க விழா"*

50 விழுக்காடு மானிய விலையில் விதை வழங்கப்படுகின்றது.

பூக்கும் தருணத்தில் இலை வழியாக மணிச்சத்து வழங்க டி.ஏ.பி. உரக்கரைசல் தெளிக்கும் வகையில் எக்டேர் ஒன்றுக்கு 9 கிலோ டி.ஏ.பி. உரம் மானிய விலையில் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒரு எக்டேருக்கு உயர்ந்தபட்சமாக ரூ.65 மானியம் வழங்கப்படும்.

பயறு வகை சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பெரும்பகுதி – சுமார் 90 விழுக்காடு பரப்பளவு மானாவாரி நிலமாகும். மழையை நம்பி கிடக்கும் பகுதியாகும். இதனைக் கருத்தில் கொண்டு பயறு வகை பயிர்களுக்கு தேவையான நேரத்தில் தேவையான பாசனத்தினை அளிக்கும் வகையில் ஒவ்வொரு பயறு கிராமத்திலும் ஒன்று வீதம் 170 பண்ணைக் குட்டைகள் அமைக்க திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பண்ணைக் குட்டைகள் ஒவ்வொன்றும் ரூ.50,000 செலவில் அமைக்கப்படுகின்றன. இதில் ரூ.25,000 அரசு மானியமாகும். மீதித் தொகை இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து பணமாகவோ, உழைப்பிற்கான ஊதியம் வாயிலாகவோ பெறப்படுகின்றது.

அதைப்போன்று, ரூ.20,000 மதிப்புள்ள பயறு உடைக்கும் கருவி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று வீதம் வழங்கப்படும். இதற்காக அரசு மானியமாக ரூ.10,000 அனுமதிக்கப் பட்டுள்ளது.

அண்மையில், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

*"என்னுடைய பணியை அல்லது என்னை எந்தத் துறையைச் சேர்ந்தவர் என்று அழைக்கவேண்டும், என்கிற நிலை ஏற்படும்போது என்னை ஒரு விவசாய இனத்தைச் சார்ந்தவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்"*

– என்று குறிப்பிட்டார்கள். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

*"தமிழ்நாட்டினுடைய விவசாயிகளின் வளர்ச்சிக்காக என்னுடைய பணிகளையும் என்னையும் அர்ப்பணிப்பேன்*

– என்று சூளுரைத்தார்கள்.

இப்படி விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த பயறு கிராமத் திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.1.06 கோடி ஒதுக்கி, ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்தத் திட்டம் கடந்த ஜூலை 2ஆம் தேதி முதல் அறிவிக்கப்பட்ட 17 மாவட்டங்களிலும் தொடங்கப் பட்டுள்ளது.

'பூமியை இகழ்ந்திடேல்'

'மேழி போற்று'

'விதையினைத் தெரிந்திடு'

என வேளாண்மையின் இன்றியமையாமையை பாட்டுக்கொரு புலவர் பாரதியார் வலியுறுத்தி உரைக்கின்றார்.

இந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், விவசாயிகளின் ஒத்துழைப்புடன் வேளாண்மைத் துறையின் ஈடுபாட்டு உணர்ச்சியுடன் கூடிய பணியினால் பயறு கிராமத் திட்டம் பெரும் பயனை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. •





# மக்களுக்குப் பயன்தரும் அரும்பணிகள் மூலம்
# பெருந்தலைவரின் பெருமையைப் போற்றும் புரட்சித்தலைவியின் அரசு

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

திரு. **கே.பி. அன்பழகன்**



**நா**ட்டுக்கு உழைத்த நல்லவர்களையும் விடுதலைப் போராட்ட வேள்வித் தீயில் குதித்து தங்களின் வாழ்வின் வசந்தத்தைக் கருக்கிக் கொண்ட பெருமக்களையும் நினைவு கூர்ந்து போற்றிட வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாட ஆணை பிறப்பித்தார்கள்.

அது மட்டுமல்ல, கடந்த ஆண்டு ஜூலை திங்கள் 15ஆம் நாள் சென்னை மாநகரில் இந்த நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைத்து, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றிய இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் "தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் காமராசர் தமது ஆட்சி காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளை எனது அரசு தொடர்ந்து நிறைவேற்றும்" என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திட்டங்கள் வகுத்து செயலாற்றி வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

காமராசர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று அதன் நிறைவு விழா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப நூற்றாண்டு விழா நாயகர் பெருந்தலைவர் காமராசர் பிறந்த மண்ணில் கடந்த 15.7.2003 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மக்களின் சிந்தைக் கவர்ந்த செயல்வீரர் ஆவார். சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் உழைப்பால் உயர முடியும் உன்னத இலட்சியப் பிடிப்பால் புகழ் பெற முடியும்; தூய்மையான வாழ்வால் வரலாற்றில் இடம் பிடிக்க முடியும் என்பதற்கு பெருந்தலைவர் காமராசரின் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"He is the Leader among the Workers
He is the Worker among the Leaders"

– என்று சொல்லத்தக்க வகையில், ஒரு இயக்கத்தில் தொண்டராக இருந்து தலைவராக வளர்ந்து, சிறப்புப் பெற்ற பெருமை பெருந்தலைவர் காமராசர் அவர்களைச் சாரும்.




இந்த விருதுநகரில் வரலாற்று பூர்வமாக சொல்ல வேண்டுமானால் "விருதுபட்டி" என்று அழைக்கப்பட்ட இந்த ஊரில் பிறந்து, விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அந்த இயக்கத்தில் படிப்படியாக வளர்ந்து, பல்வேறு பொறுப்புகளை ஏற்று திறம்பட செயலாற்றி, அகிலமே போற்றுகின்ற வகையில் அனைத்திந்திய தலைவராக வளர்ந்தாரென்றால் அவரது வாழ்வு ஒரு சமுதாயப் புரட்சிக்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் உள்ளது என்று பொருளாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் டில்லி நாடாளுமன்ற மேலவையில் பேசும்போது ஒரு முறை குறிப்பிட்டார்கள்.

"புகழ்மிக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரன் என்ற பெருமையுடன் இந்த பூபாகத்தின் தென்கோடியில் இருந்து வந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

அத்தகைய நமது புகழ்மிக்க பாரம்பரிய பெருமையினை அகில இந்திய அளவில் உலக அளவில் பறைசாற்றிய பெருமை பெருந்தலைவர் காமராசர் அவர்களைச் சாரும்.

பெருந்தலைவர் காமராசர் படிக்காத மேதையாவார்; அனுபவத்தில் பாடம் கற்றவர் ஆவார்; அனைவராலும் போற்றப்பட்டவர்; மறைந்தாலும் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று வாழ்பவராவார்.

காமராசரின் நிர்வாகத் திறமையின் காரணமாக கிராமங்களில் எல்லாம் கல்வி நீரோடை பாய்ந்தோடியதும் வாய்ப்பற்ற மக்களுக்கு வாய்ப்புகள் கிடைத்ததையும் நாட்டு மக்கள் நன்றி உணர்வுடன் நினைவு கூர்ந்துகொண்டு இருக்கிறார்கள். பலரது பார்வையில் அவர் படிக்காதவர். ஆனால் அவரால் தான் நாட்டு மக்கள் படித்தார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

"தொண்டு செய்து பழுத்த பழம்" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் போற்றிய சமுதாய சிற்பி தந்தைப் பெரியார் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களை "பச்சைத் தமிழர்" என்றும் "கர்ம வீரர்" என்றும் "கல்விக் கண் திறந்த வள்ளல்" என்றும் பாராட்டி மகிழ்ந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களை மிகவும் புகழ்ந்து, போற்றி, பாராட்டினார்கள். "தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்" என்று காமராசரைப் பற்றி பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டார்.

**1954** ஆம் ஆண்டு குடியாத்தம் தேர்தலில் பெருந்தலைவர் காமராசர் போட்டியிட்ட போது "குணாளா குலக்கொழுந்தே, சென்று வா, வென்று வா" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகுற குறிப்பிட்டார்கள் என்றால் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் பேரறிஞர் அண்ணா எத்தகைய பற்றும் பாசமும் கொண்டிருந்தார் என்பதை நம்மால் உணர்ந்திட முடிகிறது.

அண்ணாவின் இதயக்கனி புரட்சித்தலைவர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் எத்தகைய மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார், அவரின் நினைவைப் போற்றும் வகையில் எத்தகைய அரும்பணிகளை ஆற்றினார் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

முகவை மாவட்டத்தை – அதாவது ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து விருதுநகரை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை உருவாக்கிய போது அதற்கு

பெருந்தலைவர் காமராசரின் பெயரை புரட்சித்தலைவர் அவர்கள் சூட்டினார்கள்.

புரட்சித்தலைவரின் வழியில் நடந்து அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்ற பாடுபடும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிபெற்று நாட்டின் முதன்மை மாநிலமாக திகழ்ந்திட திட்டங்கள் வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள்.

நம்முடைய இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்திய அரசியலிலும் மகத்தான சக்தியாக திகழ்கின்றார்கள்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள் மறைந்த நேரத்தில் ''அடுத்த பிரதமர் யார் ?'' என்ற வினா எழுந்தது. உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால் After Nehru, who? After Nehru, What? நேருவிற்குப் பின் யார் ? நேருவிற்குப்பின்னர் எப்படிப்பட்ட நிலைமைத் தோன்றும் ? என்றெல்லாம் வினா எழுந்தது. இந்த வினாக்களுக்கு விடை கண்டு இந்த ''வினாக் குறிகளை'' ''ஆச்சரியக் குறிகளாக'' மாற்றிக் காட்டியப் பெருமை பெருந்தலைவர் காமராசர் அவர்களைச் சாரும் என்று வரலாறு நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

அதைப்போன்று இன்றைக்கு இந்திய நாட்டில் எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் அதற்கு முடிவு எடுக்கும்போது கருத்தில்கொள்ளும், கவனத்தில் கொள்ளும் தலைவியாக, ஆலோசனை நடத்த வேண்டிய அறிவுப்பூர்வமிக்க மேதையாக நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் திகழ்கின்றார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மாநிலத்தின் முன்னேற்றம், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அனைவருக்கும் கல்வி என்ற வகையில் சிந்தித்து செயல்பட்டார்கள்.

நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கு அதே வகையில் சிந்தித்து திட்டங்களை வகுத்து நாட்டு மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழகம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாறிட இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் செயல்படுத்திவரும் திட்டங்களை நாட்டுமக்கள் பாராட்டுகிறார்கள். பொருளாதார நிபுணர்கள் போற்றி மகிழ்கிறார்கள்.

புரட்சித்தலைவி அவர்கள் மேற்கொண்ட துணிச்சல்மிக்க நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை உலக வங்கி அங்கீகரித்து தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவிகள் வழங்க முன்வந்துள்ளது நமது இதயதெய்வத்தின் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாகும்.

முந்தைய ஆட்சியில் பாழ்பட்டு பாலைவனமாக மாறிய நிதி நிலைமையை சீர்செய்ய இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் மேற்கொண்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் வருங்கால வரலாற்றுக்கு கவர்ச்சிகரமான கருப்பொருளை தந்திருக்கிறது என்றால் மிகையாகாது.

10வது ஐந்தாண்டு திட்டத்துக்கான மொத்த மதிப்பீடு 40,000 கோடியாக நிர்ணயிக்கப் பட்டிருப்பதும் நடப்பு நிதியாண்டுக்கு 7,000 கோடி ஒதுக்கீடு நிர்ணயித்து மத்திய அரசின் திட்டக்குழு ஒப்புதல் வழங்கியிருப்பதும் புரட்சித்தலைவி அரசின் சிறப்பான செயல்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகும். புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்படுத்தியுள்ள துணிச்சல்மிக்க நிதிசீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசின் திட்டக் குழுவின் தலைவரே பாராட்டியிருப்பது நமக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே பெருமையாகும்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டார்கள். பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதியார் ''அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்று தெரிவித்தார்.

அந்த வகையில் கல்வி வளர்ச்சிக்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். கல்லாமையை இல்லாமையாக்கும் வகையில் ஒரு அறிவுப் புரட்சியினை நிகழ்த்தும் வகையில் புரட்சித்தலைவியின் அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதை கண்கூடாக காண்கிறோம்.

அனைவருக்கும் கல்வி வழங்குகிற திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதை ஆய்வாளர்கள், அறிஞர்கள், மத்திய அரசின் அலுவலர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள் அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள்.

கடந்த இரண்டாண்டு காலத்தில் புரட்சித்தலைவியின் அரசு தமிழ்நாட்டில் 756 ஆரம்பப்பள்ளிகளையும், 676 நடுநிலைப் பள்ளிகளையும், 220 உயர்நிலைப் பள்ளிகளையும், 260 மேல்நிலைப்பள்ளிகளையும் திறந்து சாதனைப் படைத்துள்ளது. மேலும் நடப்பு கல்வியாண்டில் 40 மேல்நிலைப் பள்ளிகளையும் 40 உயர்நிலைப் பள்ளிகளையும் தொடங்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். ஒரு கல்வியாண்டில் குறைந்தபட்சம் 180 நாட்களாவது கற்றல் மற்றும் கற்பித்தல் நாட்களாக அமைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட மாண்புமிகு



தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த வகையில் திட்டங்களைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் தொழில்நுட்பத்துறையைப் பொறுத்தவரை தமிழ்நாடு முன்னணி வகித்து உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்பதை காண்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் கடந்த ஆண்டு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட்டு பேசும்போது தெளிவாகக் குறிப்பிட்டார்கள்.

"The Government intends to use IT and ITES as the guided missiles for ushering in a new era of rapid development and prosperity in Tamil Nadu" என்று குறிப்பிட்டார்.

"தகவல் தொழில்நுட்பத்தையும் தகவல் தொழில்நுட்ப சேவையையும் தமிழ்நாட்டிற்கு விரைவான முன்னேற்றமும் வளமும் கொண்ட புதிய சகாப்தத்தைக் கொணரும் கருவிகளாகப் பயன்படுத்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்த அந்தக் கொள்கை செயல்வடிவம் பெற்று நாடு வளர்ச்சிப்பாதையில் நடைபோடுவதை கண்கூடாக காண்கிறோம்.

இப்படி எல்லா வகையிலும் தமிழகம் வளர்ச்சியடைய, வியக்கத்தக்க வகையில் வளம்பெற மகத்தான புரட்சியினை நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"கோடிக்கணக்கான மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் புதியதொரு திருப்பத்தை உண்டாக்கும் பாரம் நம்மீது சுமந்துள்ளது. அதனை நாம்தான் சுமந்தாக வேண்டும். மக்களாட்சியின் அடிப்படைத் தத்துவமே அதுதான்" என்று பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்.

அந்த வகையில் மக்களின் வாழ்வில் மாற்றம் காணவும் அவர்களின் வாழ்வு புன்னகை பூக்காடாக மாறவும் தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழ்ந்திடவும் பாடுபடும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சிக்கு துணை நிற்க உறுதி ஏற்போம்.

பெருந்தலைவர் காமராசரின் பெருமையை நிலைநாட்டிடும் வகையில் விருதுநகரில், மதுரை – விருதுநகர் புறவழிச்சாலையும், திருநெல்வேலி – விருதுநகர் நெடுஞ்சாலையும் சந்திக்கும் சாலை சந்திப்பில் நினைவுத் தூண் அமைக்கவும் விருதுநகர் தேசபந்து திடலின் மையப்பகுதியில் பெருந்தலைவர் காமராசர் நினைவு மண்டபம் கட்டவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் 14.7.2003 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டினார்கள்.

காமராசருக்கு நினைவுச் சின்னம் அமைத்தும், அவர் எண்ணப்படி நாட்டு மக்களுக்கு பயன்தரும் வகையில் அரும்பணிகள் ஆற்றியும் பெருந்தலைவரின் நினைவைப் போற்றும் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்கு துணை நிற்க உறுதி ஏற்பது பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா சபதமாக– சங்கற்பமாக இருப்பது பொருத்தமுடையதாகும்.

பெருந்தலைவர் காமராசரின் புகழ் ஓங்குக! அவரின் எண்ணங்களை ஈடேற்ற பாடுபடும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் பல்லாண்டு வாழ்க!

# விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா




*"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா தமிழக அரசின் சார்பில் 15.7.2003 அன்று விருதுநகரில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

காலை 8 மணிக்கு பெருந்தலைவர் காமராசரின் நினைவு இல்லத்தில் காமராசர் புகழ்பாடும் பாடல்கள் பாடப்பட்டு நூற்பு வேள்வியும் நடைபெற்றது. பின்னர் பெருந்தலைவர் காமராசர் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து, மாண்புமிகு பொதுப்பணி வருவாய், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ந. தளவாய்சுந்தரம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே. கோபால், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. எம். ரவி, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதன்பின்னர், விருதுநகர் கே.வி.எஸ். காமராஜர் மருத்துவமனையில் அமைக்கப் பட்டிருந்த பெருந்தலைவர் காமராசர் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள்,பொதுமக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

காலை 10 மணிக்கு "பெருந்தலைவர் காமராசர் என் பார்வையில்" என்ற தலைப்பில் கவியரங்கம், புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கவியரங்கத்தில் "ஏழைப்பங்காளர்" என்ற தலைப்பில் கவிஞர் நீலம் மதுமயன், "கல்விக்கண் திறந்தவர்" என்ற தலைப்பில் பேராசிரியர் அம்பிகா, "மக்கள் உள்ளம் கவர்ந்தவர்" என்ற தலைப்பில் கவிஞர் கா. காளியப்பன், "சாதனை நாயகர்" என்ற தலைப்பில் முனைவர் க. இராமச்சந்திரன் கவிதை பாடினார்கள்.



காலை 11.30 மணியளவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் "கல்விப் பணியில் காமராசர்" என்ற தலைப்பில் திரு. பு.சி. கணேசன், "நற்செயல் வீரர் காமராசர்" என்ற தலைப்பில் முனைவர் பொன்மதி, "எளிய வாழ்வும், உயர் சிந்தனையும் கொண்ட காமராசர்" என்ற தலைப்பில் திரு. ஆர். ரவிச்சந்திரன், "சமுதாயப் பணியில் காமராசர்" என்ற தலைப்பில் திரு. முருகேசபாண்டியன் போன்றவர்களும் கருத்துரை யாற்றினார்கள்.

மாலை 3.30 மணியளவில், விருதுநகர் கே.வி.எஸ். பள்ளியில் இருந்து சுமார் பல்லாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட மாபெரும் ஊர்வலத்தினை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மாலை 5 மணிக்கு திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையத்தின் சார்பில் அவனியாபுரம், விருதுநகர் கிராமிய கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 5.30 மணிக்கு நெல்லை சங்கீதா வேலவன் குழுவினரின் "காமராசர் வாழ்க்கை வரலாறு" பற்றிய வில்விசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 6 மணிக்குச் சிறப்புக் கூட்டம் தொடங்கியது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. கா. காளிமுத்து விழாவிற்கு தலைமையேற்க சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே. கோபால் வரவேற்புரையாற்றினார். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தளவாய் சுந்தரம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். டாக்டர் கே. மலைச்சாமி, எம்.பி., திரு. கே.கே. சிவசாமி, எம்.எல்.ஏ., திரு. மா. இராஜசேகர், எம்.எல்.ஏ., விருதுநகர் நகராட்சித் தலைவர் திருமதி. அமுதா தர்மராஜன், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு. வி. முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தை திறந்துவைத்து போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி மாண்புமிகு பொதுப்பணி, வருவாய், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசும்போது, "அம்மாவின் ஆணைப்படி இன்று பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகின்றது. மக்கள் தொண்டு செய்யும் உத்வேகமும், உழைப்பும் இருந்தால் ஒருவர் எட்ட முடியாத உயரத்தையும் எட்டி பிடிக்கலாம் முன்னேறலாம் என்பதற்குப் பெருந்தலைவர் காமராசர் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

கல்வி அறிவாற்றலும், பாரம்பரிய பெருமைகளும், நிறைந்தவர்கள் இருந்த உலகத்தில் பள்ளிப் படிப்பே இல்லாமல் உயர்ந்தவர் காமராசர். இதற்கு அறிவாற்றலும் அனுபவ ஆற்றலும், உழைப்புமே காரணமாகும். புகழ்பெற்ற காமராசரின் புகழ் என்றென்றும் போற்றப்படும் வகையில் விருதுநகரில் மணிமண்டபமும், நினைவுத் தூணும் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்கள். காமராசர் பெருந்தலைவர் என்றால் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பெருந்தன்மையின் சிகரம் ஆவார்கள்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் இந்த சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் பேசும்போது, "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களாலே ஆணையிடப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சி என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய புகழுக்குக் கோபுரமாகத் திகழ்கின்றது கலசமாக விளங்கப்போவது பெருந்தலைவர் காமராசருடைய நினைவுத்தூண் திறப்பு விழா நிகழ்ச்சி, நினைவு மண்டப நிகழ்ச்சி என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, பெருந்தலைவர் காமராசர் புகழுக்கு முடிவு இல்லை. அது தொடர்கின்றது என்பதைத்தான் இந்த விழா நிகழ்ச்சிகள் இங்கே எடுத்துக் காட்டுகின்றன.

எப்போதுமே தகுதி வாய்ந்த தலைவர்களுக்கு நூற்றாண்டு விழா நடத்தத் தகுதிவாய்ந்த முதலமைச்சர்களாலேதான் முடியும். அப்படித் தகுதிவாய்ந்த முதலமைச்சர்கள் இருக்கிறபோது தான் அந்தப்



பெருமக்களுடைய நூற்றாண்டு விழாவும் வந்து சேருகிறது. எப்போதுமே பவளத்தை, முத்தை தங்கத்திலே பதித்தால்தான் பெருமையே தவிர அலுமினியத்திலே பதித்தால் பெருமை இல்லை. அதைப்போலத் தலைவர்களுடைய நூற்றாண்டு விழா நிகழ்ச்சி என்பது, தகுதிமிக்கத் தலைவர்கள் முதலமைச்சர்களாக இருந்து கொண்டாடினால்தான் அந்தத் தலைவர்களுக்கும் பெருமை.

பாரதியார் நூற்றாண்டு விழா, பெரியார் நூற்றாண்டு விழா, புரட்சித்தலைவர் முதலமைச்சராக இருந்தபோது வந்தது. அவர் சிறப்புறக் கொண்டாடினார்.

அதைப்போன்று பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழா மாண்புமிகு புரட்சித்தலைவி முதலமைச்சராக இருக்கிற கால கட்டத்திலே வந்திருக்கிறது. அவர் இந்த நிகழ்ச்சி சிறப்புற இங்கே கொண்டாட வழிவகுத்து இருக்கின்றார்.

பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்த இந்த மண் தான் என்னையும் உயர்த்தியது என்ற பெருமையோடு இங்கே நிற்கிறேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் பற்றி கவிஞர் கண்ணதாசன்,

*"தன்னலங்கருதா பொதுநலத்*
*தொண்டன்*
*தாயகப் பணியே தன் பணி என்பார்*
*தனக்கென ஏதும் கணக்கினில்*
*கொள்ளார்*
*பறக்கும் சிட்டு; பண்பினில் வெண்புறா*
*உரக்கப் பேசி அறியா உளத்தினன்*
*வடக்கொரு காந்தி, தெற்கொரு காமராஜ்"*

– என்று பாடினார்.

அந்தப் பெருமைக்குரிய பெருந்தலைவர் காமராசர் 6 வயதிலேயே தமது தந்தையை இழந்தார். அவர் ஆறாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை நிறுத்தவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். ஆனால் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகம் முழுவதும் ஏராளமான கல்வி நிலையங்களைத் திறந்தார். மிகப் பெரிய கல்வி மறுமலர்ச்சி, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய ஆட்சி காலத்திலே ஏற்பட்டது.

ஏழைக்குக் கல்வி என்பது, எட்டாக்கனியாக ஒரு காலத்திலே இருந்தது. அந்த ஏழைக்குக் கல்வியைக் கொண்டு வந்து ஒப்படைத்த கரம் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய திருக்கரம் என்பதை நன்றியோடு எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவர் படிக்கவில்லை. ஆனால், உலகளாவிய பெருமையைப் பெற்றார். படிக்காத அத்தனைபேரும்




புகழைப் பெறமாட்டார்கள் என்றோ அல்லது படித்தவர்கள் அத்தனை பேரும் பெருமைகளைப் பெறுவார்கள் என்றோ கணக்கு கிடையாது.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பெற்ற இன்பத்தைக்கூட அல்ல, தாம் பெறாத இன்பத்தை எல்லோரும் பெற வேண்டும் என்பதற்காக, எல்லோருக்கும் கல்வியை வழங்கிய பெருந்தகை அவர்.

காமராசருடைய புகழை முழுமையாக ஒரு விழாவிலே பேசி விட முடியாது. புறநானூற்றிலே ஒரு பாடல் வரி உண்டு.

''விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்'' என்று ஒரு மன்னனைப் பற்றி ஒரு புலவர் பாடுவார்.

ஆகவே போராட்டம் நடத்தத்தான் செய்வார் என்று காமராசர் சொன்னார்.



இந்திய அரசியலமைப்புச் சட்டம் பலமுறை திருத்தப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்திலே முதல் திருத்தம் என்பது பிற்பட்ட சமூகத்திற்குக் கல்வி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காகத் தமிழகத்திலே நடைபெற்ற போராட்டத்தை ஒட்டி பண்டித நேரு அவர்களாலே திருத்தப்பட்டது. அந்த முதல் திருத்தத்துக்குக் காரணம் பெருந்தலைவர் காமராசர்தான்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்கள்




வற்புறுத்திய அந்தத் திருத்தத்தை, காமராசர் அவர்கள் நேரு அவர்களிடம் எடுத்துச் சொல்லி அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பெருந்தலைவர் காமராசர் மக்களின் நாடித் துடிப்பை நன்கு உணர்ந்தவர். அவர் முதலமைச்சராக இருந்தபோது தந்தை பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார். அப்போது, காமராசர் அவர்கள் டெல்லிக்குப் போயிருந்தார்கள். அப்போது நேரு, காமராசர் அவர்களைப் பார்த்துக் கேட்டார். ''இந்த ஈ.வெ.ரா. என்கிற ராமசாமி நாயக்கர் அவர்கள் உங்களுக்கு நெருங்கிய நண்பராமே. உங்களுக்கு நெருங்கிய நண்பராக இருந்து கொண்டே உங்களுக்குத் தொல்லை தருவதற்குப் போராட்டம் நடத்துகிறாரே'' என்று கேட்டார்.

அதற்கு காமராசர் சுருக்கமாகச் சொன்னார். அவர் எனக்குத்தான் நண்பரே தவிர, இந்திக்கு நண்பர் அல்ல.

பெருந்தலைவர் காமராசருடைய ஆட்சி என்பது CALM RAJ என்று ஆங்கிலத்திலே அன்றைக்குச் சொன்னார்கள். அதற்கு அமைதியான அரசு என்று பொருள். அப்படிப்பட்ட அமைதியான அரசை நடத்தியவர் பெருந்தலைவர் காமராசர்.

பெருந்தலைவர் காமராசர் மகாத்மா காந்தியைப் போல மக்கள் தலைவர். மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் போன்றோர் எப்படி தேசியத் தலைவர்களோ அதைப்போல காமராசர் அவர்கள் தேசியத்தலைவர் ஆவார்.

காமராசருடைய புகழ் விரிந்து பரவக்கூடிய புகழ், அந்தப் புகழைப் பரவ வைத்தப் பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவியைச் சாரும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட இயக்கத்தின் வழித்தோன்றல் டாக்டர் புரட்சித்தலைவி, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய புகழுக்குப் புகழ் சேர்த்திருக்கிறார். காமராசருடைய புகழ் நீடிக்கும், நிலைக்கும், தழைக்கும்'' என்று குறிப்பிட்டார்.

*நிகழ்ச்சித் தொகுப்பு :*
**கே. கண்ணதாசன்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)
விருதுநகர்

# காசநோய்த் தடுப்பிற்கு ஆக்கம் தரும் சீரிய முயற்சி

உருவாக்குவதும், இந்த நோய்த் தடுப்பு தொடர்பான நவீன ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு குறித்த தகவல்களை – மருத்துவர்கள் மற்றும் இத்துறை சார்ந்த பெருமக்கள் அறிந்து பரிமாறிக் கொள்வதும் அவசியமாகும்.

அத்தகைய சீரிய நோக்கத்திற்கு செயல்வடிவம் தரும் வகையில், தஞ்சாவூரில் கடந்த




காசநோய் என்பது, மனித சமூகத்தை அழிக்கின்ற கடுமையான நோய்களில் ஒன்றாகும். இளைஞர்களையும், சிறுவர்களையும் வாழ்வதற்கு முன்னரும், முதியவர்களை இறப்பதற்கு முன்னரும், அலைக்கழித்து, உருக்குலைக்கும் நோயாக, இது கருதப்படுகின்றது. அரசின் சீரிய முயற்சியாலும், அறிவியல் வளர்ச்சியாலும், மருத்துவத் துறையினரின் முனைப்பான சிகிச்சையாலும், காசநோயினால் ஏற்படுகின்ற இழப்பும், பாதிப்பும் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது என்பது, அனைவரும் அறிந்த உண்மையாகும்.

காசநோயை முற்றிலும் அகற்றிட – சமுதாயத்தில் அதனால் விளைகின்ற பாதிப்பினைத் தடுத்திட பன்முக அணுகுமுறை (Multifaceted approach) இன்றியமையாதவையாகும். நோய்க்கு சிகிச்சை அளிப்பது – நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதோடு மட்டுமின்றி இந்த நோய் குறித்து, மக்களிடையே விழிப்புணர்வினை

ஜூலை 19, 20 ஆகிய நாட்களில் காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவ மாநாடு, பயன்தரும் வகையில் நடைபெற்றது.

"நோய் நாடி, நோய் முதல் நாடி" அதற்கேற்ப திட்டங்களைச் செயல்படுத்த, அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்வு கிடைத்திட பாடுபடும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப நடைபெற்ற இந்த மாநாட்டினை, தமிழ்நாடு காசநோய்த் தடுப்புக் கழகமும், அதன் தஞ்சை மாவட்ட மையமும் இணைந்து நடத்தின.

விழா தொடக்கத்தில், சுகாதார துறை இணை இயக்குநர் டாக்டர் எம்.பன்னீர்செல்வம் வரவேற்றுப் பேசினார். மருத்துவ மற்றும் ஊரக சுகாதாரப் பணிகளுக்கான கூடுதல் இயக்குநர் டாக்டர் எம்.பெருமாள் – மாநாட்டின் நோக்கத்தை விளக்கி, உரையாற்றினார்.

இந்த் மாநாட்டைத் துவக்கி வைத்து, தஞ்சை மாவட்ட காசநோய் மைய ஆய்வகம் மற்றும் மருந்தகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி, பேசிய போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.என் தளவாய் சுந்தரம் குறிப்பிட்டதாவது:

*"பிணிக்கு ஆளாகிவிட்ட மக்கள் காக்கப்பட வேண்டும். மேலும், மக்களுக்கு நோய் வராமல் தடுக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். அதனால் தான், மருத்துவத்துறையில் நோய்த் தடுப்பு முறையில் ஒரு அமைதிப் புரட்சியை அரசு நிகழ்த்தி வருகின்றது.*

*காசநோய் தடுப்புத் திட்டம் கடந்த பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும், எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. இந்த நிலையை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருத்தி அமைக்கப்பட்ட, தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தினைச் செம்மையாக செயல்படுத்த ஆணை பிறப்பித்து, கடந்த 18 மாத காலத்தில் – இத்திட்டம் எல்லா மாவட்டங்களிலும், நடைமுறைப்படுத்தப்பட்டு, பெரும் பயன் விளைந்துள்ளது.*

*தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவ நிலையங்களும், 136 காசநோய் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 641 நுண்ணோக்கி மையங்களில் சளிப்பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 10,000 சிகிச்சை மையங்களில் குறுகிய கால நேரடி சிகிச்சை முறையில் நோயாளிகள் பயன்பெற்று வருகின்றார்கள்.*

*தமிழகத்தை காசநோயற்ற மாநிலமாக மாற்றுவோம் என்று சூளுரைத்து, செயலாற்றும் தமிழக முதலமைச்சர் அவர்கள், இத்திட்ட செயல்பாட்டில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும், அரசு மருத்துவமனைகளும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும், தனியார் மருத்துவமனைகளும், சுய உதவிக்குழுக்களும் பங்கேற்க வழி வகுத்துள்ளார்கள்".*

இந்த மாநாட்டையொட்டி உருவாக்கப்பட்ட சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசிய மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம் குறிப்பிட்டதாவது :

*"தமிழகத்தில் உலக வங்கியின் உதவியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன் செயல்படுத்தப்படும், திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்பு திட்டத்தினால், மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள். ஒரு முக்கியமான மருத்துவ மாநாடு – 8ஆவது காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவ மாநாடு தஞ்சை மாநகரில் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது.*

*தஞ்சை மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிக அளவிலான மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு இருப்பது, பாராட்டுக்குரியதாகும்".*

நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எஸ். கோசலராமன் பேசும் போது,

*"திருத்தி அமைக்கப்பட்ட காசநோய் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டம், 5 துணை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும், ஒரு மருந்து சேமிப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவ பரிசோதனை மேற்பார்வையாளர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.*

*கடந்த இரண்டாண்டு கால செயல்பாட்டினை நோக்கும் போது, காசநோய் கண்டறிதல் 59 விழுக்காடாகவும், மருந்து உட்கொள்ளும் நோயாளிகளின் நோய்க்கிருமி குறைவு 94 விழுக்காடாகவும், முழுமையாக நோயிலிருந்து விடுபட்டு, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 91 விழுக்காடாகவும், உயர்ந்துள்ளது கண்டறிப்பட்டுள்ளது.*

*இது, உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த இலக்கை விட கூடுதலானது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.*

– என்று குறிப்பிட்டார்.



மாநில மருத்துவக்கல்வி, மருத்துவ மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள் இயக்குநர் டாக்டர் ஜே. ஆர். விஜயலட்சுமி, அறிவியல் கருத்தரங்கத்தினைத் துவக்கி வைத்துப் பேசும் போது, காசநோய்த் தடுப்பு சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றத்தினையும், இத்திட்டத்தின் வெற்றிக்காக, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்ஃகைகளையும் விவரித்தார்.

இந்த நோயைக் குணப்படுத்த முன்பெல்லாம் **24** மாதங்கள் அல்லது **18** மாதங்கள் மருந்து உட்கொள்ள வேண்டும். தற்போது, **6** மாதங்கள் சாப்பிட்டாலே போதும், நோய் குணமடைந்து விடும். காசநோயை குணப்படுத்த முக்கியத் தேவை பூரண ஓய்வு (Bed Rest) ஆரோக்கியமான உணவு, (Good Food) தூய்மையான காற்று (Fresh Air) ஆகியவை முக்கியத் தேவையாகும். இத்தகைய விழிப்புணர்வினை தோற்றுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பெருமளவுக்கு வெற்றி கண்டுள்ளோம்.

ஏற்கெனவே காசநோய்த் தடுப்பு மையங்களுக்குச் சென்று, மருந்து பெறுவதற்குப் பதிலாக, தற்போது, நோயாளிகளின் வீடுகளைத் தேடிச் சென்று, மருந்து வழங்கும் நிலை உள்ளது. இது மக்களுக்குப் பயன்தரும் பணியாகும் என்று இயக்குநர் டாக்டர் விஜயலட்சுமி மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கத்தில் உரையாற்றிய முன்னாள் மாநில மருத்துவ சேவை இணை இயக்குநரும், மாநில காசநோய்த் தடுப்புக் கழகத்தின் மத்திய குழு உறுப்பினருமான டாக்டர் ஜி.ஜெயச்சந்திரன் பேசும்போது குறிப்பிட்டதாவது :

காசநோய் என்பது, மனித இனத்தை அச்சுறுத்தும் கொடிய நோயாகும். பெண்கள் அதிக அளவில் இந்த நோயால் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

இந்தநோய்த் தடுப்புக்காகவும், சிகிச்சைக்காகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆண்டொன்றிற்கு ரூ.**12,000** கோடி செலவிடப்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. தங்களின் பெற்றோரை காசநோய் பற்றுவதால், ஆண்டுதோறும் சுமார் **30,000** பள்ளிக் குழந்தைகள் தங்களின் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. காசநோய் கண்டதால், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மகளிர் வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்டு, அவதிக்குள்ளாகின்றனர்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர், டாக்டர் கே. கலையரசி, டாக்டர் கே.ஜெகநாத், தஞ்சை மாவட்ட காசநோய்த் தடுப்பு




துணை இயக்குநர் டாக்டர் வி.டி. முருகேசன் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

இந்த மாநாட்டில், மாநிலம் முழுவதிலிருந்தும் வருகை தந்திருந்த **250**க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டையொட்டி, நடைபெற்ற அறிவியல் விவாதம் – ஏழு அமர்வுகளாகக் கூடி, காசநோய்த் தடுப்பு திட்டம் குறித்து, விரிவாக விவாதித்தது.

இந்தக் கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் இந்நோய் குறித்து, நடத்தப்படும் மாநாடுகளுக்கும், கருத்தரங்குகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் வழிகாட்டியாகத் திகழும் வண்ணம் அமைந்திருந்தன என்றால், மிகையாகாது.

தஞ்சை மாவட்ட காசநோய்த் தடுப்புக் கழகத்தின் தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.கோசலராமன் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், துணை இயக்குநர் டாக்டர் முருகேசன் மற்றும் காசநோய் மைய மருத்துவர்கள், அலுவலர்கள் பொறுப்பேற்று, சீருடனும், சிறப்புடனும் நடத்திய இந்த மாநாடு காசநோய்த் தடுப்பு இயக்கத்தின் வரலாற்றில், குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். தமிழக மக்கள் நல்வாழ்வுக்கு நலம் சேர்க்கும் இந்த மாநாடு, தமிழக அரசின் பிணி தீர்க்கும் அரும்பணிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

*கட்டுரை ஆக்கம் :*
**– இரெ. மகாலிங்கம்,**
***செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.***

★ ★ ★

அன்னியர் ஆட்சிக்கு எதிராக வீரஞ்செறிந்த போர் நடத்திய மாவீரர்களில் ஒருவர் தீரன் சின்னமலை ஆவார். நாட்டுக்காக உழைத்த பெருமக்களையும் விடுதலைப் போராட்ட வீரர்களையும் நினைவுகூர்ந்து அவர்களின் பெருமையை நிலைநிறுத்தப் பாடுபடும் தமிழக அரசின் சார்பில் தீரன் சின்னமலையின் பிறந்தநாள் விழா ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் 2.8.2003 மற்றும் 3.8.2003 ஆகிய நாட்களில் நடைபெற்றது. 2.8.2003 அன்று நடைபெற்ற விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணி, வருவாய்த்துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை வகித்து, தீரன் சின்னமலையின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துப்



# மாவீரன்
# தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் பிறந்தநாள் விழா



பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது, "தீரன் சின்னமலை வாழ்ந்த இடமான ஓடாநிலையில் விழா நடத்துவது, மிகவும் பொருத்தமானதாகும். தியாகம் செய்தவர்களைப் போற்றுவதும், திறமையானவர்களைப் பாராட்டுவதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணமாகும். அதன் காரணமாக தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா இன்று இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. வெள்ளையர்களை எதிர்த்துப் போர்புரிந்த வீரர்களில் குறிப்பிட்டத்தக்கவர் தீரன் சின்னமலை ஆவார். தீர்த்தகிரி என்ற இயற்பெயர் கொண்ட சின்னமலை, தனது செயல்களால் தீரன் சின்னமலை என்று பெயர் பெற்றார். சென்னையிலுள்ள இவரது சிலை, இவரது புகழை எடுத்துக்கூறுகின்றது. அந்த சிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டதாகும்" என்று குறிப்பிட்டார்.

விழாவில் பங்கேற்ற மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் குறிப்பிட்டதாவது, "தமிழ்நாட்டிற்கு தமது ஆற்றலால் பெருமை சேர்த்த மாவீரர் தீரன் சின்னமலை. அப்படிப்பட்ட மாவீரனுக்கு இன்று முதலமைச்சர் அவர்கள் விழா எடுத்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். தீரன் சின்னமலை மகத்தான மாவீரன் ஆவான். அந்த மாவீரனுக்கு, முதலமைச்சர் அவர்கள் விழாவை நடத்தியிருப்பது, இந்த கொங்கு மண்டலத்திற்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையைப் பற்றி எதிர்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும், விடுதலைப் போராட்ட வீரர்களை கவுரவிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடும், மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் விழா எடுக்க உத்தரவிட்டார். அதேபோல் ரூபாய் 31 இலட்சம் ஒதுக்கீடு செய்து மணிமண்டபம் கட்டவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனை கொங்குமண்டலம் நன்றியுடன் நினைவுகூர்கின்றது. நல்லவர்களின் பெயர்களை உலகறிய நடவடிக்கை எடுத்துவருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தீரன் சின்னமலைக் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, அவரது பெருமையை வெளிக்கொணர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த நேரத்தில் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்" என்று குறிப்பிட்டார். மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் தனது உரையில், "தீரன் சின்னமலைக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடுவதோடு இந்தியா-பாகிஸ்தான் சண்டையின்போது, லால்பகதூர் சாஸ்திரியிடம் தனது தங்க நகைகளை கொடுத்தார்கள். இப்படி வரலாற்று நிகழ்வுகளுக்கு முன்மாதிரியாக இருந்துள்ளார்கள்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பா.வளர்மதி அவர்கள் தமது உரையில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தீரன் சின்னமலையின் பெருமை போற்றப்படவேண்டும் என்ற எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார். சமூக ஒற்றுமைக்காக மக்களிடையே, ஜாதி, மதம் பார்க்காமல் போராடியவர் தீரன் சின்னமலை. அந்த வகையில் சமூக ஒற்றுமைக்காக மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில், தீரன் சின்னமலை பிறந்த நாள் விழாவில்கூட, அனைத்து



தரப்பினரையும் கலந்துகொள்ள வழிவகுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீரன் சின்னமலை போலவே, வீரமும், விவேகமும், தியாகமும் உள்ளவராகத் திகழ்கிறார்" என்று கூறினார்.

மட்டுமின்றி, ரூ.31 இலட்சம் மதிப்பில் அந்த மாவீரனுக்கு மணிமண்டபம் கட்டவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.அன்வர்ராஜா அவர்கள், தனது உரையில், "தீரன் சின்னமலையின் வரலாற்றினை மக்கள் அறியவும், அந்த மாவீரனின் புகழொளி, தமிழகம் எங்கும் பரவிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த விழாவின் மூலம் வழி வகுத்துள்ளார்கள். வெள்ளையனை எதிர்த்து போர்புரிந்த ஐதர் அலி, திப்புசுல்தான், தீரன் சின்னமலை போன்றவர்களின் வரலாறுகள் இருட்டடிப்பு செய்யப்பட்டது. திப்புசுல்தானிடம் படைத்தளபதியாக இருந்தவர் தீரன் சின்னமலை. தீரன் சின்னமலைப் பற்றியும் திரைப்படம் எடுக்கப்படவேண்டும். முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியா-சீனா சண்டையின்போது ரூ.75,000-க்கான காசோலையை வழங்கினார். அதேபோல நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும்

மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு. செ.செம்மலை அவர்கள் தமது உரையில், "ஒவ்வொரு மண்ணுக்கும் ஒரு பெருமை உண்டு. அதுபோல கொங்கு மண்ணுக்கு தீரன் சின்னமலையின் தியாகம் பெருமை சேர்த்துள்ளது. தீரன் சின்னமலை வீரன் மட்டுமல்ல. அவர் ஒரு தீர்க்கதரிசி. சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டவர். அவருக்கு, தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தீர்க்க தரிசியாக ஒப்பற்ற முதலமைச்சர் அவர்கள் விழா எடுத்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஆங்கிலேயர்களை இந்தியாவில் நுழையவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் ஆட்சியைப் பிடித்துக் கொள்வார்கள் என்று கருதித்தான் அப்போதே ஆங்கிலேயர்களை எதிர்த்து தீரன் சின்னமலை அவர்கள்

போரிட்டுள்ளார். தீரன் சின்னமலையின் புகழ் என்றென்றும் வரலாற்றில் நிலைத்திடவேண்டும் என்ற எண்ணத்தோடுதான், அரசின் சார்பில் விழா நடத்த தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்" எனக் குறிப்பிட்டார்.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.செ.ம. வேலுசாமி அவர்கள் தனது உரையில், "மனிதநேயமிக்க முதலமைச்சர் இந்த விழாவை நடத்த உத்தரவிட்டு, கொங்கு சமுதாய மக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்" என்று கூறினார். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.ப.வெ.தாமோதிரன் அவர்கள், தனது உரையில், "தீரன் சின்னமலை ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்" என்று கூறினார்.




தீரன் சின்னமலை அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்த மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள், "நிமிர்ந்த நன்நடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத ஞானச்செருக்கும் கொண்ட, வீரப் பெண்ணாய், மகாகவி பாரதியின் கருத்துக்கு எடுத்துக்காட்டாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார். அவர் வெற்றியைத் தவிர வேறு எதையும் கண்டறியாதவர். அப்படிப்பட்ட முதலமைச்சர் வெற்றிவீரன் தீரன் சின்னமலைக்கு விழா எடுத்து சாதனை படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, காயிதே மில்லத் மணிமண்டபத்தை ரூ.58.69 இலட்சம் செலவில் அமைத்துள்ளது. சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் நினைவாக ரூ.75 இலட்சம் செலவில் மணிமண்டபம் ஒன்றையும், மருதுபாண்டியர் நினைவிடத்தில் ரூ.5.40 இலட்சம் செலவில் மருதுபாண்டியர் சகோதரர்களின் முழு உருவச் சிலையும் நிறுவிட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் ரூ.38.50 இலட்சம் செலவில் அருங்காட்சியகம் அமைக்கவும், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.57 இலட்சம் மதிப்பில் பல்நோக்கு அரங்கம் அமைத்திடவும், உமறுப்புலவர் மணிமண்டபத்தை ரூ.23 இலட்சம் செலவில் சீரமைக்கவும், தருமபுரியில் அதியமான் கோட்டை அமைக்கவும், ஓடாநிலையில் தீரன் சின்னமலை நினைவாக மணி மண்டபம் ரூ.31 இலட்சம் மதிப்பில் அமைக்கவும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்". என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவிற்கு வந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

- எம்.ஆர்.லிங்கம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

# மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கென்று தனி இணைய தளம்





கிராமப்புற வளர்ச்சியில், குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உருவாக்கிய இணையற்ற திட்டம் தான், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம். ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானம் ஆக உயர வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும் என்ற இலட்சியத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1992–ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அன்றைக்கு இட்ட விதை, இன்றைக்கு ஆலமரமென விரிந்து பரந்து 22,44,935 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட, 1,31,749 குழுக்கள் உருவாகியுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்கள் கைவினைப் பொருட்கள் தயாரித்தல், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல், இயற்கைநாரினாலான பொருட்களைத் தயாரித்தல், கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்தல், கணினி சார்ந்த மற்றும் பிற சேவைப் பணிகளில் ஈடுபடுதல், மூலிகைச் செடிகளைப் பயிரிடுதல், பால் பண்ணை நடத்துதல் முதலான வேளாண் சார்ந்த தொழில்களையும், வேளாண் சாராத தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தற்போது உள்ளூர் அளவில் மட்டுமே விற்கப்பட்டு வருகின்றன. அதனால், உற்பத்திப் பொருட்களுக்கு போதுமான விலை கிடைக்கப் பெறுவதில்லை. பிற மாவட்டங்களுக்குச் சென்றோ, பிற மாநிலங்களுக்குச் சென்றோ இவற்றை விற்பனை செய்வதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதிய வாய்ப்பு வசதிகள் கிடையாது. இதனை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் துணையோடு தமிழ்நாட்டின் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை உலகம் முழுவதும் விற்பனை செய்வதற்கு ஏதுவாக புதிய இணைய தளம் ஒன்றினை உருவாக்கிட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப தமிழகத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் பற்றி இந்திய அளவில் மட்டுமன்றி சர்வதேச அளவில் விளம்பரப்படுத்தி, உலகில் எந்த மூலையில் உள்ளவர்களும் அவர்கள் வசிக்கும் பகுதியில் இருந்தபடியே இந்த உற்பத்திப் பொருட்களை வாங்குவதற்கு ஏற்ற வகையில் புதிய இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு, 14.7.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி

வைத்தார். இதன் முகவரி : www.ruralbazar.tn.gov.in ஆகும்.

இந்த இணைய தளத்தில் மாவட்ட வாரியாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் 723 வகையான பொருட்களின் விவரங்கள், அப்பொருட்கள் மக்களுக்கு எப்படிச் சிறப்பாகப் பயன்படும் என்ற தகவல்கள், அப்பொருட்களின் புகைப்படங்கள், உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரங்கள், உற்பத்திப் பொருட்களின் விலைப் பட்டியல், அந்தப் பொருட்களின் தேவைக்கு எங்கு அணுக வேண்டும் என்ற முகவரி விவரங்கள், அதற்கான படிவங்கள் முதலான அனைத்து விவரங்களும் இடம் பெற்றுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டரை கிராமத்தில் பழங்குடி—இருளர் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் 6 சுய உதவிக் குழுக்கள் அமைத்துள்ளனர். இவர்கள் தொழில் தொடங்க அரசு ரூ.1,50,000 கடன் உதவி வழங்கி உள்ளது. இந்தக் குழுக்கள் தயாரித்துள்ள பதப்படுத்தப்பட்ட செம்பருத்தி மற்றும் ஆவாரம்பூ ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட மூலிகை டீ தூளை, இந்த நிகழ்வின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விலைக்கு வாங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ரானேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திருமதி. சாந்தா ஷீலா நாயர்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. எஸ். அய்யர், இ.ஆ.ப.,ஆகியோர் பங்கேற்றனர்.

• • •

## சொல் வங்கிக்கு புதிய சொற்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் 'சொல்வங்கி திட்டம் தோற்றுவிக்கப் பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழறிஞர்களின் ஆய்வுக்குட்பட்டு புதிய புதிய சொற்களை உருவாக்கி, வழக்கில் கொண்டு வருவதே 'சொல்வங்கி' திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதன்படி, தமிழில் வழங்கிவரும் பிற மொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ளவும், பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய கணிப்பொறி காலத்திற்கேற்ப புதுப்பித்துக் கொள்ளவும், அன்றாடம் மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவும் மாதம் ஒரு முறை பல்துறை வல்லுநர்கள் கூடிக் கலந்தாலோசித்து புதிய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

சொல்வங்கிக் குழுவின் பத்தாவது கலந்தாய்வுக் கூட்டம் அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் நடைபெற்றது.

புதிதாக கண்டறிப்பட்ட 15 சொற்கள் குறித்த விவரம் இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அந்த புதிய சொற்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1. Boarding Point | பயண முனை / பயணி ஏறுமிடம் |
| 2. Pay Channel | கட்டண தடக்காட்சி |
| 3. Campaign | கள வினை |
| 4. Conditional Access System | தகவமை அணுகுமுறை |
| 5. Dead Storage | பயனில் தேக்கம் |
| 6. F M | பண்பலை |
| 7. Globalization | புவிமயமாக்கம் |
| 8. On line trading | இணைவழி வணிகம் / நிகழ்நிலை வணிகம் |
| 9. Oxidation Pond | உயிர்வளி ஊட்டுகுளம் |
| 10.Resume | தன் திறன் தொகுப்பு |
| 11.Role Model | எடுத்துக் காட்டு ஏந்தல் / நன் மாதிரியர் |
| 12.Set top box | தெரிவு அலைப் பேழை |
| 13 Tan - car Lorry | நீள் கலச்சுமையுந்து |
| 14.Tele health Technology | தொலைதூர நல் வாழ்வுத் தொழில் நுட்பம் |
| 15.V C D (Video Compact Disc) | காணொலி செறிவு வட்டு ★ |



# மாநில திட்டக்குழுவின் புதிய இணையதளம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.7.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள திட்டங்கள் முதலானவற்றை அறியும் வகையில், உருவாக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்கள். இந்த இணைய தளத்தின் முகவரி www.tn.gov.in.\spc. ஆகும்.

தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக முக்கியத் திட்டமிடும் பணிகளை மேற்கொள்ளும் மாநிலத் திட்டக் குழுவுக்கென இந்த புதிய இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு அடைந்துள்ள பரிணாம வளர்ச்சி, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (அதாவது 2002 முதல் 2007 வரை) இடம் பெற்றுள்ள திட்டங்கள், தமிழ்நாட்டுக்கான முதல் மனிதவள மேம்பாட்டு அறிக்கை குறித்த கண்ணோட்டம் ஆகியவை, இந்த இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன. மாநிலத் திட்டக் குழுவின் இந்த இணையதளத்துடன், மத்தியத் திட்டக் குழுவின் இணையதளம் இணைக்கப் பட்டுள்ளது.

திட்டமிடுவோர், கல்வியாளர்கள், ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றிற்குத் திட்டம் குறித்த விவரங்கள், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் 2002–2003க்கான ஆண்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான அணுகுமுறை மற்றும் வழிமுறைகள் குறித்த விவரங்கள், தமிழ்நாட்டின் மனித வள மேம்பாட்டின் பல்வேறு நிலைகள் ஆகியவை குறித்து அறிந்து கொள்ள, இந்த இணையதளம் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இந்த இணையதள தொடக்க நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன், தலைமைச் செயலர் திருமதி லக்ஷ்மி ப்ரானேஷ், இ.ஆ.ப., மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலர் திரு. பி.ஆர். பிந்து மாதவன், இ.ஆ.ப., திரு. மௌரிஸ் டிவுல்ஃப் (Mr. Maurice Dewulf), Senior Deputy Representative, UNDP, டாக்டர் சீதா பிரபு, Head, Human Development Resource Cell, UNDP, திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் திரு. நரேஷ் குப்தா, இ.ஆ.ப., மற்றும் திட்டக் குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

★ ★ ★



மழைநீர் சேகரிப்போம் மனிதநேயம் வளர்ப்போம்

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் வரலாறு படைக்கும் மின்சாரத்துறை

புதுடெல்லியில் **12–6–2003** அன்று நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு
மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்துறை அமைச்சர்
திரு. **டி. ஜெயக்குமார்** அவர்கள் ஆற்றிய உரை



“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு எரிசக்தி நிர்வாகமும் இந்தியாவிலேயே முன்னிலையில் உள்ளது. மின்சாரத்தைப் பயன்படுத்தும் பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சேவைகள் வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படவில்லை. இவற்றிற்கெல்லாம் முக்கியமான காரணம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையே ஆகும். வளர்ந்து வரும் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெருந்துணை புரிவது மின்சாரமேயாகும். தேவையான மின்சக்தி இருந்தால் மட்டுமே, எந்த வளரும் நாட்டிலும் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்.

தற்போது நாடு முழுவதும் உள்ள பயனீட்டாளர்களுக்கு தரமான மின்சாரத்தை நியாயமான விலையில் வழங்குவது, வளர்ந்து வரும் மின் தட்டுப்பாடு ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எல்லோரும் நன்கு அறிவோம்.

இதனைத் தடுப்பதற்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பது மற்றும் மின் விநியோகத்தில் சீர்திருத்தங்களை விரிவான வகையில் செய்வது. பல்வேறு சிக்கலானப் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ள நிலையிலும் தமிழ்நாடு எரிசக்தித்துறை 2012–ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் மின்சாரம் என்ற கொள்கையோடு செயல்பட்டு வருகிறது. உற்பத்தித் திறனை அதிகரிப்பது ஏற்கெனவே உள்ள உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது மற்றும் மின்சாரத்தை எடுத்துச் செல்லும் முறைகள் மற்றும் விநியோகத்தை சீரமைப்பது ஆகியவை அடங்கும்.

எரிசக்தி பாதுகாப்பு, முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டங்களில் முக்கியமானதாகும். இந்த நேரத்தில் தமிழகத்தில் வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்பு குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். 1992–ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமப்புற வருவாய் கிராமங்களிலும் 100% மின் இணைப்பு கொடுத்துள்ளது. தற்போது தமிழகத்தின் அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு என்ற இலட்சியத்தை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

## தடையற்ற மின் விநியோகம்

2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் உள்ள 1.44 கோடி வீடுகளில் தற்போது 1.15 கோடி வீடுகள் ஏற்கெனவே மின் இணைப்பு பெற்றுள்ளன. முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு, 10 ஆவது திட்டக்கால இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிடும் என்பதில் உறுதியாக உள்ளது.

தற்போது தமிழகத்தில் மின் விநியோகம் தடை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தற்போது தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. கோடைகாலத்தில் கூட மாநிலம் முழுவதும் தடையற்ற மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்துள்ளது.



மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளுக்கும் மற்ற அனைத்து பயனீட்டாளர்களுக்கும் தரமான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான மின்துறையில் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் விளைவாகவும் மின்சார கட்டணத்தை ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவுரைக்கேற்ப மாற்றியமைத்ததாலும்தான் இதனைச் செயல்படுத்த முடிந்தது.

தமிழகத்தின் மொத்த மின் உற்பத்தித் திறன் 8249 மெகா வாட். இதில் மாநில மின் வாரியத்தின் பங்கு 5288 மெகா வாட், மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் பங்கு 1903 மெகா வாட், தனியார் துறையின் பங்கு 1058 மெகா வாட் ஆகும். மேலும் 990 மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் மாநில மின்வாரியத்திற்கு 19 மெகா வாட் உற்பத்தியும், மீதமுள்ளவற்றை தனியாரும் உற்பத்தி செய்கின்றன. தமிழகத்தில் அதிகபட்ச, மின்சாரப் பற்றாக்குறை 6960 மெகா வாட். தற்போது நாள் ஒன்றுக்கு மின் உபயோகம் 140 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட கால சூழ்நிலையால் போதுமான அளவு மழை பெய்யாத காரணத்தினால் மாநிலத்தில் உள்ள நீர் பிடிப்புப் பகுதிகளில் போதுமான அளவு நீர் வரத்தின்மையாலும், நீர் மின் உற்பத்தி போதுமானதாக அமையவில்லை. கடுமையான வறட்சி, மாநிலம் முழுவதும் இருந்த நிலையிலும் மாநிலத்தில் மின்சார விநியோகம் திறமையான வகையில் நிருவகிக்கப்பட்டு எந்தவித இடையூறும் இன்றி வழங்கப்பட்டது.

## மின் உற்பத்தி உயர்வுக்கு நடவடிக்கை

தேவையை கருதி விநியோகம், புனல் மின் உற்பத்தி பயன்பாட்டு நிர்வாகம், மின் கட்டண சீரமைப்பு விநியோகம் மற்றும் உயர்ந்தபட்ச கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் தான் மேற்கூறிய செயல்திறனை அடைய முடிந்தது. தமிழகத்தில் மின் உற்பத்தி அதிகரிப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிக் கூற விழைகிறேன்.

பெருகி வரும் மின்தட்டுப்பாட்டை எதிர்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் அடுத்த 5 ஆண்டுகளில் (2002–2007) உற்பத்தி அளவை மாநில மின்துறை, மத்திய எரிசக்தித்துறை, தனியார் துறை மற்றும் கூட்டு முயற்சிகளின் உதவிகளுடன் 2631 மெகா வாட் அளவிற்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மாநில மின் வாரியத்தின் செயல்பாட்டின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டம் கடந்த மார்ச் 13–ந் தேதி துவங்கப்பட்டுள்ளது. அதே போன்று குத்தாலத்தில் 101 மெகா வாட் திறன் கொண்ட எரிவாயு அடிப்படையிலான மின் திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படத் துவங்கும்.

மேலும் 150 மெகா வாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி கட்ட புனல் மின் திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படத் துவங்கும். இது தவிர தலா 30 மெகா வாட் திறன் கொண்ட பவானி கட்டளை புனல் மின் திட்டம்–1 2003–2004–ஆம் ஆண்டும், இரண்டாவது பிரிவு 2004–2005–லும், மூன்றாவது பிரிவு 2005–2006–லும் உற்பத்தியைத் துவங்கும்.

தனியார் துறையில் 2002–2003–ஆம் ஆண்டில் எஸ்டி–சிஎம்எஸ் மின்சார நிறுவனம் மூலம் 209 மெகா வாட் உற்பத்தி திறன் கொண்ட நிலக்கரிஅடிப்படையிலான திட்டம் துவக்கப்படும். ஆர்.கே.எரிசக்தி நிறுவனத்தின் எரிவாயு அடிப்படையிலான 53 மெகா வாட் உற்பத்தி திறன் கொண்ட திட்டம் 2003 – 2004 – ஆம் ஆண்டு உற்பத்தியை துவக்கும்.

அதே போன்று ஆபான் எரிசக்தி நிறுவனம் எரிவாயு அடிப்படையிலான 103 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டம் 2004–2005–ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும். மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் பங்களிப்பு என்ற வகையில் 250 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் நெய்வேலி டிஎஸ்–1, வணிகப் பயன்பாட்டிற்கு 2003–2004–ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

இதிலிருந்து தமிழகத்தின் பங்காக 203 மெகா வாட் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 500 மெகா வாட் திறன் கொண்ட நான்கு பிரிவுகளை கொண்ட தல்சேர் சூப்பர் அனல் உற்பத்தி நிலையத்தின் இரண்டு பிரிவுகள் 2003–2004–ஆம் ஆண்டிலும் மற்ற இரண்டு பிரிவுகளும் 2004–2005–ஆம் ஆண்டிலும் உற்பத்தியைத் துவங்கும். இதிலிருந்து தமிழகத்திற்கு 540 மெகாவாட் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கிடைக்கிறது.

மேலும் மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்தின் பங்காக ராம குண்டம் சிறப்பு அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திலிருந்து 118 மெகாவாட்டும், நெய்வேலி டி.எஸ்.–2 உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தியிலிருந்து 325 மெகா வாட்டும், கைகா அணுமின் நிலையம் நிலை 2–லிருந்து உற்பத்தி செய்யப்படும் மினசாரத்திலிருந்து 103 மெகாவாட்டும் கிடைக்கும்.

## வடசென்னையில் 1,000 மெகா வாட் மின் நிலையம்

இந்த திட்டங்கள் எல்லாம் 10–வது ஐந்து ஆண்டு திட்ட இறுதிக்குள் உற்பத்தியைத் துவக்கும். கூட்டு முயற்சியின் அடிப்படையில் கடந்த 12.7.2002–இல் முதல்வர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசு தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து வட சென்னையில் 1000 மெகா வாட் உற்பத்தி திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 19-6-2002 நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

2000 மெகா வாட் திறன் கொண்ட கூடாங்குளம் அணுமின் நிலையத் திட்டப் பணிகளை சரியான நேரத்தில் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திற்கு 1200 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

மாநில மின்வாரியத்தின் மூலம் 436 மெகா வாட்டும், தனியார் துறையின் மூலம் 406 மெகா வாட்டும், மத்திய எரிசக்தி துறையின் மூலம்1289 மெகா வாட்டும், கூட்டு முயற்சியின் அடிப்படையில் 500 மெகா வாட்டும் ஆக மொத்தம் 2631 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தித் திறனை 10-வது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் செயல்படுத்துவது எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் மின் உற்பத்தி அளவை அதிகரிப்பதற்காக 807 மெகா வாட்டும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் (2002-2003) 345 மெகா வாட்டாக இருந்தது. மாநிலத்தின் பொருளாதார நிலைமை, மின்சார விநியோகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட சீர்திருத்தங்களுக்குப் பின்னர் முன்னேறி உள்ளது.

மத்திய அரசு அறிமுகப் படுத்திய ஒருங்கிணைந்த மின் வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத் திட்டம் இதற்கு உதவியது. மத்திய அரசும் மாநில அரசுகளும் மின்சாரத்துறையில் இலட்சியத்தை அடைய கீழ்க்கண்ட துறையில் அதாவது எரிசக்தி கணக்கீடு, மின்சார மாற்று மற்றும் விநியோக விரையத்தை தடுத்தல், பயனீட்டாளர்களுக்கு 100 சதவீதம் மீட்டர் பொருத்துதல் மற்றும் பயனீட்டாளர்களின் திருப்தி ஆகியவை இதில் அடங்கும்.

### ரூ.977 கோடியில் திட்டங்கள்

மின் விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் சென்னை மின் விநியோக வட்டத்தில் 4 திட்டங்கள் நகர்ப்புற மின் விநியோக வட்டங்களில் 5 திட்டங்கள் மற்ற மின் விநியோக வட்டங்களில் 9 திட்டங்கள் உட்பட 25 மேம்பாட்டு திட்டங்கள் ரூ.977 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைச் செயல்படுத்துவதற்கு இரண்டு ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதாவது 31.3.2005-க்குள் இப்பணிகள் நிறைவடையும். மத்திய அரசு இதற்காக ரூ.112 கோடியையும் மானியமாக வழங்கியுள்ளது. மற்றும் பிராந்திய மின்சார குழு இதற்காக ரூ.122 கோடி கடன் வழங்கியுள்ளது. 31.3.2003 வரை இப்பணிகளுக்காக ரூ.113.28 கோடி இப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2003-2004 நிதியாண்டில் இப்பணிகளுக்காக சென்னை மாநகரத்திற்குட்பட்ட இடங்களுக்கு ரூ.300 கோடியும், 19 நகர்ப்புறங்களுக்கு ரூ.155.5 கோடியும், கிராமப்புறங்களுக்கு ரூ.155 கோடியும் ஆக மொத்தம் ரூ.610.5 கோடி செலவிடப்படுகிறது.

தற்போது இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகளைச் சிறப்பான வகையில் செயல்படுத்துவதன் மூலம் இந்த திட்டங்களின் மூலமும் விநியோகத்தில் முன்னேற்றம் பெறுவதோடு தொழில்நுட்ப இழப்பீடுகளைத் தவிர்த்து சீரான மின் விநியோகம் தேவையான மின்சக்தி கையிருப்பு மற்றும் தரமான மின்விநியோகம் ஆகியவற்றை பயனீட்டாளர்களுக்கு வழங்க தமிழ்நாட்டால் இயலும்.

> “முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு, 10ஆவது திட்டக்கால இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிடும் என்பதில் உறுதியாக உள்ளது.”

மாநில மின்சார துறையில் செய்யப்பட்ட சீர்திருத்தம் மிக நீண்ட ஆலோசனைகளுக்குப் பின்னால் வணிக ரீதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. இது 10-வது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் மாநில மின் வாரியம் வர்த்தக ரீதியாக எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ளும் வகையில் வளர்ச்சி அடையும். தமிழ்நாடு மின் வாரியத்தின் வளர்ச்சிக்கு வணிக ரீதியாக எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் கடந்த 15.3.2003 அன்று புதிய கட்டண வீதங்களை அறிவித்து அது 16.3.2003 முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்த புதிய கட்டண வரி விகிதங்களினால் கிடைத்த வருமானத்தின் மூலம் 2003-2004-ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினங்களில் ரூ.234 கோடி உபரியாக கிடைத்ததுடன் மொத்த நிகர முதலீட்டில் 3 சதவீதத்திற்கு வருவாய் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு மின் வாரியம் கடந்த காலங்களில் அதிக வட்டிக்கு வாங்கிய கடன்களை தற்போது குறைந்த வட்டிக்கு கடன் வாங்கியுள்ளது. இதன் மூலம் தமிழக மின் வாரியம் செலுத்தும் வட்டி விகிதம் குறைந்துள்ளது. இது கடந்த 3 முதல் 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய வட்டியின் அளவை விட குறைவானதாகும்.

**❝ தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மின் உற்பத்தியை அதிகரித்தல், விநியோகம், சீர்திருத்தம் மற்றும் வர்த்தக ரீதியில் மின்சாரத்தை பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ❞**

தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கியதன் மூலம் அவர்களுடைய உற்பத்தித் திறனை அதிகரித்து மின் வாரியத்திற்கு ஆகும் செலவைக் குறைத்துள்ளனர். பழைய உற்பத்தி நிலையங்களைப் புதுப்பித்து நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அதனுடைய உற்பத்திச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் கணக்குகளை நெறிமுறைப்படுத்தி கட்டணங்களை வசூலிப்பதில் அதிக அளவு அக்கறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயர் மின்சாரத்தைப் பயன்படுத்தும் பயனீட்டாளர்களின் பட்டியல் ஆன்லைன் கணினி மூலம் பட்டியலிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களைக் கண்காணிக்கவும் கட்டணங்களை முறைப்படுத்தவும், வசூலிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களை கணினி மூலம் பட்டியலிடப்பட்டுள்ளனர். நகர்ப்புறங்களில் இப்பணி பெரும்பாலும் முடிவடைந்த நிலையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துப் பகுதிகளும் கணினி மூலம் கட்டணங்கள் குறித்த தகவல்களை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உயர்ந்த தரம் கொண்டு எலக்ட்ரோ மெக்கானிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் மீட்டர்கள் ஆகியவை தற்போதுள்ள மீட்டர்களுக்குப் பதிலாகப் பொருத்தப்பட்டு மிகத்துல்லியமான வருவாயைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த காலத்தில் மின்சார கட்டணத்தைச் செலுத்தாத பயனீட்டாளர்களிடம் 100 சதவீதம் மின் விநியோகத்தை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மூலம் கடந்த 16.3.2003 நடைமுறைப்படுத்தப்பட்ட மின் விநியோக கட்டணங்களிலிருந்து விவசாயம் மற்றும் குடிசை வாசிகளுக்கு மானியங்களின் மூலம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### திட்டத்தை இணைந்து செயல்படுத்த உதவும்

தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மின் உற்பத்தியை அதிகரித்தல், விநியோகம், சீர்திருத்தம் மற்றும் வர்த்தக ரீதியில் மின்சாரத்தை பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய செயல்பாடுகளை இந்த மாநாட்டில் பகிர்ந்து கொண்டதின் காரணம் எந்தத் துறைகளில் எங்களுக்கு உதவ முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், தேவைப்படும் துறைகளில் எங்களோடு இணைந்து திட்டங்களை செயல்படுத்துவதற்கும், வளங்களைப் பயன்படுத்துவதற்கும் உதவும் என்பதன் அடிப்படையில் இங்கு தமிழகத்தின் மின்சாரத்துறைகளின் செயல்பாடுகளைத் தெரிவித்தேன்.

தமிழகத்தில் பெருகி வரும் எரிசக்தி தட்டுப்பாட்டை எதிர் கொள்ளும் வகையில் மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசும் மத்திய மின்சாரத் துறையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடாங்குளத்தில் அமைய உள்ள 3 மற்றும் 4–வது 1000 மெகா வாட் மின் உற்பத்தி நிலைய வளாகத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளையும் செய்து தருவதன் மூலம் மேலும் 4 பிரிவுகளைத் துவக்க உறுதுணையாக அமையும்.

### எரிவாயு மின் உற்பத்திக்கு அனுமதி தாமதம்

மேலும் மாநில மின் வாரியத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்தில் 100 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டத்திற்கு எரிவாயு வழங்குவது குறித்து இன்னும் மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் அனுமதி வழங்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

மத்திய எரிசக்தித்துறை அமைச்சகமும், மத்திய அரசும் இப்பிரச்சனையில் உடனடியாக தலையிட்டு அத்திட்டத்திற்குத் தேவையான எரிவாயுவை வழங்குவதற்கும் விரைவில் அத்திட்டம் செயல்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழகம் மின் பயன்பாட்டிலும் பல்வேறு சாதனைகளை வரலாற்றில் வருங்காலத்தில் முத்திரையைப் பதிக்கும் என்று உறுதிபடத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்".

• • •

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மழைநீர் சேகரிப்புத் திட்டம்




மழைநீர் சேகரிப்புத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் தோன்றி, சீரிய முறையில் செயல் வடிவம் பெறும் சிறப்பானத் திட்டமாகும். வறட்சிக் காலத்தில் தோன்றக்கூடிய தண்ணீர் தேவையைச் சமாளிக்க, மழைக் காலங்களில் கிடைக்கின்ற தண்ணீரைச் சேமிப்பது மனித சமூகத்தின் இன்றியமையாத கடமையாகும்.

மழைநீர் சேகரிப்பது என்பது அரசின் திட்டம் என்ற வகையில் செயல்படுத்தப்படுவதோடு அது ஒரு மக்கள் இயக்கமாக மலரவேண்டும் என்பது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும்.

மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணத்திற்கு வண்ண வடிவம் தரும் வகையில் பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச. நடராஜன், இ.ஆ.ப., தலைமையில் நிருவாக இயந்திரம் முடிக்கிவிடப்பட்டு முழுமூச்சில் செயல்பட்டு வருகிறது. முதற்கட்டமாக அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்ற மழைநீர் சேகரிப்புத் திட்ட முனைப்புக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடத்தப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் இல்லங்களில், முன்னுதாரணமாக, மழைநீர் சேகரிப்பு அமைப்பு உருவாக்கும் பணிகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை பெரம்பலூர் மாவட்டத்தில் முழுமையாகச் செயல்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அனைத்துத் துறை தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி இம்மாவட்டத்தில் பணியாற்றும் 12,000 அரசு ஊழியர்களின் இல்லங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அதைப்போன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களும் தங்கள் இல்லங்களில் இத்தகைய மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு அலுவலர் பொறுப்பு அமர்த்தப்பட்டு, இப்பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மாவட்ட நிருவாகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த அலுவலர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கிராமங்களில் ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி முதல் முகாமிட்டு ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப்பணி குறித்து மக்களிடையே விழிப்புணர்வினைத் தோற்றுவித்து, மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்கும் பணியினை விரைவுபடுத்தி வருகிறார்கள்.

மேலும், 4 ஊராட்சிகளுக்கு ஒருவர் வீதம் மண்டல அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு, இப்பணியினை மேற்பார்வையிட மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள 3.19 இலட்சம் வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு பணிகளை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் மழைநீர் சேகரிப்புக் குறித்த விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப் பட்டுள்ளன.



மதிப்பீட்டில் 400 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

மேலும், மழைநீர் சேகரிப்பு நீர்நிலைகளை புதிதாக அமைத்திட செயற்கைகோள் ரிமோட்சென்ஸ் மூலம் 24 இடங்கள் கண்டறியப்பட்டு, ரூ.44.77 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணைகள், கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

"வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் தூர்ந்துபோன 100 கிணறுகளை ரூ.20 இலட்சம் செலவில் தூர்வாரி சீரமைத்து, மழைநீர் சேகரிப்புக்கு பயன்படுத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையனைத்தும் மழைநீர் சேகரிப்புக்கு பெரிதும் துணைபுரியும்" என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.நடராஜன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

"வறட்சி மிகுந்த பெரம்பலூர் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நிறைவேற்றிட பொதுமக்கள் ஆர்வத்துடன் முன்வந்து தங்களது வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைத்து வருகிறார்கள்" என்றும் "மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திட ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக



முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் தங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்" என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

மழைநீர் சேகரிப்புப் பணிகளை எளிய முறையில் மேற்கொள்வது குறித்து படித்த இளைஞர்களுக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் மூலம் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டு, இத்தகைய தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற இளைஞர்கள், ஊராட்சி வாரியாக பணியமர்த்தப்பட்டு, அனைத்து இல்லங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 9 பேரூராட்சிகளில் பெரம்பலூர் பேரூராட்சியில் 95 சதவிகித வீடுகளில் இதுவரை மழைநீர் சேகரிப்பு பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 8 பேரூராட்சிகளில் 50 சதவிகித வீடுகளில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளில் இந்த வசதியினை உருவாக்கப் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை உருவாக்க ரூ.1 கோடி செலவில் திட்டத்தினை செயல்படுத்த திட்டமிட்டு, இதுவரை 2,102 அரசு கட்டடங்களிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டத்திலுள்ள அனைத்து ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு, வரத்து வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள 10 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 363 பணிகள் ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.1.20 கோடி

ஆண்டுகள் பலவாக வறட்சி சூழலால் தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதிப்பட்ட பெரம்பலூர் மாவட்ட மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினைக் "கருணைமிக்க முதலமைச்சரின் அருட்கொடை"யாகக் கருதி, போற்றி மகிழ்வதுடன், அத்திட்டத்தின் வெற்றியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

**த. மருதப்பிள்ளை,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**பெரம்பலூர் மாவட்டம்.**

# தமிழ்நாட்டின் மாங்கனி உற்பத்தியில் தருமபுரி மாவட்டத்திற்கு முதலிடம்

தருமபுரி மாவட்டம் என்றாலே மாங்கனிதான் நினைவுக்கு வரும். சேலத்து மாம்பழம் என்று நாம் கூறி பெருமை கொள்வதெல்லாம் தருமபுரி மாவட்டத்தில் விளைகின்ற மாம்பழத்தைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களில் மா, பலா, வாழை ஆகியவை முக்கனிகள் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. மாங்கனி பழங்களின் அரசன் என்று அழைக்கப்படுகிறது. மங்கலத்தின் அறிகுறியாக மாவிலைத் தோரணங்கள் கட்டி மகிழ்கின்றோம். மாம்பிஞ்சுகளும், மாங்காய்களும் ஊறுகாயாக சுவை தருகின்றன. மாவிற்கு மருத்துவ குணமும் உண்டு. சர்க்கரைச்சத்து, வைட்டமின் சத்துக்கள், தாதுக்கள் நிரம்பிய மாம்பழங்களிலிருந்து பழச்சாறும், பழப்பாகும் தயாரிக்கப் படுகின்றன. மாம்பலகைகள், கதவுகள், சன்னல்கள், நாற்காலி, மேசை போன்றவைகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

மா உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது. தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டிலே மாம்பழ உற்பத்தில் முதலிடம் வகிக்கிறது.

இம்மாவட்டத்தில் நிலவும் உயர் வெப்ப நிலையும், கிடைக்கும் மழை அளவும், நிலத்தின் தன்மையும் மா சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. இம்மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 857.0 மில்லி மீட்டராகும். கிடைக்கும் மழையைப் பயன்படுத்தி நல்ல வருவாய் கிடைக்கவும், சுற்றுப்புறச் சூழல் நன்கு அமையவும் ஏற்ற பணப்பயிராக விளங்குவது 'மா' மட்டுமே.

தற்போது இம்மாவட்டத்தில் சுமார் 37,732 எக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டு சுமார் 3,60,000 டன்கள் மாங்கனி உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் இம்மாவட்ட உழவர் பெருமக்களுக்கு சுமார் 37 கோடி ரூபாய் வருமானம் கிடைத்து வருகிறது. வெளி மாநிலங்களுக்கு மாங்கனிகளை லாரிகள் மூலம் ஏற்றுமதி செய்வதன் மூலமும், மாங்கனி வியாபாரம் மூலமாகவும் சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு மாம்பழ உற்பத்தி காலத்தில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது.

மாம்பழக்கூழ் தயாரிக்கும் 28 தனியார் தொழிற்சாலைகள் தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. மாங்கனிகள் அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்டு வருவதால் மேலும் பழம் பதனிடும் தொழிற்சாலைகள் ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் உற்பத்தியாகும் மாம்பழங்களுக்கும், மாம்பழங்களிலிருந்து தயார் செய்யப்படும் மா கூழிற்கும் ஏற்றுமதி வாய்ப்புகள் குறிப்பாக அரபு



நாடுகள், ரஷ்யா போன்ற நாடுகளில் மிகுதியாக உள்ளது.

உலகமெங்கும் மரங்கள் நட்டு சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டு வரும் இன்றைய நிலையில், மா சாகுபடியால் மாஞ்சோலைகள் உருவாகி இதனால் இம்மாவட்டத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாக்கப்படவும் மேம்பாடு அடையவும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு மா சாகுபடியை அதிகரிப்பதால் மானாவாரி உழவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதோடு மா அடிப்படையிலான தொழில்கள் பெருகி, அதன் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாகி, மாவட்ட மக்கள் பயன்



உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

இக்கண்காட்சியில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி கர்நாடகம், ஆந்திரா மாநிலங்களின் விவசாயிகளும் பங்கேற்று, அங்கெல்லாம் உற்பத்தியாகும் மாங்கனிகளை, கண்காட்சிக்கு வைத்திருந்தனர். இதன் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கும், வர்த்தகத் தொடர்பிற்கும் வாய்ப்பு தோன்றியது.

கண்காட்சியில் தொடக்கவிழா நிகழ்ச்சியில் பேசிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா.ஜீவானந்தம் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் 'மா' உற்பத்தி மற்றும் தோட்டக் கலைப்பயிர்கள், மலர்கள் உற்பத்தி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒசூரில் ரூ.24.85 கோடி செலவில் மலர் ஏற்றுமதி மண்டலம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளதை எடுத்துரைத்தார்.

அடைதல், அந்நிய செலாவணி ஈட்டுதல், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாக்க உதவுதல் ஆகிய பல்வேறு முறைகளில் மா சாகுபடி தருமபுரி மாவட்ட உழவர் பெருமக்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது.

இத்தகைய சிறப்பு மிக்க மாங்கனிக்கு தருமபுரி மாவட்டத்தில் குறிப்பாக கிருஷ்ணகிரியில் விழா நடத்தினால் சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கருதப்பட்டு 1992–ஆம் ஆண்டு முதல் மாங்கனி விழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து 11–வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரியில் 15.6.2003 அன்று துவங்கி 24.6.2003 வரை பத்து நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாங்கனி கண்காட்சியுடன், மாவட்ட சுற்றுலாப் பொருட்காட்சியும், தமிழ்நாடு அரசின் இரண்டாண்டுச் சாதனைகளை விளக்கிடும் பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியும் நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.ஜீவானந்தம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் ஆகியோர் பங்கேற்று துவக்கிவைத்து விழாப்பேருரையாற்றினார்கள். தோட்டக்கலைத்துறை இயக்குநர் திரு.கே.தனவேல், இ.ஆ.ப. அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்தறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசும்போது, தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டின் மாங்கனி உற்பத்தியில் முதலிடம் பெற்று விளங்குவதைச் சுட்டிக்காட்டினார்.

கண்காட்சியில் மத்திய அரசின் இசை, நாடகப்பிரிவு, வளர்கல்வி இயக்கம், கலை பண்பாட்டுத்துறை, கல்வித்துறை, காவல்துறை, ஆகியவற்றின் சார்பில் கண்ணைக்கவரும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நாய்கள் கண்காட்சியும் நடைபெற்றன. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் இரண்டாண்டுச் சாதனைகளை விளக்கிடும் வகையில் பல்துறை பணி விளக்கக் கண்காட்சி சிறப்புற அமைக்கப்பட்டு, அரசின் திட்டங்கள், சாதனைகள் மக்களுக்கு விளக்கப்பட்டது.

இக்காட்சியினை பல்லாயிரக்கணக்கானோர் கண்டு மகிழ்ந்தனர். அரசின் அரும்பணிகள் குறித்து விளக்கமும் விழிப்புணர்வும் பெற்றார்கள் என்றால் மிகையாகாது.

டி. செந்தில் குமார்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்.
தருமபுரி.

# திருச்சிராப்பள்ளியில் ஒரு அழகிய நீச்சல்குளம்

மத்திய மாநில அரசின் கொள்கையின் கீழ் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் நீச்சல்குளம் ஒன்று அரசால் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நகரின் மத்தியப் பகுதியான மத்திய பேருந்து நிலையம் மற்றும் இரயில்வே சந்திப்பில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காஜாமலை அண்ணா விளையாட்டு அரங்கில் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் மாவட்ட விளையாட்டரங்கக் குழு மூலம் திரட்டப்பட்ட நிதியுதவியுடன் சுமார் ரூ.80 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்ட இந்த நீச்சல்குளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10-3-2003 அன்று திருச்சிராப்பள்ளியில் திறந்து வைக்கப்பட்டது. தற்போது கட்டண அடிப்படையில் இந்நீச்சல்குளத்தை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நீச்சல் குளத்தின் நீளம் 25 மீட்டர், அகலம் 21 மீட்டர் ஆகும். மேலும் இவ்வளாகத்தில் சிறுவர், சிறுமிகளுக்கு நீச்சல் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் சிறு நீச்சல்குளம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 40 மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கலாம். மேலும் இந்நீச்சல் குளத்தைப் பராமரிக்கும் பொருட்டு ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் 15.6.2003 வரை ரூ.3 இலட்சம் வரை கட்டணத் தொகை வசூல் ஆகியுள்ளது.

தமிழகத்தில் பல மாவட்டங்களில் நீச்சல்குளம் கட்ட அரசால் அனுமதி வழங்கப்பட்ட போதிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்தான் முதன் முதலாக சிறந்த முறையில் நீச்சல்குளம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சிறப்புக்குக் காரணம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மனமுவந்து நன்கொடை வழங்கிய பெருமக்களையே சாரும்.

மேலும் இந்நீச்சல் குளத்தை சென்னையை சேர்ந்த விளையாட்டுத்துறை அலுவலர்கள் பார்வையிட்டு மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது எனவும், மாநில அளவிலான போட்டிகள் நடத்தும் அளவிற்கு உள்ளது எனவும் தெரிவித்தனர்.

நீச்சல்குளத்தில் நடைபெற்ற நன்கொடையாளர்களுக்கான பாராட்டு விழாவில் டால்மியா முழுநேர இயக்குநர் திரு.கோபால்சாமி பேசுகையில், "நான் பல வெளிநாடுகளுக்குச் சென்று வரும்போது அங்குள்ள நீச்சல் குளங்களை பார்த்திருக்கிறேன். இன்று இங்குள்ள நீச்சல்குளத்தைப் பார்க்கும் போது நாம் வெளிநாட்டில் உள்ளோமோ என்ற உணர்வு ஏற்படும் வகையில் இந்த நீச்சல்குளம் சிறப்பாக அமைந்துள்ளது" என பாராட்டிப்பேசினார்.

நீச்சல் குளத்தைப் பார்வையிட்ட கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், பள்ளிக் கல்வித்துறையின் மூலம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் நீச்சல் பயிற்சி அளிக்க முன் வந்துள்ளனர். இதே போன்று காவல் பணியாளர்களுக்கும் நீச்சல் பயிற்சி அளிக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்நீச்சல்குளத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்ட விளையாட்டு வீரர்களின் உடல் திறனை வளர்க்கவும் பொழுதுபோக்கு அம்சம் அதிகம் இல்லாத நடுத்தர மக்களுக்கு ஒரு நல்ல பொழுது போக்கு அம்சமாக அமைந்துள்ளது. இந்நீச்சல்குளத்தின் மூலம் இம்மாவட்டத்தில் திறமையான நீச்சல் வீரர்கள் / வீராங்கனைகளை உருவாக்க முடியும். இந்நீச்சல் குளம் திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.



*- கோ.பன்னீர்செல்வம்*
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்*
*திருச்சிராப்பள்ளி.*

• • •



மக்கள் இயக்கம் மழைநீர் சேகரிப்பு

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

9 மாத சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**



| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**


தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518
விழா